ISSN 0971 - 8362
THITTAM (YOJANA - TAMIL)

Published on : 25th March 2015
Posted on : 31st March 2015

Registrar of Newspapers for India No. 24495/74
"Registration" No. TN/CH©/219/2015-2017
WPP No.: TN/PMG (CCR)/WPP No.150/2015-2017


# Employment News
WEEKLY

**Looking for a good job in Govt./PSU/SSC/UPSC RRB/Armed Forces/Banks.**




Employment News is your best guide. We have remained the largest selling weekly on jobs for over 30 years. Be a part of the leader.

*Visit our website :*
*employmentnews.gov.in*

- Developed on latest technology
- Having an advanced search engine
- Specialists replying to readers' queries

**Contact nearest distributor for your copy of Employment News/Rozgar Samachar**

*For business enquiries please Contact :*
Employment News, East Block 4, Level 5, R.K. Puram, New Delhi.
Ph : 26182079, 26107405. Email : enabmsa@yahoo.com

**PUBLICATIONS DIVISION**
Ministry of Information & Broadcasting
Government of India

Cir./EN-SP-3/08


Printed & Published by Dr. Ms. Sadhana Rout Additional Director General & Head, on behalf of Publications Division, Ministry of Information and Broadcasting
and Printed at Yuvasakthi Prints Pvt. Ltd., No.2, 8th Street, Dr.Subbarayan Nagar, Kodambakkam, Chennai-600 024. Ph: 2372 4901
Published at 'A' wing Ground Floor, Shastri Bhavan, Chennai-600 006. Ph: 28272382

# திட்டம்

ஏப்ரல் 2015 வளர்ச்சிக்கான மாத இதழ் ₹ 10/-

## உற்பத்தித் துறை : வளர்ச்சி மற்றும் சவால்கள்

தேசிய நிதிக் கணக்கு குறித்த புதிய தொடர் திருத்தப்பட்ட அடிப்படைகளின்படி பார்த்தால் உற்பத்தித் துறை சிறப்பாகத் தோற்றமளிப்பது ஏன்?
– ஜித்தேந்தர் சிங்

தொழிலாளர் நல சட்டங்களும் இந்திய பொருள் உற்பத்தித் துறையும் : சீர்திருத்தங்களின் அவசியம்
– தேவஷீஸ் மித்ரா

இந்தியாவில் விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் தொடர்பான அறிவுசார் சொத்துரிமைப் பிரச்சனைகள்
– அஸ்வினி சிவால்

சிறப்புக் கட்டுரை:
தேசிய சட்ட உதவி ஆணைக் குழுவும் இலவச சட்ட உதவிகளும்
– மனோஜ்குமார் சின்ஹா



## தலையங்கம்....

## வளர்ச்சிக்குப் பெரு வாய்ப்பு

எந்த ஒரு பொருளாதாரம் ஆனாலும் அதன் முன்னேற்றத்தில் உற்பத்தித் துறை முக்கிய பங்கு வகிக்கிறது. இந்தியாவைப் போன்ற முன்னேறும் நாடுகள் பலவும் வளர்ச்சிக்கும் வேலைவாய்ப்பிற்கும் தொழில் உற்பத்தித் துறையையே பெரிதும் நம்பியுள்ளன.

பன்னெடுங்காலமாக வேளாண் மையையே பிரதானமாகக் கொண்டிருந்த இந்தியப் பொருளாதாரம் சமீபகாலமாக உற்பத்தித் துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் உண்மை பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் தற்போது உற்பத்தித் துறையின் பங்கு 16 சதவீதம். ஆனால் இதனால் வேலைவாய்ப்புக்கும் வளர்ச்சிக்கும் தற்போது உள்ளதைவிட அதிக பங்களிப்பு செய்ய முடியும். திறன் பெற்றவர்களைவிடவும் திறன் பெறாத தொழிலாளர்களே அதிகமாக இருப்பதும், கடுமையான தொழிலாளர் நலச் சட்டங்களும், தொழில்நுட்பப் புத்தாக்கங்கள் சொற்பமாக இருப்பதும் இந்த நிலைக்குக் காரணம் எனலாம்.

பலதரப்பட்ட வளங்கள், பல்வேறு படிநிலையில் திறன்பெற்ற தொழிலாளர்கள், ஆகியவற்றைக் கொண்டு சிறு மற்றும் பெருந் தொழில் நிறுவனங்களின் முக்கியத்துவத்தை நாம் புரிந்து கொள்ளலாம். வேளாண் துறைக்கு அடுத்தபடியாக, நமது பாரம்பரிய அறிவு மற்றும் திறன்களைச் சார்ந்துள்ள சிறுதொழில் நிறுவனங்களே பெருமளவு வேலைவாய்ப்புக்களை உருவாக்குகின்றன. அந்தச் சிறுதொழில் நிறுவனங்களே வறுமை ஒழிப்பிற்கும் சீரான வருவாய்ப் பகிர்வுக்கும் பெரும் காரணமாகவும் உள்ளன. அதே சமயத்தில் பெருந் தொழில் நிறுவனங்களோ வேலைவாய்ப்புக்களை அளிப்பதோடு, ஏற்றுமதியை அதிகரித்து அன்னியச் செலாவணி வரத்து அதிகரிக்கத் துணை செய்கின்றன. மேலும் உள்நாட்டுத் தயாரிப்புகளுக்கான தேவைகள் பரவலாவதற்கான அடித்தளத்தை அமைத்து, அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சிக்கும் நம் தேசத்தை இட்டுச் செல்கின்றன.

அடுத்த பத்தாண்டுகளில் நம் நாட்டின் உள்நாட்டு உற்பத்தியில், தொழில் உற்பத்தித் துறையின் பங்கினை 25 சதவீதமாக உயர்த்துவதும் கூடுதலாக பத்து கோடி பேருக்கு வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதும் நமது தேசிய உற்பத்திக் கொள்கையின் நோக்கமாகும். அத்தோடு, கிராமப்புற இளைஞர்களை வேலைவாய்ப்புக்களை பெறும் தகுதியுடையவர்களாக்கும் விதமாக அவர்களுக்கு வேண்டிய திறன் பயிற்சிகளை வழங்குவதும் தேசிய உற்பத்திக் கொள்கையின் நோக்கமாகும். மத்திய அரசின் இந்த ஆண்டுக்கான பட்ஜெட்டும், உள்நாட்டு மற்றும் சர்வதேச தொழில் நிறுவனங்கள் இந்தியாவில் மேற்கொள்ளும் உற்பத்தி முயற்சிகளுக்கு அனுகூலமான சூழலை உருவாக்கும் வகையில், அனைத்து நடவடிக்கைகளையும் எளிமைப்படுத்தி, சீரமைத்து, கணிணி மயமாக்க வகை செய்துள்ளது. இந்தியாவில் தயாரிப்போம்“ “திறன்மிகு பாரதம்“ “முத்ரா” போன்ற திட்டங்கள், தொழில் முனைவோரை ஊக்கப்படுத்தவும், உலக நாடுகளின் உற்பத்திக் கேந்திரமாக இந்தியாவை மாற்றவும் பெரிதும் துணைபுரிவன ஆகும். பிரமாதமான கட்டமைப்பு வசதிகள் இன்மை, மின்சக்தி விநியோகத்தில் உள்ள முட்டுக் கட்டைகள், தொழில்நுட்பப் புத்தாக்கங்கள் போன்ற விஷயங்களிலும் இந்த பட்ஜெட் கவனம் செலுத்தியுள்ளது.

இந்த இதழில் இடம் பெற்றுள்ள கட்டுரைகள், தொழில்துறை முன்னேற்றத்திற்காக இதுவரை அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதோடு, தொழில்துறை மேம்பாட்டுக்காக இன்னும் அரசு ஆற்ற வேண்டியவை குறித்தும் அலசுகின்றன.

நிறைவாகச் சொல்வதானால், உலக நாடுகளிலேயே மிக விரைவான பொருளாதார வளர்ச்சியைக் கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியா அடைவதற்கு, உற்பத்தித் துறையே பெரும் துணைபுரியும் எனலாம். அரசின் திட்டவட்டமான செயல்பாடுகளோடு, தொழில் துறையினரின் ஈடுபாடும் சரியான விகிதத்தில் கலக்கும்போது இந்த இலக்கு நம் வசமாகும் என்பதில் ஐயமில்லை. ●

# அம்பேத்கரின் பொன்மொழிகள்



1. வாழ்க்கை சிறந்ததாக இருக்க வேண்டுமே தவிர நீண்டதாக இருக்க வேண்டிய அவசியமில்லை

2. கணவனும் மனைவியும் நெருங்கிய நண்பர்களாக இருக்க வேண்டுமே தவிர, முதலாளி தொழிலாளி, ஆண்டான் அடிமை போல இருக்கக் கூடாது

3. தார்மீகத்திற்கும் பொருளாதாரத் திற்குமிடையே மோதல் ஏற்படுகிறபோது, பொருளாதாரமே வெல்கிறது. ஆதிக்க சக்திகள், தாமாக விரும்பி ஒரு நாளும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். வலிமையால்தான் அவர்களை வீழ்த்திட இயலும்.

4. மாமனிதன் என்பவன் பெரும் புள்ளியை விடச் சிறந்தவன், ஏனெனில் அவன் சமூகத்திற்காகப் பணியாற்ற எப்போதும் தயாராக இருப்பான்.

5. மனித வாழ்வின் நோக்கமே, மனதைப் பண்படுத்துவது தான்.

6. பெண்களின் முன்னேற்றத்தை வைத்தே, ஒரு சமூகத்தின் வளர்ச்சியை நான் கணக்கிடுவேன்.

7. விடுதலை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தை போதிக்கும் மதத்தையே நான் விரும்புகிறேன்.

8. இந்தியர்கள் இன்று இரண்டு கொள்கைகளோடு வாழ்கிறார்கள். இந்திய அரசியல் அமைப்புச் சட்டப்படி, விடுதலை, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைப் போற்ற வேண்டும் என்கிற அரசியல் கொள்கை. மற்றது, இவற்றையெல்லாம் மறுக்கும் மதக் கொள்கை.

9. ஒரு வெற்றிகரமான புரட்சிக்கு எதிர்ப்புச் சிந்தனை மட்டுமே போது மானதாகாது. நீதி பற்றிய தெளிவான மற்றும் தீர்க்கமான நம்பிக்கையும் அரசியல் மற்றும் சமூக உரிமைக்கான முக்கியத்துவமும், அத்தியாவசியமும் மிக மிகத் தேவையானவை.

10. மனிதர்கள் மரிக்கக் கூடியவர்கள். அவர்களது எண்ணங்களும் மரிக்கக் கூடியவை. ஒரு செடிக்கு எப்படி நீர் அவசியமோ, அப்படி எண்ணங்களுக்கு பிரச்சாரம் அவசியம். இல்லையெனில் இரண்டும் மரிக்கும்.

11. நாட்டின் அரசியல் அமைப்புக்கு, சட்டமும் ஒழுங்கும் மருந்து போன்றவை. அரசியல்நிலைமை நோயுறும் போது மருந்து கண்டிப்பாகத் தரப்பட வேண்டும்.

தொகுப்பு : ரவிகுமார்,
உதவி இயக்குனர் டி.ஏ.வி.பி.

# திட்டம்

## மாத இதழ்

மலர் : 46
இதழ் : 8

ஏப்ரல் 2015
சைத்ர – வைசாக 1937

முதன்மை ஆசிரியர்
**தீபிகா கச்சல்**
முதுநிலை ஆசிரியர்
**ஆ. இளங்கோவன்**


கட்டுரையாளர்களின் கருத்துகள் அவர்களுடையதே. எல்லாக் கருத்துகளும் அரசின் கருத்துகளை ஒட்டி இருக்கும் என்று கூற இயலாது

திட்டமிடுதல் மற்றும் நாட்டின் வளர்ச்சியைப் பற்றியது இந்த ஏடு. மொத்தம் 13 மொழிகளில் இது வெளியாகிறது. திட்டத்தினால் ஏற்படும் நன்மைகளை இது விளக்குகிறது என்றாலும் அரசின் கருத்துகளை மட்டுமே தெரிவிப்பது இதன் நோக்கமல்ல.

**சந்தா விவரம்**

| | | |
|---|---|---|
| தனிப்பிரதி | ... | ரூ. 10.00 |
| ஓர் ஆண்டு | ... | ரூ.100.00 |
| இரண்டாண்டு | ... | ரூ.180.00 |
| மூன்றாண்டு | ... | ரூ.250.00 |


சந்தா (DD அல்லது MO) அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
**திட்டம்**
சாஸ்திரி பவன், ஹாடோஸ் சாலை,
சென்னை 600 006.
தொலைபேசி: 2827 2382



தேசிய சட்ட உதவி ஆணைக் குழுவும் இலவச சட்ட உதவிகளும்
– மனோஜ்குமார் சின்ஹா

தேசிய நிதிக் கணக்கு குறித்த புதிய தொடர் திருத்தப்பட்ட அடிப்படைகளின்படி பார்த்தால் உற்பத்தித் துறை சிறப்பாகத் தோற்றமளிப்பது ஏன்?
– ஜித்தேந்தர் சிங்

தொழிலாளர் நல சட்டங்களும் இந்திய பொருள் உற்பத்தித் துறையும் : சீர்திருத்தங்களின் அவசியம்
– தேவஷீஸ் மித்ரா

இந்தியாவில் விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் தொடர்பான அறிவுசார் சொத்துரிமைப் பிரச்சனைகள்
– அஸ்வினி சிவால்

'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தின் தேவை
– கஸ்தூரி சக்கரவர்த்தி

இந்தியாவில் உயர் தொழில்நுட்ப உற்பத்தி : வெளிப்படாத திறமை
– ஆனந்த் ஷர்மா, வீர்பால் கௌர்

நிறுத்துங்கள்...!!! உங்கள் தட்டில் உள்ள உணவு பாதுகாப்பானதா?
– முனைவர் தி.சிவக்குமார்

இந்தியாவின் முந்தைய மற்றும் தற்போதைய பெட்ரோலிய விலையைப் புரிந்து கொள்ளுதல்
– ஷைனி ஜேக்கப்

# தேசிய சட்ட உதவி ஆணைக் குழுவும் இலவச சட்ட உதவிகளும்

– மனோஜ்குமார் சின்ஹா

**அறிமுகம்**

பெரும்பாலான மனித உரிமைகளை நிலைநாட்டுவதற்கு சட்ட உதவியே துணையாகிறது. சட்ட உதவி இன்றேல், மனித உரிமைகள் ஏட்டளவிலேயே நின்றுவிடும். சர்வதேச சிவில், அரசியல் சட்ட உரிமை ஒப்பந்தத்தின் 14(3) (d) பிரிவு கூறுவதாவது:

தன் முன்பாக விசாரணைகள் நடைபெறும் உரிமை; தானே நேரிடையாக வாதாடுவதற்கோ அல்லது, தன் விருப்பப்படி நியமனம் பெற்ற வழக்குரைஞர் மூலமாக வாதாடுவதற்கோ உரிமை; சட்ட உரிமை கிடைக்காத போது, அரசு மூலம் சட்ட உதவியை பெறலாம் என்று உரிமை உள்ளதை அறியும் உரிமை; தனக்கென சட்ட ஆலோசனைகளை வழங்கத்தானே உரிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளபோதிய வசதி இல்லாதபோது அரசு மூலம் இலவச சட்ட உதவியை பெறும் உரிமை.."

இந்த இலவச சட்ட உதவி 'சமத்துவம்' என்ற கருதுகோளில் இருந்து தோன்றியது. எனினும் குற்ற வழக்குகளுக்கு மட்டுமே இந்த வசதி கிடைக்கும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்பில் இலவச சட்ட உதவியைப் பெறும் உரிமை ஓர் அடிப்படை உரிமை எனக் குறிக்கப்படவில்லை. எனினும் அரசின் நெறிமுறைக் கோட்பாடுகள் என்ற பகுதியில் பிரிவு 39A இலவச சட்ட உதவியை பரம ஏழைகளுக்கு வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த பிரிவு கூறுவதாவது:

"சம வாய்ப்பின் அடிப்படையில் நீதித் துறை செயல்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். தகுந்த சட்டங்களின் மூலமாகவோ, அன்றி திட்டங்கள் வாயிலாகவோ, பொருளாதாரக் காரணங்கள் அல்லது வேறு குறைபாடுகளால் எந்த ஒரு குடிமகனுக்கும் நீதியை நிலைநாட்டுவதற்கான வாய்ப்புகள் மறுக்கப்பட்டாதிருக்கும் வகையில் இலவச சட்ட உதவியை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும்."

நமது அரசியலமைப்பின் 21ஆவது பிரிவில் உறுதியளிக்கப்பட்டுள்ள தனி மனித சுதந்திரம் என்பதில் இலவச சட்ட உதவியும் அடங்கும் என்று உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. எம்.எச்.ஹோஸ்கோட் எதிர் மகாராஷ்ட்ர அரசு என்ற வழக்கில் தீர்ப்பளித்தபோது நீதியரசர் வி.ஆர். கிருஷ்ண ஐயர் தண்டனை அளிக்கப்பட்ட சிறைவாசியால், அரசியலமைப்பு வழங்கியுள்ள மேல்முறையீட்டு உரிமையை செயல்படுத்த இயலாமல் போகிறது. அரசியலமைப்பின் 14, 21, 39A ஆகியபிரிவுகளைச் சேர்த்து வாசிக்கும்போது சிறைப்பட்ட நபருக்கு ஒரு வழக்குரைஞரை நியமிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உள்ளது புலனாகும். அப்படித்தான் சிறைவாசிக்கு நீதி வழங்க முடியும்" என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

கத்ரி எதிர் பீகார் அரசு என்ற வழக்கிலும், குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு நியாயம் கிடைப்பதை உறுதி செய்ய இலவச சட்ட உதவி அவசியமானது என்றும், அந்த உதவி அரசியலமைப்பின் பிரிவு 21ல் உள்ளடங்கியுள்ளது என்றும், உச்ச நீதிமன்றம் குறிப்பிட்டது. குற்றம் சாட்டப்பட்ட ஏழை ஒருவருக்கு, நிதிநிலைமை அல்லது நிர்வாகக் காரணங்களால் இலவச சட்ட உதவி அளிக்க இயலாது என்று எந்த அரசும் கூற முடியாது. எந்தவிதமான சட்ட உதவியையும் பெற இயலாத நிலையில் உள்ள குற்றம் சாட்டப்பட்டவர்களுக்கு இலவச சட்ட உதவியை அரசு வழங்கியாக வேண்டும் என்று அரசியலமைப்பு வலியுறுத்துகிறது.

ஷீலா பார்ஸே எதிர் இந்திய அரசு என்ற வழக்கில் இலவச சட்ட உதவி வழங்க வேண்டும் என்ற கடமை அரசியலமைப்பின் 14, 21, 39–கி பிரிவுகளில் இருந்து தோன்றுகிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும் அந்த வழக்கில் வழக்குரைஞர்கள் சிலரின் போக்குகள் குறித்தும் நீதிமன்றம் தனது அதிருப்தியை வெளியிட்டது. அந்த வழக்கில் தீர்ப்புரை எழுதிய நீதியரசர் பகவதி,

"படிப்பில்லாத, ஒன்றும் அறியாத, ஏழை மக்கள் குற்றம் சாட்டப்படும் போது அல்லது கைது செய்யப்படும்போது, அல்லது சிறையில் அடைக்கப்படும்போது, என்ன செய்வது என்றோ, எங்கே செல்வது என்றோ, யாரை நாடுவது என்றோ அறியாமல் திகைப்பார்கள். அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டாமல், இக்கட்டில் இருப்பவர்களைச் சுரண்டி, அவர்களிடம் இருந்து ஆதாயம் பெற வழக்குரைஞர்கள் முனைவார்கள் என்றால், அது நீதித் துறைக்கே இழுக்காகும். நாட்டின் ஏழை மக்கள் அனைவரும் வழக்குரைஞர்களிடம் நம்பிக்கை இழந்துவிடுவதுடன், சட்டத்தின் ஆட்சி குலைந்து ஜனநாயகமும் பாழ்பட்டுவிடும்" என்று குறிப்பிட்டார்.

சுக்தாஸ் எதிர் அருணாச்சலப் பிரதேசம் என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் ஒருபடி மேலே சென்று இலவச சட்ட உதவியை வழங்க வேண்டியது அரசின் கடமை என்று நினைவூட்டியதுடன், குற்றம்சாட்டப்பட்டவர் அரசிடம் இலவச சட்ட உதவியைக் கோரவில்லை என்றாலும் அவருடைய உரிமை இல்லாமல் போய்விடாது என்று குறிப்பிட்டது. இலவச சட்ட உதவி வழங்கப்படாமல் நடைபெற்ற விசாரணை செல்லுபடியாகாது என்றும்உச்ச நீதிமன்றம் கூறியது.

ஒரு நபர் பொருளாதாரக் குற்றங்கள் அல்லது விவகாரம், அல்லது குழந்தைகளிடம் தவறாக நடந்து கொண்டது போன்ற வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்டு இருந்தால் இலவச சட்ட உதவியை அரசு வழங்க தேவையில்லை என்று முன் வைக்கப்பட்ட வாதத்தையும் உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. குற்றம் நிரூபணம் ஆகாதவரை, குற்றம் சாட்டப்பட்ட எவருமே நிரபராதிகள் என்று அனுமானிப்பதே நீதி என்பதால், இத்தகைய குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கும் இலவச சட்ட உதவி கிடைக்கச் செய்வதே நியாயமானது என்று நீதிமன்றம் கூறியது. இவ்வாறாக, பல வழக்குகளின் மூலமாக, நமது அரசியலமைப்பின் 21ஆவது பிரிவில் உறுதி அளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளின்படி, விரைவான விசாரணையும், இலவச சட்ட உதவியும் அனைவரும் பெற உரிமையுள்ளது என்பது ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**சட்ட உதவி ஆணைக் குழு சட்டம்**

நமது அரசியலமைப்பின் 39கி பிரிவில் நெறியுறுத்தியுள்ளபடி சட்ட உதவி ஆணைக்குழு சட்டம் 1987 இயற்றப்பட்டது. நாடு முழுவதும் ஏழை குடிமக்களுக்கு இலவச சட்ட உதவி கிடைப்பதற்கான சட்டப்படியான அமைப்புகளை ஏற்படுத்தும் அந்தச் சட்டம், 1995 நவம்பர் ஒன்பதாம் தேதி முதல் அமலுக்கு வந்தது. அதனை அடுத்து 1995 டிசம்பர் ஐந்தாம் தேதி தேசிய சட்ட உதவிகள் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. தேசிய அளவிலான அந்த ஆணைக் குழுவைப் போலவே, மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், வட்ட அளவிலும், ஆணைக் குழுக்களை ஏற்படுத்த அந்தச் சட்டம் வகை செய்கிறது. தேசிய ஆணைக் குழுவின் தலைமைப்புரவலராக உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியும், நிர்வாகத் தலைவராக உச்சநீதிமன்றத்தின் பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவரும் இருப்பார்கள். தேசிய சட்ட உதவி ஆணைக் குழுவின் கொள்கைகளுக்கும் நெறிமுறைகளுக்கும் செயல்வடிவம் கொடுக்கவும், லோக் அதாலத் என்னும் மக்கள் நீதிமன்றங்களை நடத்தவும் ஒவ்வொரு மாநிலத்திலும் மாநில சட்டப் பணிகள் ஆணைக் குழுக்களை ஏற்படுத்தவும் அந்தச் சட்டம் வகை செய்துள்ளது. மாநிலங்களின் சட்டப்பணிகள் ஆணைக் குழுவிற்கு அந்தந்த மாநிலங்களின் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதிகளே தலைமைப் பொறுப்பு ஏற்றும் புரவலர்களாகத் திகழ்வர். உயர்நீதிமன்றத்தில் பணியில் உள்ள அல்லது ஓய்வு பெற்ற நீதிபதி செயல்தலைவராக விளங்குவார். இதைப் போலவே மாவட்ட அளவில் சட்டப் பணிகளை வழங்க மாவட்ட தலைமை நீதிபதியின் தலைமையிலும், வட்ட அளவில் அந்த வட்டத்தின் மூத்த சிவில் நீதிபதியின் தலைமையிலும் சட்டப் பணிகள் ஆணைக் குழுக்கள் செயல்படுகின்றன. சமூகத்தில் நலிந்த பிரிவு மக்களுக்கு பொருளாதாரம் மற்றும் ஏனைய காரணங்களால் நியாயமான சட்ட உதவிகள் கிடைக்காது போய்விடாமல் உறுதிசெய்வதே இந்தச் சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயம் அல்லது பிற அதிகார அமைப்புகளில் நடைபெறும் வழக்கு அல்லது சட்டரீதியான நடைமுறைகளிலும் சட்டம் தொடர்பான மற்ற விஷயங்களிலும் சட்ட ஆலோசனைகள் வழங்குவதே சட்ட உதவி என்று வரையறுக்கப்பட்டுள்ளது. மேலும் சட்ட உதவி முகாம்கள் நடத்தவும், லோக் அதாலத்கள் மூலம் தகராறுகளை தீர்த்துக் கொள்ளவும் அச்சட்டம் வகை செய்கிறது. நலிவடைந்த பிரிவினருக்காக சமூக வழக்காடும் பணியை மேற்கொள்ளவும், சமூக சேவகர்களுக்கு சட்டப் பயிற்சி அளிக்கவும் மத்திய சட்டப் பணிகள் ஆணைக் குழு கடமைப்பட்டுள்ளது என்று இச்சட்டம் கூறுகிறது. பல்கலைக்கழகங்களிலும், சட்டக் கல்லூரிகளிலும், ஏனைய கல்வி நிறுவனங்களிலும் சட்ட அறிவு முகாம்களையும், சட்ட உதவி முகாம்களையும் நடத்த வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

**மனோஜ்குமார் சின்ஹா**, இயக்குனர், இந்தியன் சட்ட கல்வி நிறுவனம், புதுதில்லி

தகுதியான நபர்களுக்கு இலவச சட்ட உதவி வழங்குவது குறித்து இச்சட்டத்தின் 12ஆவது பிரிவில் கூறப்பட்டுள்ளது. விண்ணப்பதாரரின் தகுதிகளைப் பரிசீலித்து, முதல் நோக்கிலேயே அவருக்கு வழக்காடும் உரிமையுள்ளது என்று தெரிய வந்தால், அரசாங்கத்தின் செலவில் அவருக்கு ஒரு வழக்கறைஞர் நியமிக்கப்படுவார். அவர் செலுத்த வேண்டிய நீதிமன்றக் கட்டணங்களையும், வழக்குத் தொடர்பான பிற செலவுகளையும் அரசாங்கமே ஏற்கும். வழக்காடி தன் பங்காக எந்தச் செலவையும் செய்ய வேண்டியதில்லை. குறிப்பாக ஒருவருடைய உயிருக்கும் சுதந்திரத்திற்கும் அச்சுறுத்தல் இருந்தால் அனுபவசாலியான மூத்த வழக்குரைஞரை அரசாங்கச் செலவில் ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட விதிகள் கூறுகின்றன.

இந்தச் சட்டம் இயற்றப்பட்டு விதிகள் உருவாக்கப்பட்ட பின்னர் நம் நாட்டில் இலவச சட்ட உதவிகள் வழங்கும் பணி பரவலாகிவிட்டது. நீதிமன்றங்களில் வழக்காட உதவுவதுடன், நீதிமன்றங்களுக்கு வெளியே சச்சரவுகளுக்குத் தீர்வு காண்பதற்கு ஏதுவாக லோக் அதாலத்துகள் நடத்தப்படுகின்றன. எனினும் எழுத்தறிவு இன்மையில் சட்ட உதவி பெற முடியாத மக்களைச் சென்று இந்த உதவிகளை வழங்குவது இன்னும் பெரும் சவாலாகவே உள்ளது. இந்தச் சவாலை எதிர்கொள்ள, தன்னார்வத் தொண்டு நிறுவனங்களும், சட்டக் கல்லூரிகளும் நீதித்துறையுடன் கைகோர்த்துச் செயல்பட முன்வர வேண்டும்.

**முடிப்புரை :**

இயற்கை நீதி, சமத்துவம், நேர்மையான மனசாட்சி போன்ற கோட்பாடுகளின்படி மக்களுக்கு நீதி வழங்கும் மாற்று நீதிமன்ற ஏற்பாடாக லோக் அதாலத் என்ற மக்கள் நீதிமன்றங்களுக்கு நிரந்தரமான சட்டப்பூர்வ அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டுவிட்டது. மனித உரிமைகளை நிலை நாட்ட வேண்டுமெனில், அரசாங்கத்தின் செலவிலான சட்ட உதவிகள் ஏழை மக்களுக்கக் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று உள்ளூர் மட்டத்தில் இருந்து சர்வதேச அளவிலான மனித உரிமை அமைப்புகள் அனைத்தும் கூறுகின்றன. ஏழை வழக்காடிகளுக்கு இலவச சட்ட உதவி கிடையாது என்றால் உரிமைகள் என்பது வெறும் மாயையே. உரிமைகள் நிலைநாட்டப்பட வேண்டுமானால் சட்ட உதவிப் பணிகளுக்கு அரசு போதிய நிதி உதவி வழங்க வேண்டும். 2012 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபை, குற்றநீதி நடைமுறைகளில் சட்ட உதவிகள் பெறுவதற்கான ஐ.நா. கோட்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்களை சர்வதேச அளவில் அறிவித்து ஏற்றுக் கொண்டதையும் இங்கே குறிப்பிடலாம். ●

## இணைந்து செயல்படுவோம்:காச நோயை ஒழிப்போம்

**-குடியரசுத் தலைவர்**

நாம் அனைவரும் இணைந்து செயல்பட்டால் காச நோயை ஒழிக்கலாம் என்று குடியரசுத் தலைவர் திரு. பிரணாப் முகர்ஜி உலக காச நோய் தினத்தை முன்னிட்டு இவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவித்ததாவது:

இந்தியர்கள் அனைவரும் இணைந்து செயல்பட்டால் காச நோயை நம் நாட்டை விட்டு முற்றிலுமாக ஒழிக்கலாம். காச நோய் ஒரு முக்கிய சுகாதார பிரச்சனையாகும். நாட்டின் இளைய சமுதாயத்தையும் உழைக்கும் மக்களையும் காச நோய் அதிகமாக பாதிக்கிறது. இன்றும் இந்நோயால் ஒவ்வொரு இரண்டு நிமிடத்திற்கும் ஒருவரை நாம் இழக்கிறோம் என்பது வருந்தும் அளிக்கக்கூடிய ஒன்றாகும். இந்த நோயை எப்படி தடுப்பது, எப்படி குணப்படுத்துவது குறித்த பொது விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டியது அவசர தேவையாகும். நோய் குறித்த ஆய்வு மற்றும் சிகிச்சை துறையின் வளர்ச்சி இன்னும் மேம்படுத்தப்பட வேண்டும். 1993 துவங்கப்பட்ட, மறு சீரமைக்கப்பட்ட தேசிய காச நோய் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் எட்டு கோடியே 60 லட்சம் பேர் பரிசோதனை செய்யப்பட்டு ஒரு கோடியே 90 லட்ச நோயாளிகள் சிகிச்சை அளிக்கப்பட்டு மூன்று கோடியே நான்கு லட்ச உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என்பது எனக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. உலக காச தினத்தை முன்னிட்டு அனைவரும் குறுகிய காலத்திற்குள் நாட்டில் காச நோயால் ஏற்படும் இறப்புகளை முற்றிலும் ஒழிப்பதற்கான முயற்சியில் தங்களை மறு அர்பணிப்பு செய்து கொள்வோம். இவ்வாறு குடியரசு தலைவர் தெரிவித்துள்ளார்.



# தேசிய நிதிக் கணக்கு குறித்த புதிய தொடர் திருத்தப்பட்ட அடிப்படைகளின்படி பார்த்தால் உற்பத்தித் துறை சிறப்பாகத் தோற்றமளிப்பது ஏன்?

– ஜித்தேந்தர் சிங்

பொருளாதாரத்தில் உள்ள உற்பத்தி மற்றும் தேவை சார்ந்த அமைப்பில் ஏற்படும் மாற்றங்களுக்கு ஏற்ப ஒவ்வொரு கால கட்டத்திலும் பொருளாதார நடவடிக்கைகளின் அமைப்பிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. உற்பத்தியைப் பொறுத்த அளவில், தொழில்நுட்பம் மற்றும் அமைப்பின் புத்தாக்கங்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட மாற்றங்கள் உற்பத்தி முறைமையில் மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. இந்தச் செயல்முறையின் மூலம் சில உற்பத்திப் பொருட்கள் வழக்கொழிந்து போயின. பிற உற்பத்திப் பொருட்கள் நடைமுறைக்கு வந்தன. தேவை என்று பார்த்தால், காலம் செல்லச் செல்ல நுகர்வு முறைமைகூட மாறி வந்துள்ளது. ஒப்பீட்டு ரீதியிலான விலைகளில் ஏற்பட்ட மாற்றங்கள் உற்பத்தி மற்றும் நுகர்வு சார்ந்த தேர்வுகளில் மாற்றங்களைத் தாண்டி உள்ளன. எனவே, இத்தகைய அமைப்பு ரீதியான மாற்றங்களைக் கணக்கில் எடுத்துக் கொள்ளவும் விலைகளை புதுப்பித்துக் கொள்ளவும் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்துக்குப் பிறகு அடிப்படையை மறுநிர்ணயம் செய்துகொள்ள வேண்டிய தேவை ஏற்படுகின்றது. தேசிய நிதிக் கணக்குக்காக அடிப்படை மறுநிர்ணயம் செய்யும்போது பொருளாதார அமைப்பில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் பற்றிய எண்ணற்ற புதிய தகவல்கள் கிடைக்கின்றன. புதிய அடிப்படையிலான விலைகளுக்கும் மாற வேண்டியிருக்கிறது. பொருளாதாரத்தின் அளவைத் தெரிந்து கொள்ளவும் மதிப்பீடு செய்யவும் இது உதவுகின்றது. ஒரு பக்கச் சார்பு போக்கைச் சரிசெய்து கொள்ளவும் பொருளாதாரத்தின் துறைகளின் ஒப்பீட்டு ரீதியான முக்கியத்துவத்தைப் புதிதாகப் பார்ப்பதற்கும் உதவியாக இருக்கிறது.

மத்திய புள்ளியியல் அலுவலகம் (சி.எஸ்.ஓ) தேசிய நிதிக் கணக்குகள் தொடர்பான புதிய தொடர் வெளியீடுகளை அண்மையில் அறிமுகப்படுத்தி உள்ளது. இது தேசிய நிதிக்கணக்கு புள்ளி விவரங்களுக்கான அடிப்படையை 2004–05ஆம் ஆண்டு முதல் 2011 12ஆம் ஆண்டு வரை திருத்தி மதிப்பிட்டுள்ளது. இதற்கு முன்பு இந்த அடிப்படை ஜனவரி 2010ல் நிர்ணயிக்கப்பட்டு இருந்தது. அடிப்படையை திருத்தி அமைக்கும்போதே முறைமையியல் மாற்றங்கள் பலவும் ஏற்பட்டன. இதன் விரிவான விளக்கத்தைத் தாண்டியும் பத்திரிகைக் குறிப்பு நிறைய பேருக்கு புதிராகத்தான் இருந்தது. வளர்ச்சி எண்களின் எதிர்பாராத ஏற்றம் பயனாளருக்கு ஆச்சரியத்தையே அளித்தது. கொள்கை வகுக்கும் நோக்கத்துக்காக இந்தப் புதிய எண்களைப் பயன்படுத்துவதில் பலரும் எச்சரிக்கை அணுகுமுறையை கடைபிடிக்க ஆரம்பித்தார்கள். எந்த எண்களைப் பயன்படுத்துவது புதிய எண்களையா? அல்லது பழைய எண்களையா என்ற குழப்பம் நீடிக்கிறது. இந்தக் கட்டுரை புதிய தொடர் வெளியீடுகளில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களையும், மேலும் சில துறைகளில், அதிலும் குறிப்பாக உற்பத்தித் துறையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டன என்பதையும் விளக்கிச் சொல்கின்றது.

தேசிய நிதிக்கணக்குகள் பற்றிய புதிய தொடர் வெளியீடுகள் பழைய புள்ளி விவரங்களை (அடிப்படை: 2004–05) மேம் படுத்தித் தருகின்றன. நிறுவனங்கள் பிரிவு, அரசு நடவடிக்கைகள் ஆகியவற்றை விரிவாக உள்ளடக்கி புதிய திருத்தப்பட்ட அடிப்படை விவரங்கள் தரப்படுகின்றன. இதில் தேசிய மாதிரி கணக்கெடுப்புகளின் வழியாக பெறப்பட்ட அண்மைக்கால தரவுகளும் சேர்க்கப்பட்டுள்ளன. மதிப்பீடு செய்யும் முறைமைகள், பொருளாதார நடவடிக்கைகளை கணக்கில் எடுத்துக் கொள்ளும் அணுகுமுறைகள் ஆகியவற்றில் இந்தப் புதிய தொடர் சில

**ஜித்தேந்தர் சிங்**, இயக்குனர், பொருளாதார ஆலோசகர், புதுதில்லி

மாற்றங்களைக் கொண்டு வந்துள்ளது. மேலும் புதிய வரையறைகள் அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன; புதிய வகைப்பாடுகள் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளன.

என்.ஐ.சி.2008ன் தொழிலக வகைப் பாடுகளைச் சேர்த்துக் கொண்டது என்பது தொழிலகத்தின் நடவடிக்கைகளுக்கு ஏற்ப சீரமைத்துக் கொள்வதற்குத்தான் என்பது சாத்தியமான ஒரு காரணமாக இருக்கின்றது. பழைய தொடரில் தொழில்களின் எண்ணிக்கை எட்டாக இருந்தது. இந்த எண்ணிக்கை புதிய தொடரில் பதினொன்றாக அதிகரித்து உள்ளது. இந்தக் கூடுதலான மூன்று தொழில்களும் சேவைப்பிரிவில் மறுவகைப்பாடு செய்ததன் மூலம் உருவானவை ஆகும்.

1. "போக்குவரத்து சேமிப்பு, தொடர்பியல் – ஒலிபரப்பு தொடர்பான சேவைகள்",

2. "ரியல் எஸ்டேட், குடியிருப்பு வீடுகளின் உரிமை – தொழில்நிபுணத்துவ சேவைகள்"

3. "பிற சேவைகள்"

ஆகியவையே அந்தக் கூடுதலான மூன்று வகைப்பாடுகள் ஆகும். தொழிற்சாலைகளைப் பற்றிய விவரிப்பும் மாறி உள்ளது. உதாரணமாக முன்பு "சமூக சேவைகள் முதலானவை" என்ற வகைப்பாடு "பொது நிர்வாகம் மற்றும் பாதுகாப்பு" என்று மாற்றப்பட்டுள்ளது.

புதிய வரையறைகள் அறிமுகப்படுத் தப்பட்டு உள்ளன. உதாரணமாக அடிப்படை விலையில் மொத்த மதிப்பு கூட்டல் (ஜி.வி.ஏ) போன்றவை அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளன. காரணி விலையில் ஜி.டி.பி போன்ற பழைய கருத்தாக்கங்கள் விலக்கிக் கொள்ளப்பட்டு உள்ளன. அடிப்படை விலையில் ஜி.வி.ஏ என்பது காரணி விலையில் ஜி.டி.பிஉடன் வரி மற்றும் மானியங்களின் நிகர மொத்தம் சேர்ந்தது ஆகும். ஜி.வி.ஏவின் அளவுடன் காரணி செலவில் ஜி.டி.பி அளவை ஒப்பிட்டுப் பார்த்ததினால் இந்த மாற்றம் செய்யப்பட்டு உள்ளது. காரணி செலவில் ஜி.டி.பி என்பது வேறு வேறு துறைக்கு வேறு வேறாக வித்தியாசப்பட்டு இருக்கும். உதாரணமாக, உற்பத்தித் துறையில் உற்பத்தி வரியின் நிகர மொத்தம் சாதகமானதாக இருந்தால் அது அந்தத் துறையில் ஜி.டி.பியைவிட அதிக அளவு ஜி.வி.ஏ கிடைக்கச் செய்யும். அடிப்படை விலையில் ஜி.வி.ஏக்கான புதிய வளர்ச்சி எண்கள் உள்ளுறையாக வரி மற்றும் மானியங்களும் உள்ளன என்பதைச் சுட்டிக் காட்டுகின்றது. காரணி விலையில் ஜி.டி.பியில் இந்த அம்சம் இல்லை.


உற்பத்திப்பொருள் வரியில் இருந்து உற்பத்தி வரி தனித்தனியாக வரையறுக்கப்பட்டுள்ளது. உற்பத்திப் பொருள் வரி என்பது அளவு அல்லது எண்ணிக்கை சார்ந்தது ஆகும். எண்ணிக்கை அல்லது அளவு வித்தியாசப்பட்டால் வரியும் வித்தியாசப்படும். ஆனால் உற்பத்தி வரி என்பது அளவோடு சம்பந்தப்படாதது ஆகும். இதேபோல் உற்பத்திக்கும் உற்பத்தி மானியங்களுக்கும் இடையில் இதேவிதமான வித்தியாசம் உருவாக்கப்பட்டு உள்ளது. சந்தை விலையில் ஜி.டி.பி என்பதுதான் இனி ஜி.வி.ஏ. எனக் குறிக்கப்படும். அடிப்படை விலையில் ஜி.வி.ஏ மதிப்போடு உற்பத்தி வரி மற்றும் உற்பத்தி மானியங்களின் நிகர மொத்தமும் சேர்ந்து இது கணக்கிடப்படுகின்றது.

நிறுவனமாக இல்லாத உற்பத்தி – தயாரிப்பு தொழில்களுக்காக "தொழிலாளர் உள்ளீட்டு முறை" புதியதாக உருவாக்கப்பட்டு உள்ளது. ஒருங்கிணைக்கப்படாத வேளாண் அல்லாத பிரிவில் கணக்கீடுகளைத் தொகுப்பதற்காக இது உருவாக்கப்பட்டு உள்ளது. உற்பத்தித் திறன் மற்றும் தொழில் திறன்களின் அடிப்படையில் பல்வேறு வகையான தொழிலாளர்களுக்கு இந்த முறையில் முக்கியத்துவம் தரப்படுகின்றது. ஆனால் முந்தைய முறையில் ஒவ்வொரு தொழிலாளருக்கும் உற்பத்தித் திறன் மற்றும் தொழில்திறனை கணக்கில் எடுக்காமல் ஒருங்கிணைக்கப்படாத வேளாண் அல்லாத பிரிவில் மதிப்புக் கூட்டலை சிறப்பாக கணக்கிடுவதை இந்தப் புதிய முறை ஏற்றுக் கொண்டுள்ளது.

### பழைய மற்றும் புதிய அடிப்படையில் புள்ளி விவரங்களுக்கு இடையிலான வித்தியாசங்கள்

புதிய அடிப்படையில் 2012–13ல் நிலையான விலையில் ஜி.வி.ஏ வளர்ச்சி என்பது 4.9% ஆக






ஆதாரம்: மத்திய புள்ளியியல் அலுவலகம்

இருந்தது. அதேசமயம் பழைய அடிப்படையில் (2004–05) காரணி செலவில் ஜி.டி.பி வளர்ச்சி 4.5%தான். இதேபோன்று 201314ஆம் ஆண்டில் புதிய அடிப்படையில் ஜி.வி.ஏ வளர்ச்சி 6.6% என பதிவு செய்யப்பட்டது. பழைய அடிப்படையில் இதன் மதிப்பு 4.7%தான். உற்பத்தி துறைகளுக்கான ஜி.வி.ஏ வளர்ச்சி 2012–13 மற்றும் 2013–14ஆம் ஆண்டுகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை வெளிப்படுத்தி உள்ளது. பழைய அடிப்படையில் இந்த இரண்டு ஆண்டுகளுக்கான வளர்ச்சி முறையே 1.1% மற்றும் 0.7%ஆக இருந்தது. இது புதிய அடிப்படையில் முறையே 6.2% மற்றும் 5.3%ஆக இருந்தது. உற்பத்தியில் துறைசார் பங்குகூட 2012–13 ஆண்டிலும் 2013–14ஆம் ஆண்டிலும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்து உள்ளது. 2011 12ல் இது பழைய அடிப்படையில் 14.1% ஆகவும் புதிய அடிப்படையில் 17.9% ஆகவும் இருந்தது. இந்த வித்தியாசங்களுக்கு காரணங்களாக மாற்றப்பட்ட முறைமைகள்; வரையறைகள், வகைப்பாட்டில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள்; சிறப்பான பரவல் ஆகியவற்றைச் சொல்லலாம். இந்தக் காரணிகள் ஜி.வி.ஏவில் எந்த அளவிற்கு வித்தியாசங்களை ஏற்படுத்தி உள்ளன மற்றும் எந்தெந்தத் தொழில் பிரிவுகளில் ஏற்படுத்தி உள்ளன என்றும் அறிவது முக்கியமானதாகும்.

குறிப்பு: முந்தைய தொடர் வெளியீடுகளுக்கு (2004–05 தொடர்கள்) மதிப்பீடுகள் காரணி விலையில் ஜி.வி.ஏ அளவில் இருந்து தருவிக்கப்பட்டன. 2011 12 தொடர் வெளியீடுகளுக்கு மதிப்பீடுகள் அடிப்படை விலையில் ஜி.வி.ஏ அளவில் இருந்து தருவிக்கப்படுகின்றன.

நிலையான விலையில் வளர்ச்சியானது, புதிய அடிப்படை விலையிலோ அல்லது பழைய அடிப்படை விலையிலோ தொகுக்கப்பட்டாலும்கூட அதன் மதிப்பு வித்தியாசப்படாமல் ஒன்றாகவே இருக்க வேண்டும். வேறு வார்த்தைகளில் சொல்வதானால், புதிய அல்லது பழைய அடிப்படையில் நிலையான விலையில் வளர்ச்சியில் உள்ள வித்தியாசங்களுக்கு அடிப்படை ஆண்டை மட்டும் மாற்றுவது என்பது காரணமாக இருக்க முடியாது. இந்த தர்க்கத்தின் அடிப்படையில் புதிய மற்றும் பழைய அடிப்படையில் நிலையான விலையில் கணக்கிடப்பட்ட தொழில் பிரிவு வாரியான வளர்ச்சி விகிதங்களில் உள்ள வித்தியாசங்கள் வரைபடம்1–ல் காட்டப்பட்டுள்ளன. பிறவற்றுக்கிடையில் இத்தகைய வித்தியாசங்கள் பொருளாதார வளர்ச்சியில் சார்புத்தன்மையுடன் குறைமதிப்பீடு அல்லது மிகை மதிப்பீட்டைச் சுட்டுகின்றன. புதிய தொடர்களில் மேற்கொண்ட கணக்கீடுகள் மேற்கொண்ட நடவடிக்கைகளை சிறப்பாகச் சித்தரிக்கின்றன என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இவ்வாறு பார்க்கப்படுகின்றது. ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், பொருளாதார வளர்ச்சி 2013–14ஆம் ஆண்டு பழைய தொடர்களில் இரண்டு சதவிகிதப் புள்ளி குறைவாக மதிப்பிடப்பட்டு உள்ளது.

இதற்கான காரணங்கள் அமைப்புரீதியான மாற்றங்கள் என்று மட்டுமல்லாமல், கருத்தாக்க மாற்றங்கள், மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு முறைகள், சிறப்பான பரவல் போன்றவையும் காரணங்களாக இருக்கின்றன. தொழில் பிரிவுகளுக்கு இடையில், "சுரங்கம் – குவாரி", "தொழிலக உற்பத்தி", "வர்த்தகம், பழுதுபார்த்தல் – ஹோட்டல்", "போக்குவரத்து, சேமிப்பு முதலானவை மற்றும் "சமுதாயச் சேவைகள் முதலானவை" போன்ற பிரிவுகள் மிக மிகக் குறைவான மதிப்பீடு செய்யப்பட்டு உள்ளன. "விவசாயம் மற்றும் அது சார்ந்தவை", "நிதி, ரியல் எஸ்டேட் – வர்த்தகச் சேவைகள்" ஆகியவற்றில் மிகை மதிப்பிடுகள் செய்யப்பட்டு உள்ளன. இந்தக் குறை மதிப்பீடும் மிகை மதிப்பீடும் பழைய தொடர்களில் மேற்கொள்ளப்பட்டவை ஆகும்.

புதிய அடிப்படையில் தொழிலக உற்பத்திக்கான பிரிவில் வளர்ச்சிக்கான காரணங்கள் அமைப்பு ரீதியானதாகவும் அதே சமயம் தொகுப்பு முறையியலில் மேற்கொள்ளப்பட்ட மாற்றமும் ஆகும். முறையியலில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களில் அணுகுமுறை மாற்றம், சிறப்பான பரவல், புதிய மதிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துதல், புதிய வரையறைகளின் அறிமுகம் ஆகியவையும் உள்ளடங்கும். பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்ட சிறப்புக் கூறுகளில் சில கீழே எடுத்துக் காட்டப்படுகின்றன:

**1. உற்பத்தித் தொழிலகம் என்ற அணுகுமுறையில் இருந்து பெரு நிறுவனம் என்ற அணுகுமுறைக்கு மாறுதல்**

தொழிலகங்கள் பற்றிய ஆண்டு கணக்கெடுப்புக்கு பயன்படுத்தப்பட்ட உற்பத்தித் தொழிலகம் என்ற அணுகுமுறை ஒரு யூனிட்டின் உற்பத்தி அம்சத்தைத் தாண்டி ஏனைய நடவடிக்கைகளைக் கவனத்தில் கொள்ளவில்லை. ஆனால் ஒரு பெருநிறுவனம் என்பது தனது உற்பத்தி நடவடிக்கைகளுடன் உற்பத்தி சாராத நடவடிக்கைகளிலும் ஈடுபடுகின்றது. உதாரணமாக துணைச் சேவை நடவடிக்கைகள் முதலானவற்றைக் குறிப்பிடலாம். இப்போது இந்தப் புதிய அணுகுமுறையால், ஒரு உற்பத்தி நிறுவனத்தின் உற்பத்தி சாராத ஏனைய நடவடிக்கைகளும் உற்பத்தித் தொழில் பிரிவின் கீழ் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. இந்தப் பெரு நிறுவன அணுகுமுறைக்கு நிறுவன உறவுகள் அமைச்சகத்தின் எம்.சி.ஏ.21 தரவுகள் உதவுகின்றன.

**2. என்.எஸ்.எஸ்.ஓ கணக்கெடுப்புகளின் கண்டுபிடிப்புகளை சேர்த்துக் கொள்ளுதல்**

கூட்டிணைவாக இல்லாத நிறுவனங்களின் கணக்கெடுப்பு (2010–11) மற்றும் வேலைவாய்ப்பு மற்றும் வேலையற்றோர் கணக்கெடுப்பு (2011–12) போன்ற புதிய என்.எஸ்.எஸ் கணக்கெடுப்புகளின் விவரங்கள் இப்போது கிடைக்கின்றன. ஆகவே அவை புதிய தொடர்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டு உள்ளன. ஒருங்கிணைக்கப்படாத தொழில் உற்பத்திப் பிரிவில் உள்ள நடவடிக்கைகளைச் சித்தரிப்பதில் ஒரு படி முன்னேற்றமாக இந்தத் தகவல் புதுப்பித்தல் உள்ளது.

**3. தொழிலாளர் உள்ளீட்டு முறையில் மாற்றம்**

கூட்டிணைவாக இல்லாத உற்பத்திப் பிரிவு மற்றும் சேவைகள் நிறுவனங்களுக்கான தொழிலாளர் உள்ளீட்டு முறைக்கு பதிய தொடர்கள் மாறியுள்ளன. முந்தைய முறையானது அனைத்து வகை தொழிலாளர்களுக்கும் சமமான மதிப்பையே ஒதுக்கி இருந்தது. ஆனால் புதிய முறையானது அவர்களது உற்பத்தித் திறனுக்கேற்ப தொழிலாளர்களுக்கு வேறு வேறு மதிப்பீட்டைத் தருகின்றது.

**4. மானியங்கள் கழிக்கப்பட்ட உற்பத்தி வரியை உள்சேர்த்தல்**

உற்பத்தி வரி மற்றும் உற்பத்தி மானியங்களின் நிகர மொத்தம் உற்பத்திப் பிரிவில் சாதகமானதாக உள்ளது. அதேசமயம் "வேளாண் மற்றும் அது சார்ந்த தொழில்கள்" மற்றும் "மின்சாரம், எரிவாயு முதலானவை" போன்ற துறைகளுக்கு இடையில் இது பாதகமானதாக உள்ளது. ஆகையால் சாதகமான நிகர உற்பத்தி வரியானது பிரிவில் தனிப்படவும் பிற பிரிவுகளோடு ஒப்பீட்டு ரீதியிலும் ஜி.வி.ஏ மதிப்பின் அளவை அதிகரிக்கக் கூடியதாக இருக்கிறது. மேலும் எந்த ஒரு மாற்றமும், கொள்கை மாற்றம் உட்பட, உற்பத்தி வரி, மானியங்களின் கூட்டு மொத்தத்தை மாற்றுவதாக இருந்தால், இது பிரிவில் உள்ள வளர்ச்சி விகிதங்களில் பிரதிபலிக்கும் எனச் சொல்லலாம். ●



# தொழிலாளர் நல சட்டங்களும் இந்திய பொருள் உற்பத்தித் துறையும் : சீர்திருத்தங்களின் அவசியம்

– தேவஷீஸ் மித்ரா

## ஆசிரியரின் வாழ்க்கை குறிப்பு

தேவஷீஸ் மித்ரா அமெரிக்காவின் நியுயார்க்கிலுள்ள சைராக்யூஸ் பல்கலைக்கழகத்தின் மேக்ஸ்வெல் ஸ்கூல் ஆஃப் சிட்டிசன்ஷீப் அண்ட் பப்ளிக் அப்யர்ஸின் பொருளாதாரம் மற்றும் உலக நடப்புத் துறை பேராசிரியர். அவர் CESIfo நெட்வொர்க் மற்றும் IZAவின் உறுப்பினர் மற்றும் Ifo இன்ஸ்டியூட்டின் ஆய்வுத்துறை பேராசிரியர். எக்னாமிக்ஸ் மற்றும் பாலிடிக்ஸ் இதழின் இணை ஆசிரியர் மற்றும் யூரோப்பியன் எகனாமிக் ரெவ்யூ, ஜர்னல் ஆஃப் டெவலப்மெண்ட் எக்னாமிக்ஸ், ஜர்னல் ஆஃப் இண்டர்நேஷனல் எக்னாமிக்ஸ், இண்டர்நேஷனல் ரெவ்யூ ஆஃப் எக்னாமிக்ஸ் அண்ட் ஃப்னான்ஸ் அண்ட் இண்டர்நேஷனல் ஜர்னல் ஆஃப் பிஸ்னஸ் அண்ட் எக்னாமிக்ஸ் ஆகிய இதழ்களின் இணையாசிரியர். உலக வர்த்தகம், அரசியல் பொருளாதாரம் மற்றும் வளர்ச்சி பொருளாதாரம் ஆகியவை அவரின் ஆய்வுப் பகுதிகள். வர்த்தகம் மற்றும் தொழிலாளர்களுக்கான உறவு குறித்த ஆய்வுகள் அவரின் சமீப முயற்சிகள். அவருடைய படைப்புகள் அமெரிக்கன் எக்னாமிக் ரெவ்யூ, ரெவ்யூ ஆஃப் எக்னாமிக் அண்ட் ஸ்டாடிக்ஸ்டிக்ஸ், எக்னாமிக் ஜர்னல், ஜர்னல் ஆஃப் இண்டர்நேஷனல் எக்னாமிக்ஸ், ஜர்னல் ஆஃப் டெவலப்மெண்ட் எக்னாமிக்ஸ் போன்ற புகழ்பெற்ற இதழ்களில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. கொலம்பியா பல்கலைக்கழகத்தின் முனைவர் பட்டம் பெற்றிருக்கிறார்.

பெருமளவு தொழிலாளர்கள் மிகுந்த இந்தியாவில் தொழிலாளர் மிகுந்த பொருள் உற்பத்தி நிறுவனங்கள், குறிப்பாக சிறு, முறைபடுத்தப்படாத அல்லது பதிவு செய்யப்படாத தொழில் உற்பத்தி நிறுவனங்களில்தான் மிகுந்து காணப்படுகின்றன. அவைகளில் தொழில்நுட்பம் மிகுந்த அளவு காணப்படுவதில்லை. அதே சமயம், முறைபடுத்தப்பட்ட தொழில்கள் முதலீடு மிகுந்த நிறுவனங்களாக உள்ளன (பனாகரியா, 2008 மற்றும் கொச்சார் மற்றவர்கள், 2006). இந்தியாவில் மக்கட் தொகையும், பொருளாதாரமும் பெரிய அளவில் இருந்தும், தொழிலாளர்கள் மிகுந்து இருந்தும் உலகச்சந்தையில் தொழிலாளர்கள் மிகுந்த பொருள் உற்பத்தி நிறுவனங்களின் இந்திய பங்கு மிகவும் குறைவானதே. இதற்கான காரணங்கள், உற்பத்தியை குறைக்கும் தொழிலாளர் நல விதிமுறைகளால் இறுகிய இந்திய தொழிலாளர் சந்தையே இந்த குறைவான விளைவுக்கு காரணம் என்று சில கட்டுரையாளர்கள் கூறுவர். மற்றவர்கள் இந்த சட்டங்களை தவிர்த்து செயல்பட கற்றிருக்கிறார்கள் என்று கூறுவர். இந்தக்கட்டுரையில் தொழிலாளர்சார் ஒழுங்குமுறைகள் எந்த அளவுக்கு இந்திய தொழில் உற்பத்தி துறையை பாதிக்கிறது என்பது பற்றியும் தொழிலாளர் நல சீர்திருத்தங்கள் மற்றும் சில கொள்கை பரிந்துரை பற்றியும் பரிசீலிக்கலாம்.

## இந்தியாவில் தொழிலாளர் நல ஒழுங்கு முறைகள்

பழமையான தொழிலாளர் நல ஒழுங்கு முறைகள் மிகவும் கடுமையாக இருப்பதால் இந்திய தொழிலாளர் சந்தை ஒரு இறுகிய நிலையில் உள்ளது. தொழில் நுட்ப வளர்ச்சிக்கு ஏற்பவும், தொழிலாளர் தேவைக்கு ஏற்பவும் நிறுவனங்கள் தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது, இதனால் மிகவும் கஷ்டமாக உள்ளது. 52 மத்திய சட்டங்கள் உள்ளிட்ட மொத்தமுள்ள இருநூறு தொழிலாளர் நல சட்டங்களில் (பகவதி மற்றும் பனாகரியா, 2013) மிகவும் கடுமையான சட்டம் என்பது தொழில் துறை சச்சரவு சட்டமாகும். இந்த சட்டத்தின்படி நூறு பேருக்கு மேல் பணி செய்யும் தொழில்

**தேவஷீஸ் மித்ரா,** பேராசிரியர் பொருளாதாரம் மற்றும் உலக நடப்பு, மேக்ஸ்வெல் ஸ்கூல் ஆஃப் சிட்டிசன்ஷீப் அண்ட் பப்ளிக் அப்பேர்ஸ், சைராக்யூஸ் பல்கலைக்கழகம், சைராக்யூஸ், நியுயார்க், அமெரிக்கா

நிறுவனங்களில் ஒருவரை வேலையிலிருந்து நீக்குவதற்குமுன் சம்மந்தப்பட்ட மாநில அரசிடமிருந்து ஒப்புதல் பெற வேண்டும். இந்த அனுமதி எப்போதுமே கிடைக்காது. இது அல்லாமல் தொழில் நிறுவனங்களில் பணியமர்த்தல் (நிலையான உத்தரவு) சட்டத்தின்படி ஒரு பணியாளரின் வேலை விவரத்தை மாற்றியமைப்பதும் நிறுவனத்தின் ஒரு தொழிற்சாலையிலிருந்து இன்னொரு தொழிற்சாலைக்கு மாற்றுவதும் மிகவும் கடினம், கிட்டத்தட்ட முடியாதது (சில மாநிலங்களில் நூறுக்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ள நிறுவனங்களில், மற்றவைகளில் 50க்கு மேற்பட்ட தொழிலாளர்கள் உள்ள நிறுவனங்களில்). தொழிற்சங்க சட்டத்தின்படி ஒரு நிறுவனத்தில் பல தொழிற் சங்கங்களை அமைக்க வாய்ப்புள்ளது. ஏழு தொழிலாளர்கள் இணைந்து ஒரு சங்கத்தை உருவாக்க முடியும். பல தொழிற் சங்கங்கள் இருக்கும் அந்த நிறுவனத்தை நிர்வகிப்பது மிகவும் கடினமாக இருப்பதை நாம் உணரலாம். தொழிற்சங்க சட்டத்தின்படி சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்வதற்கும், முதலாளிகளுடனான தொழிற் தகரரில் சட்டபூர்வமாக பணியாளர்களின் சார்பில் பேச்சு நடத்த உரிமையும் உண்டு. ஏழு பேர் சேர்ந்து சங்கம் அமைக்க முடியும் என்ற நிலையில் இந்த சட்டம் ஏழு பேருக்கும் குறைவாக உள்ள நிறுவனங்களுக்கு பொருந்தாது. ஆகவே, ஒரு நிறுவனத்தில் ஏழு பேருக்கும் குறைந்த வேலை வாய்ப்பை வைத்து நிறுவனங்கள் செயல்படுவதால் அவை குறு தொழில்களாகவும், அதிக பணியாளர்கள் வேலை செய்யாத நிறுவனங்களாகவும் அமைகின்றன.

மற்ற பல தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளும் உண்டு. தொழிலாளர் நல அரசு காப்பீட்டு சட்டம், தொழிற் கூடங்கள் சட்டம், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி மற்றும் பிற 'ரத்துக்கள் சட்டம், குறைந்தபட்ச ஊதிய சட்டம், தாய் சேய் நல பயன் திட்டம் போன்றவைகள் பல்வேறு அளவில் வேலைசெய்யும் தொழிலாளர் உள்ள நிறுவனங்களுக்கும் பல வகையான நிறுவனங்களுக்கும் பொருந்தும் (பகவதி மற்றும் பனாகரியா 2013). இந்த தொழிலாளர் நல ஒழுங்குமுறைகள் மூலம் குறைந்தபட்ச பணியாளர்சார் நிலைமைகளும் பயன்களும் வரையறுக்கப்பட்டுள்ளன.



முடிவாக ஒப்பந்த தொழிலாளர் சட்டம் மூலம் ஒரு தொழிலில் ஒப்பந்தத் தொழிலாளர்கள் நியமிக்கப்படுவதின் அளவு நிர்ணயிக்கப்பட்டு நிரந்தர பணியாளர்களுக்கும் ஒப்பந்தப் பணியாளர்களுக்கும் உள்ள எண்ணிக்கை குறிக்கப்பட்டிருப்பதால், தொழில் நிறுவனங்கள் செலவை குறைக்க ஒப்பந்த பணியாளர்களை நியமிக்கும் செயல் தடுக்கப்பட்டிருக்கிறது. சில பணிகளுக்கு ஒப்பந்த பணியாளர்களை நியமிப்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

தொழில்துறை உறவுகள், இந்திய அரசியல் சாசன சட்டத்தில் மத்திய மற்றும் மாநில அரசுகள் இருவருக்கும் பொதுவான ஒன்றாக இருப்பதால் தொழில்துறை சச்சரவு சட்டம் மத்திய அரசின் சட்டமாக இருந்தாலும் மாநில அரசுகளும் அதனை தங்களுக்கு தேவையான வகையில் சட்டத்திருத்தம் செய்து கொண்டுள்ளன. அது மட்டுமல்லாமல், தொழிலாளர் நல சட்டங்கள செயல்படுத்துவது மாநில அரசுகளின் பொறுப்பாகும். ஆகவே, மாநிலங்களுக்கிடையே தொழிலாளர் சந்தை நிலைமை மாறுபடுகிறது.

## சமீப கால தொழிலாளர் நல சீர்திருத்தங்களின் முயற்சிகள்

இந்தியா சுதந்திரமடைந்ததற்கு பின்பு தொழிலாளர் நல சட்டங்களை மாநில அரசுகள் தங்கள் அணுகுமுறைக்கு ஏற்ப தொழிலாளர்களுக்கு சாதகமாகவோ, முதலாளிகளுக்கு சாதகமாகவோ சட்டத்திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. முன்பு ஏற்பட்டது போல் அல்லாமல் தற்போது தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளில் ஏற்படும் மாற்றங்கள் அந்நிய நேரடி முதலீட்டைப் பெறுவதற்காகவும், உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும், தாராளமயமாக்கப்பட்ட வர்த்தக நிலைமைக்கு ஏற்பவும் செய்யப்படுகின்றன. சமீபத்தில் ராஜஸ்தான் அரசு தொழில்துறை சச்சரவு சட்டத்தில் செய்யப்பட்ட திருத்தத்தின்படி ஒரு நிறுவனம் மாநில அரசிடமிருந்து முன் அனுமதி பெற வேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கை நூறிலிருந்து முன்னூறுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. அதுபோலவே தொழிற்கூடங்கள் சட்ட வரம்பிற்குள் வரும் பதிவு செய்யப்படவேண்டிய தொழிலாளர்களின் எண்ணிக்கையும் உயர்த்தப்பட்டுள்ளது. இந்த சட்டத்தின் படி



பணி செய்யும் நேரம், நாட்கள் குறைந்த பட்ச ஊதியம் ஆகியவை நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இது மட்டுமல்லாமல் ராஜஸ்தானில் ஒரு தொழிற் சங்கம் பதிவு செய்வதற்கு ஒரு நிறுவனத்தின் மொத்த பணியாளர்கள் எண்ணிக்கையில் 15 சதவிகிதம் இருக்க வேண்டும் என்று முன்பு இருந்ததை மாற்றி 30 சதவிகிதம் என்று உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் தொழிலாளர்கள் மற்றும் மேலாண்மைக்கும் இடையே தொழில் தகராறினால் ஏற்படும் கால நஷ்டம் குறையும். இது மட்டுமல்லாமல் இந்த மாநில அரசின் தொழிற் பயிற்சி சட்டம் திருத்தியமைக்கப்பட்டிருப்பதால் தொழிலாளர் திறமை, மேம்பாடு உயர்ந்து மனித வளம் மேம்படும்.

மத்திய அளவில் தொழிலாளர் நல சீர்திருத்தங்கள் மிக குறைந்த அளவிலேயே செய்யப்பட்டுள்ளன. பெரும்பாலும் அவை, மாநிலங்களின் பொறுப்பில் விடப்பட்டுள்ளது. சமீபத்தில் செய்யப்பட்ட ஒரு முக்கியமான சீர்திருத்தத்தின்படி நிறுவனங்கள் அரசு அமைத்துள்ள ஒரு ஒருங்கிணைந்த வலைதளத்தின் மூலம் 16 மத்திய தொழிலாளர் நல திட்டங்களை அவர்கள் செயல்படுத்துவது பற்றிய காலகட்ட படிவங்களை பதிவு செய்ய முடியும். அந்த பதிவுகள் கணிணி மூலமாகவே கணிக்கப்பட்டு எந்த நிறுவனங்களை ஆய்வாளர்கள் நேரடியாக பார்வையிட வேண்டும் என்பது நிர்ணயிக்கப்படும். ஆகவே, முன்பு இருந்த ஆய்வாளர்களின் அரசாங்கம் இப்போது இருக்காது. ஒரு நிறுவனத்தை நேரடியாக பார்வையிடுவது என்பதை ஆய்வாளர்கள் நிர்ணயிக்க மாட்டார்கள். அதனால் தொல்லைகளும், பணம் வசூலிப்பதும் குறையும். அது மட்டுமல்லாமல், சமீபத்தில் தொழிலாளர்களின் வருங்கால வைப்பு நிதி கணக்கை அவர்கள் வேலை மாறும் போது புதிய நிறுவனத்திற்கு தாங்களே மாற்றிக்கொள்ள முடியும் என்று அறிவித்த அரசின் சீர்திருத்தத்தின் காரணமாக தொழிலாளர்கள் ஒரு நிறுவனத்திலிருந்து மறு நிறுவனத்திற்கு மாறுவது அதிகமாகும். அதோடு, பயிற்சி பணி சட்டத்தில் ஏற்பட்டுள்ள மாறுதல்களால் தொழிலாளர்கள் திறன் மேம்பாடு வளரும். நிதியமைச்சர் சமீப பட்ஜெட்டில் அறிவித்தபடி திறன் மேம்பாட்டிற்கான புதிய அமைச்சகம் திறன் மேம்பாட்டுக்கான பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்த இருக்கிறது.

தொழிலாளர்களை பணிநீக்கம் செய்வதற்கு உள்ள தடைகள் காரணமாக அவர்களை வெளியேற்றுவது மிகவும் கடினம். இந்தியாவில் தொழில் நலிந்து கடனாளியாகும் நிறுவனங்கள் சார்ந்த சட்டங்கள் கடுமையாக இருப்பதால் பணியாளர்களை எளிதாக வேலை நிறுத்தம் செய்ய முடியாது. ஆகவே நிதியமைச்சர் பட்ஜெட்டில் அறிவித்துள்ளபடி தொழில் நலிந்து கடனாளி ஆகுபவர்கள் சார்ந்த சட்ட சீர்திருத்தம் காரணமாக இந்த நிலைமை சற்று மாறும் என்று எதிர்பார்க்கலாம்.

## தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளால் பொருளாதார செயல்பாடு பாதிப்பு

மேற்கூறியது போல மத்திய தொழிலாளர் நல சட்டங்களை ஒவ்வொரு மாநிலமும் தனக்கேற்ற வகையில் பல சட்ட திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. இது அல்லாமல், ஒவ்வொரு மாநிலத்திலும் அவைகளை செயல்படுத்தும் முறையும் மாறுபடுகிறது. இதனால் இறுகிய தொழிலாளர் சந்தையில் மாநிலத்துக்கு மாநிலம் வேறுபாடு இருப்பதை காணலாம். இதனால், பொருள் உற்பத்தி துறையில் தொழிற்சாலைக்கிடையேயும் நிறுவனங்களுக்கிடையேயும் மேல்மட்ட ஒரு குறிப்பிட்ட தொழில் அளவிலும் மாநிலங்களுக்கிடையே தொழிலாளர் சந்தை நிலவரம் எப்படி மாறுபடுகிறது என்பதை ஆய்வாளர்கள் கணிப்பதற்கு நல்ல வாய்ப்பு உள்ளது. பெஸ்லி மற்றும் பர்கஸ் (2004) இந்தத்துறையில் முதன்முறையாக ஆய்வு மேற்கொண்டனர். மாநிலங்களின் அளவிலான மொத்த பதிவு செய்யப்பட்ட பொருள் உற்பத்தி அளவு, மூலதனம் பணியாளர்களின் எண்ணிக்கை மற்றும் உற்பத்தித் திறன் ஆகியவைகளை ஆராய்ந்த போது தொழிலாளர்களுக்கு ஆதரவான கடுமையான ஒழுங்குமுறைகள் இருக்கும் மாநிலங்களில் உற்பத்தித் திறன் பாதிக்கப்பட்டிருப்பது அறியப்பட்டது. இதே காரணிகளை பதிவு செய்யப்படாத முறைப்படுத்தப்படாத பொருள் உற்பத்தித் துறையில் கணக்கிடும்போது இறுகிய தொழிலாளர் சந்தை நிலவரம் இருந்த போதும், இந்நிறுவனங்களில் உற்பத்தித் திறன் பாதிக்கப்படவில்லை. இதைப்போன்ற ஆய்வுகள் மேலும் பல மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ஹசன், குப்தா மற்றும் குமார் (2009) ஆகியோர் மாநிலங்களில் ஒரு குறிப்பிட்ட தொழில்துறை அளவில் ஆய்வு மேற்கொண்டனர். அதன்படி தொழிலாளர் நல கெடுபிடி உள்ள மாநிலங்களில் அதிக தொழிலாளர்களை ஈடுபடுத்தும் நிறுவனங்கள் குறைந்து காணப்பட்டு மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தது. இதன் அடுத்தக்கட்டமாக ஹசன் மற்றும் ஜென்டாக் (2013) முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறைப்படுத்தப்படாத பொருள் உற்பத்தித் துறையில் ஆய்வு மேற்கொண்டனர். தொழிலாளர் நல கெடுபிடி உள்ள மாநிலங்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையே எந்த ஒரு வேறுபாட்டையும் அவர்களால் காணமுடியவில்லை. ஆனால் தொழிலாளர்கள் மிகுந்த துறையை மட்டும் ஆய்வு செய்தபோது ஒன்பது பணியாளர்களுக்கும் குறைவாக உள்ள நிறுவனங்களில் பணியாளர்கள் அதிகமாக வேலை செய்வதும், இந்த நிலைமை தொழிலாளர் நல கட்டுப்பாடுகள் கெடுபிடியாக உள்ள மாநிலங்களில் அதிகமாக காணப்பட்டது. அதே சமயத்தில் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்யும் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு குறைவாக காணப்பட்டது. அவர்களின் ஆய்வில் தெரிய வந்த ஒரு முக்கிய தகவல் என்னவென்றால் இந்திய ஆடை தயாரிப்பு நிறுவனங்கள் பெரும்பாலும் ஒன்பது பணியாளர்களுக்கு குறைவான அளவில் உள்ளவற்றில் அதிக வேலை வாய்ப்பும் சீனாவில் 2000க்கும் அதிகமாக வேலை செய்யும் நிறுவனங்களில் அதிகமான நிறுவனங்களும், பணியாளர்களும் காணப்பட்டனர்.

சமீப கட்டுரையில் டவுஹர்டி, ஃப்ரிசான்கோ ராப்லஸ் மற்றும் கிருஷ்ணா (2014), தொழிற்சாலை அளவிலான முறைபடுத்தப்பட்ட மற்றும் முறைபடுத்தப்படாத நிறுவனங்கள் மற்றும் பலதரப்பட்ட வேலை பாதுகாப்பு திட்டங்களை கவனித்துக்கொண்டு சேகரிக்கப்பட்ட விவரங்களில் மிகுந்த தொழிலாளர்களை ஈடுபடுத்த வேண்டிய தொழிற்துறைகளிலும், பணியாளர்களின் தேவை அடிக்கடி பெருமளவில் மாறுபடும் நிறுவனங்களிலும், தொழிலாளர் கெடுபிடி குறைந்த மாநிலங்களில் உற்பத்தி திறன் 11–14 சதவிகிதம் உயர்ந்து காணப்பட்டது.

### தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளும், உலக மயமாக்கலும் : கூற்றும், ஆதாரமும்

மேற்காணப்பட்ட தொழிலாளர் நல கெடுபிடியால் ஏற்படும் தீய விளைவுகளால் இந்தியாவில் வர்த்தக மற்றும் அந்நிய நேரடி முதலீட்டுத் துறைகளில் பெரிய அளவிலான சீர்திருத்தங்களும் சிறுதொழில்களுக்கான ஒதுக்கீடு பணியாளர்கள் மிகுந்த தொழில்களில் விலக்கப்பட்டுள்ள நிலையிலும், ஜவுளித்துறையில் சில அங்கீகாரங்கள் ஒழிக்கப்பட்ட நிலையிலும் பணியாளர்கள் மிகுந்த தொழில் நிறுவனங்கள் அதிகமாக ஏற்படவில்லை. (பாக்வதி மற்றும் பனாகரியா 2013) அது மட்டுமல்லாமல் உணவு மற்றும் குளிர்பானங்கள், ஆடை தயாரித்தல், ஜவுளி, மரச்சாமான்கள் போன்ற அதிக திறன் தேவையில்லாத பணியாளர்கள் அதிகமாக தேவையான தொழில்களில் கடந்த இருபது ஆண்டுகளில் அவர்களில் மொத்த உற்பத்தி, நாட்டின் மொத்த உற்பத்தி விகிதத்தில் குறைந்தது. அதே சமயத்தில் மோட்டார் வாகனங்கள் பெட்ரோலியம், எண்ணெய் சுத்திகரிப்பு, கனரக பொருட்கள், தொலை தொடர்பு சாதனங்கள், மருந்துகள், நிதித்துறை, மென்பொருள் போன்ற திறன் மிக்க, நிதி அதிகமாக தேவைப்படும் தொழில்களின் பங்கு தேசிய மொத்த உற்பத்தியில் 1990–91ல் 41 சதவிகிதமாக இருந்தது 2007–08ல் 65 சதவிகிதமாக உயர்ந்தது. (தாஸ், வாத்வா மற்றும் கலிதா, 2009) ஆனால், இதற்கு நேர் எதிர் நிலையில் இந்தியாவில் தொழிலாளர்கள் மிகுந்து காணப்படுவதாலும், வர்த்தக தாராள மயமாக்கலாலும் (இதனால், தொழிலாளர்கள், இடுபொருள்கள், நிதி, நிர்வாகம் ஆகியவை அதிகம் தேவைப்படும் தொழில்கள் உருவாக வாய்ப்புள்ளன) தொழில் மிகுந்த பொருள் உற்பத்தித் துறை மிகுந்திருக்க வேண்டும். உண்மையில் ஆடைப்பொருட்கள் ஏற்றுமதியில் உலகச்சந்தையில் இந்தியாவின் பங்கு குறைந்து பங்களாதேஷ் மற்றும் சீனாவின் பங்கு உயர்ந்துள்ளது. மேற்குறிப்பிட்டுள்ளபடி சீனாவில் ஆடை தயாரிப்புத் துறையில் 2000க்கும் மேற்பட்ட பணியாளர்கள் உள்ள நிறுவனங்கள் அதிகமாகவும் இந்தியாவின் ஒன்பது பேருக்கும் குறைவான நிறுவனங்களில் உற்பத்தி அதிகரிப்பதால் பெரிய அளவில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் நமக்கு கிடைப்பதில்லை. ஆகவே, மிக ஏழ்மையான குறைந்த உள் கட்டமைப்பு வசதி கொண்ட லஞ்சம் அதிகமாக உள்ள பங்களாதேஷை விட இந்தியாவின் ஆடை தயாரிப்புத்துறையின் உற்பத்தித் திறன் குறைந்தே உள்ளது. இது கெடுபிடியான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகள் இந்தியாவில் கடைபிடிக்கப்படுவதால் ஏற்படும் தீய விளைவுகளை காட்டுகிறது. கடுமையான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளால் பணியாளர்கள் மிகுந்த இந்திய நிறுவனங்கள் மற்ற நாடுகளை ஒப்பிடும்போது எப்படி பாதிக்கப்படுகின்றன? உற்பத்தி செலவை அதிகமாக்குவதோடு தொழிலாளர் நல ஒழுங்குமுறைகள் கடுமையாக உள்ள நிலையில் நிறுவனத்தின் அளவும் குறைகிறது (பனாகரியா 2001). அதிக பணியாளர்களை ஈடுபடுத்தியிருக்கும் நிறுவனங்கள் மிகச்சிறியவைகளாக இருப்பதாலும், பெரிய அளவில் உற்பத்தி செய்வதால் ஏற்படும் நன்மைகள் கிடைப்பதில்லை. தொழிலாளர்கள் மிகுந்த நிறுவனங்களில், கெடுபிடியான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகள் இருப்பதால் பெரிய அளவில் உற்பத்தி செய்வதற்கு ஏதுவான தொழில்நுட்பத்தை தேர்ந்தெடுப்பது பாதிக்கப்படுகிறது. ஆகவே நிறுவனங்கள் குறைந்த பணியாட்களை ஈடுபடுத்தக்கூடிய தொழில் நுட்பங்களையே தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. இது மட்டுமல்லாமல், இந்த ஒழுங்குமுறைகள் சமச்சீராக நிறைவேற்றப்படுவதில்லை. ஆகவே இந்த ஒழுங்கு முறைகளில் சில கடைபிடிக்காத நிலையில் அவைகளை ஆய்வாளர்கள் கண்டுகொள்ளாமல் இருக்கலாம்.

கடுமையான தொழிலாளர் நல சட்டங்கள் இருப்பதால் சந்தை தேவைக்கு ஏற்ப பொருள் உற்பத்தியை உயர்த்துவதற்கும், தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்கும் முடிவதில்லை. இதனால், தொழிலாளர் நல சட்டங்கள் கெடுபிடியாக இல்லாத நாடுகளைவிட நம் நாட்டில் பாதிப்பு அதிகமாக உள்ளது. சந்தை நிலவரத்திற்கு ஏற்ப பணியாளர்களை குறைக்கவும் கூட்டவும் வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதால் மிகுந்த பயனுள்ளது என்பதை நாம் அறிய வேண்டும். ஆனால், கட்டுப்பாடு மிகுந்த தொழிலாளர் நல ஒழுங்கு முறைகளால் இந்த மாற்றங்கள் பாதிக்கப்படுகின்றன. இந்தக் கடுமையான சட்டங்களால், நிரந்தர பணியாளர்களை அமர்த்துவது குறைந்து தற்காலிக பணியாளர்களும், ஒப்பந்த பணியாளர்களும் மிகுந்தும் காணப்படுகின்றனர். இதனால், இவர்கள் அந்தந்த தொழில் நிறுவனங்களுக்கு ஏற்ற திறமைகளையும், பழக்க வழக்கங்களையும் பெற முடிவதில்லை. இது அல்லாமல், இந்த தொழில் துறையில் உள்ள நிறுவனங்கள் தொழிலாளர்கள் மிகுந்த தொழில் உற்பத்தியை மேற்கொள்ளாமல், முதலீடு மிகுந்த தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வேலை வாய்ப்பு குறைந்த வகையில் உற்பத்தியை மேற்கொள்வார்கள். ஆகவே, இந்தியாவின் சிறப்பான மிக அதிகமான பணியாட்களை பயன்படுத்தாமல் தொழிலாளர்கள் மிகுந்து தேவைப்படும் உற்பத்தி துறைகளை மேற்கொள்ள முடியாமல் நமது வாணிபம் பாதிக்கப்படும்.

அடுத்து உலக வர்த்தகத்துக்கும், தொழிலாளர் சட்டத்துக்கும் இடையே உள்ள நிலைமையும் அதனால், ஒரு நிறுவனத்தின் செயல்பாடு எப்படி பாதிக்கப்படுகிறது என்பதையும் காண்போம். 1988–2000 ஆண்டுகளுக்கான 15 மாநிலங்களின் ஆய்வை மேற்கொண்ட மித்ரா மற்றும் உரல் (2008), 10க்கும் மேற்பட்ட பணியாட்கள் கொண்ட நிறுவனங்களில் வர்த்தக சீர்திருத்தத்தால் தொழில் உற்பத்தித் திறன் உயர்ந்திருப்பது காணப்பட்டது. சிறிது மாற்றத்தை மேற்கொள்ளும் தொழிலாளர் சந்தை மாநிலங்களைக் காட்டிலும் இது 33 சதவிகிதம் அதிகம் காணப்பட்டது. இதைப்போலவே இந்த நிறுவனங்களில் பணியாளர்களின் எண்ணிக்கை, மொத்த உற்பத்தி, பொருளின் மதிப்பு கூட்டு, மூலதன ஈடுபாடு ஆகியவை உயர்ந்து காணப்பட்டது. ஆகவே, சுந்தரம் அஹசன் மற்றும் மித்ரா (2013) ஆய்வில் கண்டுபிடித்தபடி வர்த்தக தாராளமயமாக்கலால் முறைப்படுத்தப்படாத ஐந்து பணியாளர்களுக்கும் மேற்பட்ட தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு, உற்பத்தி மற்றும் மதிப்பு கூட்டல், தளர்ந்த பணியாளர்கள் சந்தை உள்ள மாநிலங்களைக் காட்டிலும் கடுமையாக தொழிலாளர் சந்தை உள்ள மாநிலங்கள் அதிகமாக காணப்பட்டது. இதனால், நாம் அறிவது என்னவென்றால், வர்த்தகம் ஊக்குவிக்கும் வளர்ச்சி என்பது கடுமையான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகள் இருந்த நிலையிலும், முறைபடுத்தப்படாத தொழில் உற்பத்தி அமைப்புகளுக்கு சாதகமாக அமைகிறது என்பது.

வர்த்தகத்திற்கும், தொழிலாளர் நல ஒழுங்கு முறைக்கும் உள்ள பரஸ்பர தாக்கத்தையும் வேறு ஒரு முறையிலும் அணுகலாம். பொருள் உற்பத்திக்கு தேவையான காரணிகளான நிலம், தொழிலாளர் எண்ணிக்கை, நிதி மற்றும் நிர்வாகம் இதில் எது ஒரு நாட்டில் மிகுதியாக உள்ளதோ அதை பயன்படுத்திதான் பொருள் உற்பத்தியையும் வர்த்தகத்தையும் உயர்த்த முடியும். ஆகவே, கடுமையான தொழிலாளர் சட்டங்கள் இதில் எந்தக்காரணியை அதிகம் பாதிக்கிறதோ அதனால், வர்த்தக மேம்பாடு உயர்வு தாழ்வு மாறுபடும். பல நாடுகளில் பல தொழில்களின் நிலைமையை ஆராய்ந்த (ஹசன், மித்ரா மற்றும் சுந்தரம் 2013a) பணியாட்களை அமர்த்துவது, நீக்குவது சுதந்திரம் குறைந்த பட்ச ஊதிய ஒழுங்குமுறைகள், வேலையில்லா கால கட்டத்தில் அளிக்கும் சலுகைகள் ஆகியவைகளைக்கொண்ட கடுமையான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளால் ஏற்படும் தொழிலாளர் சந்தை சீர்குலைவால் பொருள் உற்பத்தித் துறையில் நிதி மிகுந்த தொழில் முறைகள் உருவாகின்றன, குறிப்பாக தொழில்திறன் தேவைப்படாத தொழில்கள் மற்றும் சந்தை நிலவரங்களுக்கு ஏற்ப, தொழில்நுட்பத்திற்கு ஏற்ப தொழிலாளர் எண்ணிக்கையை மாற்றியமைக்க வேண்டிய நிறுவனங்களிலும் மிகுந்து காணப்படுவதாக கூறப்பட்டுள்ளது. ஆகவே, இவர்களின் ஆய்வின்படி இந்தியாவில், நாட்டு வளர்ச்சியின் கட்டம் வேறு வகையாக இருந்தாலும், நிதி அதிகம் தேவைப்படும் தொழில்நுட்பங்களே பயன்படுத்தப்படுகின்றன. ஆனால், சீனாவில் இதே போன்ற காகித தயாரிப்பு, அச்சுத்தொழில், தோல் பொருட்கள் துறை, ரப்பர் மற்றும் பிளாஸ்டிக், இரசாயன பொருட்கள், உலோகம் அல்லாத கணிமங்கள் அடிப்படை உலோகங்கள், உலோகப் பொருட்கள், மின்சார இயந்திரங்கள், கருவிகள் மற்றும் பெட்ரோலிய துறைகளில் பணியாளர்கள் மிகுந்த தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. கடுமையான தொழிலாளர் நல சட்டங்களுக்கும், வர்த்தகத்துக்கும் உள்ள ஈடுபாட்டை பார்க்கும் போது மற்றொரு நிலைமை தெரிய வருகிறது. ஹசன், மித்ரா, ரஞ்சன் மற்றும் அஹசன் (2012) மேற்கொண்ட ஆய்வில் தாராளமான தொழிலாளர் சந்தை உள்ள மாநிலங்களில் வர்த்தக தாராளமயமாக்கத்தால் வேலை வாய்ப்பின்மை குறைந்துள்ளது காணப்பட்டது. வணிக தாராளமயமாக்கப்பட்டதாலேயே 37 சதவிகிதம் வேலை வாய்ப்பின்மை குறைந்தது தெரிய வந்தது. 10க்கும் மேற்பட்ட பணியாளர்கள் பணியாற்றும் நிறுவனங்களை கணக்கில் கொண்டு 1988–1997 ஆண்டுகளுக்கான நிலைமையை ஆராய்ந்த ஹசன் மித்ரா மற்றும் ராமசாமி (2007) ஆகியவர்களின் ஆய்விலும் இதே நிலவரம் தெரிய வருகிறது. இதனால், தாராளமான தொழிலாளர் சந்தை நிலவரம் உள்ள மாநிலங்களில் வர்த்தக சீர்திருத்தங்கள் காரணமாக வேலைவாய்ப்பும், ஊதியமும் மிகுதியாக காணப்பட்டன. வர்த்தக தாராளமயமாக்கலால் தொழிலாளர்களின் நிலைத்து நிற்கும் தொழிலாளர்கள் பேரம் செய்யும் அதிகாரம் குறைவதாக ராட்ரிக் (1997) கூறுகிறார். இதற்கான ஒரு காரணம், வர்த்தக தாராளமயமாக்கத்திற்குப்பின் இடு பொருள்களின் விலை சந்தை போட்டா போட்டியால் குறைவதும் அதனால், அவைகளுக்கும் உள்ளூர் தொழிலாளர் செலவுக்கும் ஏற்படுகின்ற போட்டி. மற்றொரு வகை வர்த்தக தாராளமயமாக்கத்திற்குபின் உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கும், இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்கும் உள்ள போட்டி. இதன் பொருள் என்னவென்றால், ஊதிய உயர்வு ஏற்படும் போது பொருள் உற்பத்தியின் விலையும் உயர்வதால் அப்பொருட்களின் தேவையும் விற்பனையும் குறைந்து அதனால் வேலை வாய்ப்பும் குறைகிறது. இதனால் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட ஊதிய அளவு குறைய வாய்ப்புள்ளது. இதனால், வேலை இல்லாத நிலைமை உயரலாம். ஆனால், தொழிலாளர் சந்தை தாராளமாக இருந்தால் இதை தவிர்க்கலாம்.

**முடிவான கருத்துக்கள் : கொள்கை பரிந்துரைகள் மற்றும் அவைகளின் தாக்கம்**

இந்தியாவின் பழமையான மற்றும் கடுமையான தொழிலாளர் நல ஒழுங்கு முறைகளால் பொருள் உற்பத்தித்துறை மிகவும் பாதிக்கப்படுகிறது, குறிப்பாக தொழிலாளர் மிகுந்து தேவைப்படும் தொழில்கள், என்பதற்கு பெருவாரியான ஆதாரம் உள்ளது. இந்த ஒழுங்கு முறைகள் பொருள் உற்பத்தித் துறையில் அதனுடைய அளவை கட்டுப்படுத்தி பெருமளவு உற்பத்தி செய்வதால் ஏற்படும் லாபங்கள் நமக்கு கிடைக்கவில்லை. மேலும், நிறுவனங்கள் மூலதனம் அதிகமாக தேவைப்படும் தொழில் நுட்பங்களை நாடுவதால் இந்தியாவின் மிகப்பெரிய சொத்தான மனித வளத்தை நாம் பயன்படுத்த முடியவில்லை. இது மட்டுமல்லாமல் இந்த கடுமையான சட்டங்களால், தற்காலிக தொழிலாளர்களின் வேலை வாய்ப்பு அதிகரிக்கிறது. இவர்களுக்கு திறமையை அளிக்கவும் நிறுவனங்கள், விரும்புவதில்லை. தொழிலாளர்களும் பெறுவதில்லை. ஆகவே, இந்திய பொருள் உற்பத்தி நிறுவனங்கள் குறிப்பாக தொழிலாளர்கள் மிகுந்த தொழில்களான ஜவுளி மற்றும் ஆடைத் தயாரிப்பில் தொழிலாளர் சந்தை தாராளமாக இருக்கும் சீனா, பங்களாதேஷ், வியட்நாம் நாடுகளை ஒப்பிடும்போது மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளன.

ஆகவே, இந்தியாவின் பெருமளவிலான மக்கட் தொகைக்கு வேலை வாய்ப்பு அளிக்க தொழிலாளர்கள் மிகுந்த உற்பத்தி தொழில்களை நாம் பெருக்க வேண்டும் என்பது தெள்ளத்தெளிவாகிறது. சமீப காலமாக இந்தியாவின் சேவைத்துறைகள் மிக வேகமாக வளர்ந்து வந்தாலும் அவை நம் வளர்ச்சியின் முக்கிய உந்து சக்தியாக இருக்க முடியாது. ஏனென்றால், நன்கு கற்றறிந்த பணியாட்கள் அதிகம் இல்லாத நிலையில் இந்தத் துறை அதிகமாக வளர முடியாது. பணியாளர்களுக்கு இந்தத்துறையில் திறன் வளர்ப்பது என்பது பல ஆண்டுகளாகும். ஆகவே தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளில் சீர்திருத்தங்கள் ஏற்பட வேண்டும்.

என்ன வகையான தொழிலாளர் நல சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டும். தொழிற்கூடங்கள் சச்சரவு சட்டத்தில் உள்ள நூறு பணியாட்கள் என்பதை முன்னூறாக ராஜஸ்தானில் உயர்த்தப்பட்டுள்ளதை போல செய்ய வேண்டும். இந்த அளவு படிப்படியாக உயர்த்தப்பட்டு பின்னர் முழுவதுமாக நீக்கப்பட வேண்டும். இந்த சீர்திருத்தங்கள் தொழிற்கூடங்கள் சச்சரவு சட்டத்தின் VB அத்தியாயத்தை தாண்டிசெல்ல வேண்டும் என்று பெரும்பாலான ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். இதற்கு ஏற்ப இந்த பிரிவை, சட்டதிருத்தம் செய்யும் போது இந்தப்பிரிவு தொழில்நுட்ப மாறுதல் காரணமாகவோ, ஒரு பொருளின் சந்தை தேவை குறையும் போதோ ஏற்படும் ஆட்குறைப்புக்கும் பணி தெரிந்ததாயும் நிலைக்குப்பின் பணி நிரந்தரம் செய்யப்படாத நிலைக்கும் பொருந்தாது என்று மாற்றியமைக்க வேண்டும் என்று பாக்வதி மற்றும் பனாகரியா (2013) கூறியுள்ளனர். மேலும் தொழிற்கூட பணியமர்த்தல் (நிரந்தர உத்தரவுகள்) சட்டம் திருத்தியமைக்கப்பட்டு ஒரு பணியாளரை அவரின் திறமைக்கு ஏற்ப பொருத்தமான வேலைக்கு மாற்றுவதற்கு ஏதுவாக மாற்றியமைக்கப்பட வேண்டும். ஒரு நிறுவனத்தில் பிரச்சினைகள் ஏற்படுத்தி உற்பத்தி திறனை குறைக்கும் வகையில் உள்ள பல தொழிற் சங்கங்கள் இருக்கலாம் என்ற நிலைமை மாற்றப்பட வேண்டும். ஏற்கனவே குறிப்பிட்டபடி நிறுவனங்கள் பல தொழிலாளர்கள் சட்டங்களை தாங்கள் செயல்படுத்துவது பற்றிய அறிக்கைகளை தாங்களே கணிணி மூலம் தெரிவிக்கும் முறையால் ஆய்வாளர்கள் ராஜ்ஜியம் முடிவுக்கு வரும். இந்த திட்டத்தில் மேலும் பல தொழிலாளர் நல சட்டங்கள் சார்ந்த அறிக்கைகள் சமர்ப்பிப்பதையும் விரிவு படுத்த வேண்டும்.

இந்தியாவின் கடுமையான தொழிலாளர் நல ஒழுங்குமுறைகளால் பொருளாதார இழப்பு பரவலாக புரிந்து கொள்ளப்பட்டிருந்தாலும் இதற்கான சீர்திருத்தங்கள் அரசியல் ரிதியாக செய்ய இயலாதவை என்று நம்பப்படுகிறது. தொழிற் சங்கங்கள் அரசியல் ரீதியாக உருவாக்கப்பட்டுள்ளதால், அரசியலுக்கு அவைகள் அவசியமாக கருதப்படுகின்றன. ஆனால், நடைமுறையில் பார்க்கும்போது இவைகளை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுவ தில்லை. உதாரணமாக வர்த்தக தாராள மயமாக்கத்தால் இந்தியாவின் முறைப் படுத்தப்பட்ட தொழில்களில் பணியாளர்களின் பேரம் செய்யும் சக்தி குறைந்திருப்பதையும் அங்கு தொழிற் சங்கங்கள் குறைந்துள்ளதும், தொழிற்சங்கங்களில் பணியாளர்கள் சேர்வதும் குறைந்து காணப்படுகின்றன ஆகவே, கொஞ்சம் கொஞ்சமாக தொழிலாளர் நல ஒழுங்கு முறைகள் சீர்திருத்தம் செய்யப்படும் போது அதற்கு எதிரான அரசியல் எதிர்ப்புகளும் குறையும், அரசியல் ஆதரவு பெருகும். ஏனெனில், இந்த சீர்திருத்தங்கள் தங்களுக்குத்தான் பயனளிக்கின்றன என்று தொழிலாளர்கள் உணர்வார்கள். ●

# இந்தியாவில் விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் தொடர்பான அறிவுசார் சொத்துரிமைப் பிரச்சனைகள்

– அஸ்வினி சிவால்

குளிர்பானங்கள், சுத்தம் தொடர்பான சோப், திரவம் முதலானவை, மருந்துப் பொருட்கள், பேக் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள், பால் பொருட்கள், பேக்கரி பொருட்கள் முதலானவையும் விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் (இனி இவை எஃப்.எம்.சி.ஜி. எனக் குறிக்கப் பெறும்) என அழைப்பார்கள்) அல்லது பேக் செய்யப்பட்ட நுகர்வுப் பொருட்கள் என்றும் அழைப்பார்கள். இவை குறுகிய கால சரக்குகள் ஆகும். ஒப்பீட்டு ரீதியில் குறைந்த விலைக்கு கடைகளிலும் சூப்பர் மார்க்கெட் அடுக்குகளிலும் இவை விற்பனைக்குக் கிடைக்கும். எஃப்.எம்.சி.ஜி. வர்த்தகம் பிராண்ட் பெயரிடுவதற்கும், பிராண்ட் பாதுகாப்புக்கும் தூண்டுதலாக உள்ளது. சரக்குகளை உற்பத்தி செய்பவர் / சரக்கின் மூல இடம் குறித்த அடையாளப்படுத்துதலில் பிராண்ட் என்பது மிக முக்கிய பங்கை ஆற்றுகின்றது. பிராண்ட் உத்தி என்பது சரக்கை அடையாளப்படுத்துவதிலும் சரக்கோடு நுகர்வோருக்கு நல்லெண்ண சேர்க்கையை உருவாக்குவதிலும் முதன்மைப் பங்கை ஆற்றுகின்றது. அதே சமயம் ஒன்று போலத் தோன்றும் மற்றும் போலி மருந்துகள் ஒரிஜினல் சரக்குகளோடு அடையாளம் காணப்படுகின்றன. (உச்சரிப்பு ரீதியில் அல்லது காட்சி ரீதியில்). இது நுகர்வோர்கள் மனதில் குழப்பதை ஏற்படுத்திவிடுகின்றது. ஏனெனில்இவர்களுக்குபழையவிஷயங்களை முழுமையாக ஞாகப்படுத்திக்கொள்ள முடியாது. இந்தியாவில் 80% நுகர்வோர்கள் எஃப்.எம்.சி.ஜி. பொருட்களை வாங்கும் போது போலி பொருட்களால் ஏமாற்றப் படுகின்றார்கள். நாம் நம்பகமான / அசலான சரக்குகளைத்தான் வாங்குகின்றோம் என அவர்கள் நம்பிவிடுகிறார்கள். இதனை இந்திய வர்த்தக மற்றும் தொழில் சபைகளின் கூட்டமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

பிராண்டை திருட்டு மற்றும் போலி சரக்குகளில் இருந்து காப்பாற்றுவது என்பது வளர்ந்து வரும் சர்வதேச சவாலாக உள்ளது. இந்தப் பிரச்சனைக்கு இந்தியாவின் எஃப்.எம்.சி.ஜி.யின் சந்தை விதிவிலக்கல்ல இந்தியாவின் எஃப்.எம்.சி.ஜி.க்கு மிகப் பெரிய அடித்தளம் இருக்கிறது. 2013ல் இந்த வர்த்தக மதிப்பு 44.9 பில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். இது 2020ல் 135 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்கும். போலிகளுக்கு எதிராக நடவடிக்கைகள் பின்தங்கியே உள்ளன. போலி மற்றும் அறிவுசார் சொத்துரிமை மீறல் அகியவை தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கம் மற்றும் தொழில்துறையினரிடம்தான் உள்ளது. ஆனால் நடவடிக்கைகள் மந்த மாகவே இருக்கின்றன. எஃப்.எம்.சி.ஜி. பிரிவில் போலியும் நகலும் ஆகிய பிரச்சனைகளை சந்தையில் புதிதாக நுழைபவர்கள் எளிதாக எதிர்கொள்ள முடியாமல் தடுமாறுகிறார்கள். இந்தியாவில் கடந்த சில ஆண்டுகளில் பேக்கேஜ் செய்யப்பட்ட உணவுப் பொருட்களுக்கான தேவை கிராமங்களிலும்கூட பெரிய அளவில் அதிகரித்துள்ளது. இதுவே போலிகளும் நகலும் அதிகரிக்கும் போக்குக்கு காரணமாகின்றது. கடந்த சில ஆண்டுகளில் பதப்படுத்தப்பட்ட உணவுத் தொழிலும் வேகமாக வளர்ந்து வருகின்றது. இதுவும் எஃப்.எம்.சி.ஜி. பிரிவில் ஏற்கனவே உள்ள கள்ளச் சரக்குகள் என்ற பிரச்சினையை அதிகமாக்கி விடுகின்றது.

உலகம் முழுவதும் அறிவுசார் சொத்துரிமை நடைமுறையாக்கல் என்பது அறிவுசார் பொருட்களை வெளிப்படையான காட்சிப் பொருளாக்கி உள்ளது. மேலும் உயிரியல் பொருட்களைக்கூட இருமடங்காக தனது எல்லைக்குள் அது கொண்டு வந்துள்ளது. அறிவுசார் சொத்துரிமை நடைமுறை என்பது புத்தாக்கத்தில் ஈடுபடுவோரின் வளர்ச்சிக்கும் அதன்மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் முதன்மையாக உதவி வருகின்றது. இந்த அறிவுசார் சொத்துரிமை நடைமுறையாக்கல் இரண்டுவிதமான செயல்பாடுகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக இது படைப்பாளி/புத்தாக்கம் உருவாக்குபவருக்கு அறிவுசார் சொத்துரிமையை வழங்குவதன் மூலம் அவர்களை ஊக்கப்படுத்துகின்றது. (சொத்தின் பலன்களை) தனி நபர் உரிமை ஒதுக்கீடு செய்வதன் மூலம் இது சாத்தியமாகின்றது. (ஆனாலும்கூட உரிமை பாதுகாப்புக்கான காலக்கெடு முடிந்தபிறகு இறுதியில் அந்த சொத்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு வந்துவிடுவதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இரண்டாவது செயல்பாடு சமூக பாதுகாப்பு சார்ந்தது ஆகும். சந்தையில் பேராசை கொண்ட நபர்கள் மூலம் நுகர்வோர்கள் ஏமாற்றப்படுவது தடுக்கப்படுகின்றது. அறிவுசார் சொத் துரிமையை அதன் முழு அளவில் நடை முறைப்படுத்தும்போது நாடுகள் தங்களது பொருளாதார வளர்ச்சிக்கான இலக்குகளை அடைவது உறுதிப்படும். கள்ளச் சந்தை வர்த்தகம் நாட்டுக்கு இழப்புதான். பல்வேறு சரக்குகள் கள்ளச் சந்தையில் விற்பதால் 2012ஆம் ஆண்டில் நம் நாட்டுக்கு ரூ.26,000 கோடி அளவுக்கு பொருளாதார நஷ்டம் ஏற்பட்டுள்ளது. இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் சபைகளின் கூட்டமைப்பும் பொருளாதாரச் சீரழிவுக்கும் கடத்தல் மற்றும் கள்ளச் சந்தை நடவடிக்கைகளுக்கு எதிரான கமிட்டியும் (கேஸ்கேட்) மதிப்பிட்டுச் சொல்லியுள்ள இழப்பு இதுவாகும். வாகன உதிரிபாகங்கள், மது, கணிப்பொறி, வன்பொருட்கள் விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் (தனி நபர் பயன்பாட்டு பொருட்கள் மற்றும் பேக்கிங் செய்யப்பட்ட உணவுப் பொருட்கள்), மொபைல் போன், புகையிலைப் பொருட்கள் போன்ற பிரிவுகளில் போலியான சரக்குகள் மூலம் அரசுக்கு ஏற்பட்ட வரி இழப்பு 2012ஆம் ஆண்டில் ரூ.26,196 கோடியாகும். தொழில்துறைக்கு விற்பனை இழப்பு ரூ.72,969 கோடி என கணக்கிடப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் விரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள் பிரிவில் போலியான பிராண்டுகள் மூலம் அரசுக்கு ஏற்பட்ட மொத்த இழப்பின் மதிப்பு ரூ.16,546 கோடியாகும். விரைவாக விற்பனை ஆகும் நுகர்வுப் பொருட்கள் பிரிவில் மட்டும் கள்ளச்சந்தை / போலி ஆகியவற்றில் டிரேட் மார்க் மற்றும்வடிவமைப்பு பிரச்சினைகள்தான் முக்கியமான முதன்மையான பிரச்சினைகளாக உள்ளன.

## டிரேட் மார்க் பிரச்சினைகள்

வர்த்தகச் செயல்பாட்டில் ஒரு நபர் வழங்கும் சரக்கு அல்லது சேவைகளில் இருந்து அடுத்தவரின் சரக்கு அல்லது சேவைகளைப் பிரித்துத் தனிப்பட காட்டப் பயன்படுத்துவதுதான் வணிகக் குறி (டிரேட் மார்க்) ஆகும். டிரேட் மார்க்கை பதிவு செய்ய வேண்டும் என்பது கட்டாயம் இல்லை என்றாலும்கூட பதிவு செய்வது என்பது தலைப்புக்கான முதன்மை சாட்சியமாக அமைகின்றது. டிரேட் மார்க்கை பதிவு செய்த உரிமையாளருக்கு அதைப் பயன்படுத்தும் பரிபூரண உரிமை கிடைக்கிறது. கூடவே உரிமை மீறல் எனும்போது சட்ட நடவடிக்கை எடுக்கவும் உதவுகிறது. ஒரு வணிகக் குறி பதிவு செய்யப்படவில்லை என எடுத்துக் கொள்வோம். இந்த வணிகக் குறிக்கான உரிமை பெற்றிராத மற்றொருவர் இதே வணிகக் குறியைப் பயன்படுத்துகிறார். இந்தச் சூழலில் வணிகக் குறிக்கு உண்மையான உரிமைதாரர் பாசிங்–ஆப் (passing off) முறையில்தான் பொதுச்சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

நுகர்வோர் பொருட்களை வாங்கும்போது பிராண்ட் பற்றிய அனைத்து அம்சங்களையும் உடனடியாக

**அஸ்வினி சிவால்,** தில்லி பல்கலைக்கழகத்தில் சட்டத்துறையில் அறிவு சார் சொத்துரிமைச் சட்ட உதவிப் பேராசிரியராக உள்ளார். அறிவுசார் சொத்துரிமை சட்டம் மற்றும் தகவல் பாதுகாப்பு சட்டம் ஆகியவற்றில் ஆர்வம் கொண்டவர்

ஞாபகப்படுத்திப் பார்க்க முடிவதில்லை. இந்த மறதி அல்லது கவனக் குறைவுதான் அவர்களை ஏமாற வைத்துவிடுகின்றது. ஒன்று போல தோற்றமளிக்கும் பேக்கிங், கிட்டதட்ட ஒரே மாதிரியான வண்ணம், வார்த்தைகளில் திட்டமிட்டு எழுத்துக்களை மாற்றிப் போடுதல், ஓரிரு எழுத்துகளை மட்டும் மாற்றுதல் போன்ற செயல்கள் மூலம் நுகர்வோர் குழப்ப நிலைக்குத் தள்ளப்படுகின்றனர் / ஏமாற்றப்படுகின்றனர். கள்ளச் சந்தைக்கு அதிகம் ஆட்படுவது உணவு பதப்படுத்துதல் தொழில் மற்றும் பேக்கிங் செய்யப்பட்ட உணவுகள்தாம். இந்தியாவில் ஒருங்கிணைக்கப்படாத தொழில் பிரிவாக உள்ள உணவுப் பொருள் சந்தையில் போலிகள் என்பது மக்களின் ஆரோக்கியத்தில் சீர் செய்ய முடியாத பாதிப்புகளை ஏற்படுத்திவிடும். மருந்தக மருந்துப் பொருட்களில் குழப்பத்துக்கும் ஒன்றேபோல் இருப்பதற்கான வாய்ப்பும் அதிகமாக உள்ளன. மருந்துப் பொருட்கள் பற்றிய ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றது. எஃப். ஹாஃப்மன்–லா ரோஷ் & கம்பனி லிமிட்டுக்கும் ஜியாஃபெரி மேன்னர் & கம்பெனி *(பி)* லிமிட்டுக்கும் இடையில் நடந்த வழக்கு (1969) 2 sec 716) இதுவாகும். இதில் வாதிக்குச் சொந்தமான மருந்தின் "புரோடோவிட்" என்ற பெயர் பிரதிவாதியின் மருந்தான "ட்ரோபோவிட்" என்ற பெயரைப் போலவே இருக்கின்றது என்பதுதான் வழக்கின் வாதம். இந்த இரு வார்த்தைகளைப் பற்றியும் பரிசோதித்துப் பார்க்க நீதிமன்றம் முடிவு செய்தது. அப்போது நீதிமன்றம் தெரிவித்த கருத்தாவது *(*sec பாரா *7)*

இரண்டு வார்த்தைக் குறிகளை ஒப்பிட்டு ஆராய்வதற்கான பரிசோதனை லார்டு பார்க்கரால் வகுக்கப்பட்டு பியானோடிஸ்ட் கோ லிமிட்டின் விண்ணப்பத்தில்கீழ் வருமாறு தரப்பட்டுள்ளது.

நீங்கள் இரண்டு வார்த்தைகளையும் எடுத்துக் கொள்ள வேண்டும். அவற்றின் வடிவம் மற்றும் அவற்றின் உச்சரிப்பு ஒலி இரண்டின் அடிப்படையில் நீங்கள் அச் சொற்களை மதிப்பிட வேண்டும். அச் சொற்கள் எந்தப் பொருட்களுக்காகப் பயன்படுத்தப்பட உள்ளதோ அப்பொருட்களையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்தப் பொருட்களை வாங்கக் கூடிய வாய்ப்புள்ள வாடிக்கையாளர் இயல்பு மற்றும் வகை பற்றியும் நீங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். நிஜத்தில் நீங்கள் சூழ்ந்துள்ள சுற்றுப்புற அம்சங்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த இரண்டு டிரேட் மார்க்குகளும் வழக்கமான நடைமுறையில் பயன்படுத்தப்பட்டால் அதாவது அந்தந்த உரிமையாளர் அந்தந்த டிரேட் மார்க்குகளை தங்களது சரக்குக்குப் பயன்படுத்தினால் என்ன நிகழும் என்பதையும் நீங்கள் கருதிப் பார்க்க வேண்டும். இத்தகைய எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு பார்த்தால், குழப்பம் நேரிடலாம் என்ற முடிவுக்கு நீங்கள் வருவீர்கள். ஒருவர் பாதிக்கப்படுவார், மற்றொருவர் முறையற்ற லாபத்தைப் பெறுவார் என்பது மட்டுமல்ல. கூடவே மக்கள் மனதில் குழப்பமும் ஏற்படும். இது சரக்குகள் பற்றிய குழப்பத்தையும் ஏற்படுத்தும். ஆகவே பிறகு நீங்கள் பதிவு செய்ய மறுக்கலாம் அல்லது இந்த வழக்கில் பதிவு செய்ய நிச்சயம் மறுத்துவிடலாம். காட்சி ரீதியான மற்றும் உச்சரிப்பு ஒலி சார்ந்த இரண்டு பரிசோதனைகளையும் நடைமுறைப்படுத்த வேண்டியது கட்டாயமானதாகும் என நீதிமன்றம் சொல்கின்றது.

பிரபலமான வழக்கான கேடிலாஹெல்த் கேர் லிமிட்டெடுக்கும் கேடிலா ஃபார்மாசூட்டிகல்ஸ் லிமிட்டெடுக்கும் இடையிலான வழக்கில் 2001 P2ØC 541 (SC) மீண்டும் இந்திய உச்சநீதிமன்றம் இதே போல சொல்லியுள்ளது. "ஃபால்சிகோ" மற்றும் "ஃபால்சிடேப்" ஆகிய சொற்கள் பற்றிய பிரச்சனைதான் வழக்காகும். உச்ச நீதிமன்றம் இந்த வழக்கில் கூறியதாவது; "சரக்குகள் மருந்துப் பொருட்களாக இருக்கும் சந்தர்ப்பத்தில் குழப்பம்தரும்ஒன்றேபோலான வார்த்தைகள் பற்றிய பரிசோதனைகள் திருத்தியமைக்கப்படுகினற்ன. மருந்துப் பொருட்களுக்கு இடையில் மூலப் பொருளிலோ அல்லது இறுதிப் பொருளிலோ குழப்பம் இருந்தால் அது உடல் ரீதியாக தீங்குகளை வாங்குபவர்களுக்கு ஏற்படுத்தக்கூடும். எனவே வழக்கமான வழக்கைவிட இதற்குக் கூடுதல் பாதுகாப்பு தேவை. சம்பந்தப்பட்ட சரக்குகள் மருந்துப் பொருட்களாக இருந்தால், அதுவும் மிக மேலோட்டமான வித்தியாசமான பயன்பாடுகளுக்காக வடிவமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் வித்தியாசமான விளைவுகளோடு இருந்தால் ஒன்றே போலான குறியீடுகள் சரக்குகளுக்கிடையில் குழப்பத்தை ஏற்படுத்தும். இது பாதகமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்தக் காரணங்களுக்காகத்தான் மருந்துகள் மற்றும் தயாரிப்புகளுக்கு குழப்பம் ஏற்படுத்தும் ஒன்றே போல இருக்கும் தன்மை மிகக் குறைவானதாக இருக்க வேண்டும். இதே போன்ற தர அளவு அறுவை சிகிச்சை தையல், தோள் பட்டைக்குப் போடப்படும் பட்டை போன்ற மருத்துவப் பொருட்களுக்கும் கடைபிடிக்கப்பட வேண்டும்.

சில ஆய்வுகளின்படி, இந்தியாவில் மருந்துப் பொருள் சந்தையில் *20%* வரை போலி மருந்துகள் இருக்கின்றன. வாழ்க்கைமுறை சம்பந்தமான மருந்துகள் *(*உதாரணம் : வயாகரா*)* என்று மட்டுமல்லாமல், மிக முக்கிய மருந்துகளான இருமல் சிரப், வலி நிவாரணி, விட்டமின் இணைப் பொருள் போன்றவற்றிலும் போலிகள் உள்ளன. மருந்துகளில் போலி பற்றிய இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக் காட்டுவது என்னவென்றால் நடவடிக்கை எடுக்க இதுவே சரியான காலகட்டம் என்பதைத்தான். மேற்சொன்ன பிரபலமான வழக்குகளில் உச்ச நீதிமன்றம் கூறியுள்ள வழிமுறைகளுடன் அறிவுசார் சொத்துரிமை சட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்தியாக வேண்டும்.

## வடிவமைப்பு பிரச்சனைகள்

டிரிப்ஸ் (TRIPS) உடன் ஒத்திசைந்ததாக இருப்பதை உறுதிப்படுத்த வடிவமைப்புச் சட்டம் *2000* நடைமுறையில் உள்ளது. ஒரு வடிவமைப்பை உருவாக்குபவருக்கு இச்சட்டம் தனிப்பட்ட உரிமைகளைத் தருகின்றன. அதேபோல் சொத்துக்கு உரிமையாளருக்கு அந்த வடிவமைப்புச் சார்ந்த பதிப்புரிமையையும் இந்தச் சட்டம் வழங்குகின்றது. இதில் மீறல் ஏதும் இருந்தால் அதற்கான இழப்பீட்டுக்கும் இந்தச் சட்டத்தில் இடம் உள்ளது. கீழ்வரும் செயல்கள், அங்கீகரிக்கப்படவில்லை என்றால் அது உரிமை மீறிய திருட்டு எனக் கருதப்படும்.

விற்பனையை நோக்கமாகக் கொண்டு ஒரு பொருளுக்கு அச்சு அசலான நகலைத் தயாரித்தல், ஏமாற்றுதல், அதைப் போலவே வடிவமைத்தல்.

அத்தகைய பொருளை விற்பனைக்காக இறக்குமதி செய்தல்.

வடிவமைப்பு பயன்படுத்தப்படுள்ளது எனத் தெரிந்தும் அத்தகைய பொருளை விற்பனைக்காக விளம்பரப்படுத்துதல் அல்லது வெளிப்படுத்துதல்

வடிவமைப்புச் சட்டம் முன் வைக்கும் தடைகள் இந்திய எஃப்.எம்.சி.ஜி. பிரிவில் அதிக அளவில் மீறப்படுகின்றன. தினசரி பயன்பாட்டுக்கான பல பொருட்கள் திட்டமிட்டே ஏமாற்று முறையில் நகல் செய்யப்படுகின்றன. சட்டம் ஏமாற்றான அல்லது திட்டமிட்ட நகல் செய்வதை கட்டுப்படுத்துகிறது. ஆனால் சட்ட அமலாக்கம் இரும்புப் பிடியாக இல்லை. இந்தியாவில் உள்ள நீதிமன்றங்கள் பல தருணங்களில் வடிவமைப்புச் சட்டத்தை அமலாக்குவதை தீவிரப்படுத்த வேண்டிய தேவையை எடுத்துச் சொல்லியுள்ளன. ரெக்கிட் பென்கிஸெர் இந்தியா லிமிட்டுக்கும் வேய்த் லிமிட்டுக்கும் இடையிலான வழக்கு *15* மார்ச் *2013* தில்லி நீதிமன்ற முழு அமர்வுக்கு முன் வந்தது. எஸ். வடிவ ஸ்பாடுலாவுக்காக *99–90* வகைப்பாட்டில் டிசம்பர் *5, 2003*ல் ரிக்கெட் நிறுவனம் வடிவமைப்பு எண்.*193988* உடன் வடிவமைப்புப் பதிவு செய்திருந்தது. இந்த வடிவமைப்பு உரிமையை வேய்த் மீறிவிட்டதாக வாதியான ரிக்கெட் வழக்கு தொடுத்து இருந்தது. இந்த முடிவை நீக்குவதற்கு பயன்படுத்தப்படும் கிரீமை பிரயோகிக்க ஸ்பாடுலா உதவுகின்றது.

விரைவாக விற்பனையாகும் நுகர்வுப் பொருட்கள் பலவற்றில் வடிவமைப்பு தொடர்பான வழக்குகள் நாட்டின் பல

நீதிமன்றங்களில் நடந்து வருகின்றன. பணம் மற்றும் நுகர்வோர் திருப்தி என்பவற்றை வைத்துப் பார்த்தால், தொழில்துறை சந்தித்த இழப்பு அதிகம். இந்த இழப்போடு ஒப்பிட வழக்குகள் ஒன்றுமில்லாததாகிவிடுகின்றன.

### பரிகாரங்கள்/நிவாரணங்கள்

நுகர்வோர் பொருட்களில் போலிகள் என்ற நடவடிக்கையை எதிர்கொள்ள பல்வேறு சட்டங்கள் உள்ளன. தற்போது தவறாக நடப்பவர் மீது நடவடிக்கை என்பது இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் அல்லது அறிவுசார் சொத்துரிமை சட்டங்களின் கீழ் எடுக்கப்படுகின்றன. அறிவுசார் சொத்துரிமை சட்டமும் இந்திய குற்றவியல் சட்டமும் வலிமையானவையாக இருந்தாலும்கூட, எஃப்.எம்.சி.ஜி. போலி என்பது நின்றபாடில்லை. அறிவுசார் சொத்துரிமை என்பது சட்டத்தின் ஒரு பிரிவுதான். இது எஃப்.எம்.சி.ஜி. பொருட்களைப் பொறுத்து உரிமை மீறல் மற்றும் போலி எனும் பிரச்சனை எழும்போது சிவில் மற்றும் கிரிமினல் பரிகாரங்களை இச்சட்டம் தருகின்றது.


நிர்வாக அமைப்பு, நீதித்துறை போன்ற பல பிரிவுகள் அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்புக்கு தற்போது உள்ளன. இவை சிவில் பரிகாரங்களை வழங்குகின்றன. காவல் மற்றும் புலனாய்வு ஏஜென்சிகள், கூட்டமைப்புகள் மற்றும் சங்கங்களும் சிவில் மற்றும் கிரிமினல் நிவாரணங்களைத் தருகின்றன. சிவில் மற்றும் கிரிமினல் பரிகாரங்கள் இரண்டையும் பயன்படுத்தி மேலும் உரிமை மீறல் நடக்காதவாறு தடுக்கலாம். போலி சரக்குகளைக் கைப்பற்றவும் நிறுத்தி வைக்கவும் இடைக்கால ஆணை வழங்கப்படலாம். உரிமை மீறல்/போலி பொருட்களை நிறுத்தி வைப்பதற்காக வழங்கப்பட இடைக்கால ஆணைகளில் சில இந்திய நீதிமன்றங்கள் மற்றும் வெளிநாட்டு நீதிமன்றங்கள் மூலமாக உருவானவையாகும். ஆன்ட்டன் பில்லர் ஆர்டர், மரீவா இடைக்கால ஆணை, ஜான் தோ ஆர்டர், நார்விச் ஆர்டர், போன்றவை சிறந்த உதாரணங்கள் ஆகும். நீதிமன்றங்கள் சேதாரத்துக்கு தீர்வை வசூலிக்கவும் முடியும்.

மேற்சொன்ன நடவடிக்கைகளைத் தாண்டியும் போலி என்ற பிரச்சனை அசுரத்தனமாக இருக்கிறது. இது நோய்ப் பரவல் போல உள்ளது. எஃப்.எம்.சி.ஜி. பொருட்களில்போலிகள்என்றபிரச்சனையை எதிர்கொள்ள அனைத்தையும் உள்ளடக்கிய ஒற்றைச் சட்டம் இந்தியாவில் இல்லை. ஆனால் விதிமீறல்களை எதிர்கொள்ள பல்வேறு சட்டங்களை சந்தர்ப்பத்துக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ள முடியும். அறிவுசார் சொத்துரிமை பற்றிய விழிப்புணர்வு, பொதுமக்கள் பிராண்ட் பற்றிய கவனம் உடையவர்களாக மாற்றுதல் ஆகியன சாத்தியமான, நம்பிக்கை தரக்கூடிய செயல்களாக உள்ளன. இருந்தாலும் இந்த மோசமான அச்சுறுத்தும் நடவடிக்கையை எதிர்கொள்ள மேலும் சில தீர்வுகளை நாம் கண்டடைந்தாக வேண்டும். உற்பத்தி, வாகனம், உணவு பதப்படுத்தல் முதலான பிரிவுகளில் முதலீடு செய்ய அந்நிய முதலீட்டாளர்களை ஊக்கப்படுத்தும் “இந்தியாவில் உற்பத்தி செய்யுங்கள்”போன்ற திட்டங்கள் மூலம் அந்நிய முதலீட்டுக்கான திறந்த சந்தையாக இந்தியா மாறிவருகின்றது. வரும் காலத்தில் இதன்படி புதிய உணவு பதப்படுத்துதல் தொழிற்சாலைகள், உற்பத்தி தொழிற்சாலைகள் இந்தியாவில் நிறுவப்பட உள்ளன. இத்தகைய உற்பத்தி தொழிற்சாலைகளுக்கும் அறிவுசார் சொத்துரிமை சார்பாக இப்போது இருக்கின்ற அதே இந்தியச் சட்டங்களும் விதிமுறைகளும்தான் தொடரும். இந்தியாவில் போலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு புதுவிசை கொடுக்க வேண்டியது அரசின் முக்கிய கடமையாகும். குறிப்பாக அறிவுசார் சொத்துரிமை தொடர்பான பிரச்சனைகளுக்கு எதிரான நடவடிக்கைகளுக்கு புது உந்துதல் தரப்பட வேண்டும். அப்போதுதான் "இந்தியாவில் தயாரிப்புகள்" போன்ற திட்டங்கள் அதிக பட்ச பலன்களைத் தர முடியும். ●



# நிறுத்துங்கள்...!!!
# உங்கள் தட்டில் உள்ள உணவு பாதுகாப்பானதா?

– முனைவர் தி.சிவக்குமார்




### உலக சுகாதார தினம்: ஏப்ரல் 7

தட்டு நிறைய பலவகை உணவு பதார்த்தங்கள். அல்லது தலைவாழை இலையில் விருந்து பரிமாறப்பட்டு உள்ளது. பசியோடும் ருசிக்காகவும்பரபரத்து உட்கார்ந்துஇருக்கிறீர்கள். உணவில் கையை வைக்கப் போகின்றீர்கள். நிறுத்துங்கள்!!! என்றொரு குரல் கேட்கிறது. திகைக்கிறீர்கள். உங்களை அழைத்தது உலக சுகாதார நிறுவனம். அக்குரல் தொடர்கின்றது: ”நிறுத்துங்கள். உங்கள் தட்டில் / இலையில் உள்ள உணவு பாதுகாப்பானதா?”. பதில் கூறத் தெரியவில்லை உங்களுக்கு. பார்ப்பதற்கு அழகாகத்தான் இருக்கிறது. ஒவ்வொரு உணவும் ஒவ்வொரு நிறத்தில். வாசமும் நாசியைச் சூழ்கிறது. ஐம்புலனும் உணவில் குவிந்துள்ளன. இப்போதுதானா இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும் என உங்களுக்குத் தோன்றுகிறது. உலக சுகாதார நிறுவனம் இந்தக் கேள்வியை இப்போது கேட்பதுதான் நியாயம்.

### உலக சுகாதார தினம்

உலக சுகாதார நிறுவனம் (WORLD HEALTH ORGANISATION) ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல்7ஆம் தேதியை உலக சுகாதார தினமாக கடைபிடித்து வருகின்றது. ஏனெனில் அன்றைய தினம்தான் இந்த நிறுவனத்தின் பிறந்த நாள் ஆகும். சர்வதேச அளவில் பொது சுகாதாரத்திற்கு பிரச்சனையாக உள்ள விஷயங்களில் முக்கியமான ஒன்று இந்த உலக சுகாதார தினத்தின் மையக்கருத்தாக அறிவிக்கப் பெறும். அந்த வகையில் இந்த ஆண்டு உலக சுகாதார தினத்தின் மையக்கருத்தாக ”உணவு பாதுகாப்பு” (Food Safety) என்ற மையக்கருத்து அறிவிக்கப்பட்டு உள்ளது. இந்தக் கருத்து உலகில் உள்ள அனைத்து வகையான மக்களுக்கும் மிகவும் பொருந்தி வரக்கூடிய கருத்தாகும்.

### உணவு பாதுகாப்பு என்றால் என்ன?

உணவு பாதுகாப்பு என்பது பொதுசுகாதாரத்தின் எல்லைக்குள் அடங்கக் கூடிய அம்சம்தான். உணவு நஞ்சாதல் மற்றும் உணவு மூலமாகப் பரவும் நோய்களில் இருந்து மக்களைக் காப்பாற்றும் நடவடிக்கைகளை பொதுசுகாதாரத் துறை கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். பாதுகாப்பற்ற உணவு எண்ணற்ற உடல்நலப் பிரச்னைகளை உருவாக்கும். வயிற்றுப் போக்கு, வைரஸ் தொற்று நோய்கள், இனப்பெருக்கப் பிரச்சனைகள், வளர்ச்சி சார்ந்த பிரச்சனைகள், புற்றுநோய் எனப் பலவித ஆரோக்கியப் பிரச்சனைகள் பாதுகாப்பற்ற உணவால் ஏற்படுகின்றன. எனவே நாம் உட்கொள்ளும் உணவு ”பாதுகாப்பான உணவு”தான் என்பதை நுகர்வோர் என்ற முறையில் நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். “ஹோட்டல் சாப்பாடு எனக்கு ஒத்துக் கொள்ளாது”, எனப் பலர் கூறுவதுண்டு. எனில் வீட்டு சாப்பாடு / ஹோட்டல் சாப்பாடு என்ற எதிர்வு உருவாகின்றது. இதில் வீட்டு சாப்பாடு நல்லது, பாதுகாப்பானது என்ற கருத்தாக்கம் உள்ளது. ஹோட்டல் சாப்பாடு கெட்டது, பாதுகாப்பற்றது என்ற கருத்தாக்கம்

**முனைவர் தி.சிவக்குமார்**, களவிளம்பர அலுவலர், புதுச்சேரி.

உள்ளுறையாகப் பிறக்கிறது. வீட்டுச் சாப்பாடோ அல்லது ஹோட்டல் சாப்பாடோ அது பாதுகாப்பானதாக இருந்தாக வேண்டும் என்பதுதான் முக்கிய நிபந்தனை.

**உணவு பாதுகாப்புக்கான அச்சுறுத்தல்கள்**

ஒவ்வொரு சூழ்நிலையில் புதுப்புது அச்சுறுத்தல்கள் உணவு பாதுகாப்பு தொடர்பாக ஏற்படுகின்றன. இன்றைய உலகமயமாதல் சூழல் இதுவரை இல்லாத அளவு புதிய பிரச்சனைகளை முன்வைக்கின்றது. உணவு உற்பத்தி, விநியோகம், நுகர்வு ஆகியவற்றில் மடைமாற்றம் எனும் அளவு மாற்றங்கள் ஏற்பட்டு உள்ளன. தீவிர விவசாய உற்பத்தி, உணவு வர்த்தகம், நாட்டு எல்லைகளைத் தாண்டி சர்வதேச மயமாதல், நிறைய பேருக்கு உணவு அளித்தல் / விற்றல், தெருவோர உணவுக் கடைகள், புதிதாக உருவாகி உள்ள பாக்டீரியாக்கள் / நச்சுப் பொருட்கள், நுண்ணுயிர் எதிர்ப்புச் சக்தி குறைப்பு ஆகியன நவீன கால அச்சுறுத்தல்களாக உள்ளன. இவை எல்லாம் உண்ணும் உணவை தூய்மைக் கேட்டுக்கு ஆளாக்கி விடுகின்றன.

**சர்வதேச உணவு தரக்கட்டுப்பாடுகள்** (Codex Alimentarius)

ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் வேளாண் கழகம், உலக சுகாதார நிறுவனம் ஆகிய இரு அமைப்புகளும் இணைந்து அரசுகளுக்கு இடையிலான அமைப்பாக உருவாக்கி உள்ள "கோடக்ஸ் அலிமென்டாரியஸ் கமிஷன்" உணவின் தரக்கட்டுப்பாட்டுக்கு உச்சநிலை அமைப்பாக செயல்படுகிறது. இதில் 185 நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. உணவைப் பொறுத்து நுகர்வோர்களின் நலன் பாதுகாக்கப்படவும் நியாயமாக உணவு வர்த்தகம் நடைபெறவும் இந்தக் கமிஷன் சர்வதேச அளவிலான தரக்கட்டுப்பாடுகளை உருவாக்கி நடைமுறைப்படுத்தி வருகின்றது. பதப்படுத்தப்பட்ட உணவு, பதப்படுத்தாத உணவு, கச்சாப் பொருட்கள், உணவில் சேர்க்கப்படும் வேதிப் பொருட்கள் முதலானவற்றுக்கு இந்தக் கமிஷன் பலவிதமான தரக்கட்டுப்பாடுகளை நிர்ணயித்து உள்ளது.

**உணவு பாதுகாப்பு இன்மையும் நோய்களும்**

நோய்க்கிருமிகள் உள்ள உணவானது உடல்நலக்கேட்டிற்கு காரணமாகின்றன. இக்கிருமிகள் 200க்கும் அதிகமான நோய்களை ஏற்படுத்துகின்றன. உணவு மூலமாகவும் நீரின் மூலமாகவும் ஏற்படுகின்ற வயிற்றுப் போக்கு தொடர்புடைய நோய்களால் உலகம் முழுவதும் ஆண்டுக்கு 20 லட்சம் பேர் இறந்து போகின்றார்கள். இதில் பல குழந்தைகளும் அடக்கம் என்பது வேதனை தரும் செய்தியாகும். பாதுகாப்பற்ற உணவு, நோய் மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு ஆகிய மூன்றும் சுழல் வட்டமாக உள்ளன. குறிப்பாக குழந்தைகள், சிறுவர், மூத்தோர் மற்றும் நோயுற்றோர் போன்றோர் பாதுகாப்பில்லாத உணவால் அதிகம் பாதிக்கப்படுகின்றனர்.

உணவு மூலமாக நோய்கள் ஏற்பட முதன்மைக் காரணங்கள்

- பாக்டீரியா
- வைரஸ்
- ஒட்டுண்ணி
- பிரியான்கள்
- வேதிப்பொருட்கள் (இயற்கையில் இருப்பவை மற்றும் மனிதர்கள் உருவாக்கியவை)

ஆகிய இந்த ஐந்தும்தான் உணவு மூலமாக நோய்கள் ஏற்பட முதன்மைக் காரணங்களாக அமைகின்றன.

சால்மோனெல்லா, கேம்ப்பிலோ பேக்டெர், என்ட்டருஹெமர்ராஜிக் எஷ்ஷெரிகியா கோலி ஆகிய பாக்டீரியா கிருமிகள் உணவு மூலம் தொற்றும் பொதுவான கிருமிகள் ஆகும். இதில் சால்மோனெல்லோசிஸ் நோய்ப்பரவலோடு தொடர்புடைய உணவுகள் எனில் முட்டைகள், கோழிக்கறி மற்றும் விலங்குப் பொருட்கள் ஆகியவற்றைச் சொல்லலாம். கேம்ப்பிலோபேக்டெர் ஏற்படக் காரணம் காய்ச்சாத பால், சரியாக சமைக்காத கோழிக்கறி மற்றும் குடிநீர் ஆகும். எஷ்ஷெரிகியா கோலி என்பது பதப்படுத்தப்படாத பால், சரியாக சமைக்காத ஆட்டிறைச்சி, புத்தம் புதிய பழங்கள் / காய்கறிகள் ஆகியவற்றால் ஏற்படுகின்றது. காலரா நோயும் தூய்மைக்கேடான உணவு அல்லது நீரால்தான் ஏற்படுகின்றது.

ட்ரெமட்டோட்ஸ் என்ற ஒட்டுண்ணி உணவு மூலமாக மட்டுமே பரவும். எச்சினோ காக்கஸ் ஒட்டுண்ணி உணவு மூலமாகவும் பரவும்; அதே சமயம் விலங்குகளுடன் நேரடி தொடர்பு கொள்வதாலும் பரவும். பிரியான்கள் என்பவை புரதத்தால் கட்டமைக்கப்பட்ட தொற்று உயிரிகள் ஆகும். குறிப்பிட்ட வகை நரம்புச்சிதைவு நோயோடு இவை தொடர்புடைய உயிரிகள்.

இயற்கையான வேதிப்பொருட்களும் சூழலியல் மாசுபடுவதால் உண்டாகும் மாசுக் களும் உடல்நலத்துக்குக் கேடு விளைவிக்கின்றன. மைக்கோடாக்சின் என்பது இயற்கையாக கிடைக்கும் வேதிப்பொருள். இத்தகைய வேதிப்பொருட்கள் மனித உடலில் பல கேடுகளை விளைவிக்கின்றன. அதிகபட்சமாக புற்று நோயை உண்டாக்குகின்றன. டையாக்சின், பாலிகுளோரினேட்ட்டு பைபீனைல்கள் ஆகியன தொழிலகச் செயல்பாட்டால் உருவாகும் மாசுபடுத்திகள் ஆகும். காற்று, நீர் மற்றும் மண் மாசுபடுவதால் கனரக உலோகங்கள் உணவுகளில் சேர்கின்றன. இத்தகைய உலோ கங்கள் நரம்பு மண்டலத்தையும் சிறுநீரகத்தையும் சேதப்படுத்துகின்றன.

உலக சுகாதார நிறுவனத்தின் ஐந்து ஐந்து வழிகள்

உலக சுகாதார நிறுவனம் உணவு சம்பந்த மான நான்கு அம்சங்களுக்கும் தலைசிறந்த முக்கியமான ஐந்து ஐந்து வழிகளை முன்வைத் துள்ளது.

இந்த வழிகளை இங்கு சுருக்கமாகக் காண்போம்:

| வழி | பாதுகாப்பான உணவுக்கு 5 வழிகள் | ஆரோக்கியமான உணவுக்கு 5 வழிகள் |
|---|---|---|
| 1 | சுத்தமாக வைத்திருத்தல் (உணவைக் கையாளும் முன் கைகளைக் கழுவுதல் / சமையலறையைச் சுத்தமாக வைத்திருத்தல்) | முதல் 6 மாதங்களுக்கு குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டுமே கொடுத்தால் போதும் |
| 2 | சமைத்த உணவையும் சமைக்காத உணவுப் பொருளையும் தனித் தனியே வைத்திருத்தல் | பலவகை உணவுகளை கலந்து சாப்பிட வேண்டும் |
| 3 | முழுமையாகச் சமைத்தல் (அசைவ உணவை முழுமையாகச் சமைக்கவும்) | அதிக அளவு காய்கறிகள் / பழங்களை உணவில் சேர்த்துக் கொள்ளவும் |
| 4 | சரியான வெப்பநிலையில் உணவுப் பொருளை வைத்திருக்க வேண்டும் | போதுமான அளவுக்கு மட்டுமே எண்ணெய், கொழுப்புப் பொருட்களை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் |
| 5 | சமையலுக்கு சுத்தமான நீர் / உணவுப் பொருட்களையே பயன்படுத்த வேண்டும் | உணவில் உப்பு மற்றும் சர்க்கரையின் அளவு குறைவாகவே இருக்க வேண்டும் |
| வழி | சரியான உடல் இயக்கத்துக்கு 5 வழிகள் | பாதுகாப்பான பழங்கள் / காய்கறிகள் பயிரிட (நுண்ணுயிரிகள் கலப்பதைத் தடுத்தல்) 5 வழிகள் |
| 1 | இதுவரை நீங்கள் உடற்பயிற்சியில் ஈடுபடாமல் இருந்தால், அதைத் தொடங்க இன்றே நல்ல நாள் | சிறந்த தன்சுத்த முறைகளைக் கடைபிடிக்கவும் |
| 2 | எவ்வளவு முடியுமோ அந்த அளவு தினந்தோறும் உடல் உழைப்பில் ஈடுபடவும் | வயல்வெளிகளில் கால்நடைகளின் கழிவுப் பொருட்கள் கலக்காமல் பார்த்துக் கொள்ளவும் |
| 3 | ஒவ்வொரு வாரமும் குறைந்தது 150 நிமிடங்கள் மிதமான முதல் தீவிரமான உடல்பயிற்சி, உடல் இயக்கச் செயல்களில் ஈடுபடவும் | சுத்திகரிக்கப்பட்ட மலக்கழிவுகளையே வயல்வெளிகளில் பயன்படுத்த வேண்டும் |
| 4 | கூடுதலான ஆரோக்கியம் கிடைக்க, உங்களால் முடியுமெனில் தொடர்ந்து அதிதீவிர உடற்பயிற்சியிலும் ஈடுபடுங்கள் | பாசனத்துக்கான நீரில் நுண்ணுயிரிகள் கலக்காமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள் |
| 5 | பள்ளி செல்லும் வயதுடைய பருவத்தினர் தினந்தோறும் மிதமான முதல் தீவிரமான உடற்பயிற்சியில் குறைந்தது 60 நிமிடங்கள் ஈடுபட வேண்டும் | அறுவடை இயந்திரங்கள் மற்றும் சேமிப்பு கொள்கலன்களை சுத்தமாகவும் ஈரம் இல்லாமலும் பார்த்துக் கொள்ளவும் |

மேலே கூறிய ஐந்து வழிகள் ஆரோக்கியமான வாழ்விற்கு அடிநாதமாக விளங்கும் தாரக மந்திரங்கள் ஆகும்.

**பாதுகாப்பான உணவா? ஆரோக்கியமான உணவா?**

நாம் உண்ணும் உணவு பாதுகாப்பானதாக இருக்க வேண்டும். அதேசமயம் அந்த உணவு ஆரோக்கியமானதாகவும் இருக்க வேண்டும். பாதுகாப்பான உணவு எனில் நோய்க்கிருமிகள் இல்லாத, தூய்மையான, சுத்தமாகத் தயாரிக்கப்பட்டு பரிமாறப்படுவதும் உணவு என்று அர்த்தம் ஆகும். ஆரோக்கியமான உணவு எனில் அது பாதுகாப்பானதாக இருப்பதோடு நோய் எதிர்ப்புச் சக்தியை வலுப்படுத்துவதாகவும் உடலுக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துக்களையும் வழங்குவதாகவும் இருக்க வேண்டும். ஆரோக்கியமான உணவு நமக்கு நோய் இல்லாத நீண்ட ஆயுளைத் தருகின்றது. அவசரம் .... வேகம் ... இவையே இன்றைய வாழ்க்கை முறையின் அடிப்படைகள். அவசரமாகச் சமைத்து வேகமாக சாப்பிட்டுவிட்டு விரைவாகச் செயல்பட வேண்டிய சூழ்நிலயில் "உணவு" பசியாற்றும் பண்டமாகச் சுருங்கிவிட்டது. சுவைக்கு அடிமையான பிறகு சுத்தமும் சத்தும் நமது கவனத்துக்கு வருவதில்லை. இப்படியான அவசர உலகில் "உணவு" பற்றி தீவிரமாகவும் ஆழமாகவும் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

**உணவே மருந்து மருந்தே உணவு**

தமிழரின் பாரம்பரிய மருத்துவ அறிவு "சித்த மருத்துவமாக" இருந்தது / இருக்கிறது. சித்த மருத்துவத்தின பல அடிப்படைத் தத்துவங்களில் அண்டத்தில் உள்ளதே பிண்டத்தில் உள்ளது என்பதும் உணவே மருந்து மருந்தே உணவு என்பதும் மிகவும் முக்கியமானவை ஆகும். அண்டம் = பிரபஞ்சம்; பிண்டம் = உடல். மனித உடலானது இந்தப் பிரபஞ்சத்தின் அங்கம். பிரபஞ்சத்தின் கட்டமைப்பும் உடலின் கட்டமைப்பும் ஒன்றேதான். எனவே பிரபஞ்சம் உடல்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. நிலம், பொழுது முதலானவை மனித வாழ்வை நிர்ணயிக்கின்றன. சூழலும் மனிதரும் இசைந்து இணக்கமாக இருந்தால்தான் வாழ்வு இன்பமாக அமையும்.

தமிழ் பாரம்பரியத்தில் "உணவு"க்கு முக்கிய பங்குண்டு. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களின் தொகுப்பாகவே நமது உணவு முறை இருந்தது. நமது உணவு எப்போதும் மருந்தாகவே இருந்துள்ளது. மருந்து எனத் தனியாக ஏதும் இல்லை. எப்படி உண்ணுவது, எவ்வளவு உண்ணுவது, எப்போது உண்ணாமல் இருப்பது என இப்படிப் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டன. நோய் அறிகுறிகள் தெரியும்போதே உணவில் மாற்றம் செய்து விடுவார்கள். அதாவது உணவே மருந்தாகி விடுகின்றது. நோய் கட்டுப்படுகின்றது, தீர்கின்றது.

நமது பல சமையல் பொருட்களும் மருத்துவப் பொருட்கள்தான். அன்றைய அஞ்சறைப் பெட்டி என்பது முதல் உதவிப் பெட்டி எனில் மிகையன்று. வீட்டில் இருந்த பொருட்கள் அனைத்துமே மருந்தாகப் பயன்பட்டன. இஞ்சி, மிளகு, பூண்டு, சீரகம், மல்லி, மஞ்சள், சுக்கு, திப்பிலி, வசம்பு போன்ற பல பொருட்கள் மகத்தான மருந்துப் பொருட்களாகும். எனவே நமது பாரம்பரிய உணவு முறையை மீட்டு அதைக் கடைபிடிப்பதுதான் இழந்து கொண்டிருக்கிற நமது ஆரோக்கியத்தை மீளப் பெறுவதற்கான வழிமுறையாகும்.

**துரித உணவின் தீங்கு**

உணவுப் பொருட்கள் விற்பனையில் நொறுக்குத்தீனிகளும்(Snacks)துரித உணவுகளும் (Fast Foods) முக்கிய பங்கு வகிக்கின்றன. இத்தகைய உணவுகளில் உடலுக்கு ஆரோக்கியம் தரும் அம்சங்கள் ஏதும் இல்லை. மாறாக இவற்றின் மூலம் உடலில் நச்சுப் பொருட்களும் கொழுப்புகளும்தான் சேர்கின்றன. வேண்டாத / பயனில்லாத பொருட்களைப் போடும் குப்பைத் தொட்டியாக வயிறு இருக்கின்றது. பல வேறு புதிய வேதிப்பொருட்கள் சேர்ந்து உடலே நச்சுக்கூடமாக மாரி உள்ளது. இத்தகைய துரித உணவுகளில் எண்ணற்ற வேதிப்பொருட்கள் சேர்க்கப்படுகின்றன.

*1. சுவை கூட்டுவதற்கான வேதிப் பொருட்கள்*

*2. நிறம் கவர்ச்சிகரமானதாக இருக்கச் சேர்க்கப்படும் வேதிப்பொருட்கள்*

*3. மணத்துக்கான வேதிப்பொருட்கள்*

*4.கெட்டுப் போகாமல் நீண்டகாலம் இருக்கச் சேர்க்கப்படும் வேதிப்பொருட்கள்.*



இப்படி உருளைக்கிழங்கு சிப்ஸ் பாக்கெட் ஒன்றிலேயே 3040 வேதிப்பொருட்கள் உள்ளன. இவை நமது செரிமான அமைப்பையும் நரம்பு மண்டலத்தையும் பாதிக்கின்றன. போதைப் பொருளுக்கு அடிமையாவது போன்றே இத்தகைய நொறுக்குத் தீனிகள் / துரித உணவுகளுக்கு இன்றைய தலைமுறை அடிமையாகி உள்ளது. குளிர்பானங்களும் சத்து ஏதும் இல்லாத கார்பன் மட்டும் சேர்க்கப்பட்ட வேதிப்பொருட்கள் சேர்க்கப்பட்ட நீர்தான். இதைக் குடிப்பதாலும் உடல்நலக் கேடுதான் உண்டாகின்றது.

**உணவு முறையை மாற்றுவோம்**

வாழுமிடத்துக்கு ஏற்பவும் காலநிலைக்கு ஏற்பவும் உணவு இருப்பதே ஆரோக்கிய வாழ்வுக்கு அடிப்படை. ஆகவே இன்று நம்மீது திணிக்கப்பட்டுள்ள வேண்டாத உணவு வகைகளை உதறித் தள்ளியாக வேண்டும். ஒரே தானியமாக அரிசியை மூன்று வேளையும் சாப்பிடுவதை விட்டுவிட்டு அரிசி, கம்பு, கேழ்வரகு, தினை, சாமை, வரகு போன்றவற்றை சுழற்சி முறையில் உண்ண வேண்டும். வறுத்ததைவிட வேகவைத்த உணவை விரும்பிச் சாப்பிட பழக வேண்டும். கீரைகள், காய்கள், கனிகள் நமக்காகத்தான் என்ற அணுகுமுறை அகலாமல் இருக்க வேண்டும்.

உணவு பற்றி திருவள்ளுவர் "மருந்து" எனும் அதிகாரத்தில் கூறியுள்ள பத்து குறள்களையும் படித்தறிந்தால் போதும். ஆரோக்கியம் எப்போதும் நம் கையில்தான் என்பது உறுதிப்படும். வாழ்க்கை முறை மாற்றத்தால் (அதாவது குறிப்பாக உணவு முறை மாற்றத்தால்) அதிகரித்து வரும் இதய நோய்கள், நீரிழிவு, புற்றுநோய், உடல் பருமன் போன்றவற்றை வராமல் தற்காத்துக் கொள்ள அருமருந்து உணவுதான்.

*மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது*
*அற்றது போற்றி உணின் (திருக்குறள் 423)*

### தமிழகத்தின் நான்கு சமுதாய வானொலிகளுக்கு தேசிய வானொலி விருதுகள்

தமிழ்நாட்டை சேர்ந்த நான்கு சமுதாய வானொலிகளுக்கு தேசிய சமூதாய வானொலி விருதுகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விருதுகளை மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு அமைச்சர் திரு. அருண் ஜெட்லி வழங்கினார். மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை இணை அமைச்சர் கர்னல். ராஜ்யவர்தன் ரத்தோர்ம் உடன் இருந்தார். புது தில்லியில் நடந்த 5வது தேசிய சமூதாய வானொலி சம்மேளனத்தில் இந்த விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

கருப்பொருள், சமூதாயப் பங்கேற்பு, உள்ளூர் கலாச்சாரத்தை ஊக்குவித்தல், ஆக்கப்பூர்வமான புதுமையான நிகழ்ச்சி என நான்கு பிரிவுகளில் இந்த தேசிய சமூதாய வானொலி விருதுகள் வழங்கப்பட்டன.

சமூதாயத்தின் பங்கேற்பிற்கான விருது பிரிவில் வழங்கப்பட்ட இரண்டு விருதுகளையும் தமிழ்நாட்டை சேர்ந்த சமூதாய வானொலிகளே பெற்றுள்ளன. இந்த பிரிவிற்கான முதல் பரிசை அண்ணா சமூதாய வானொலி மகளீர் நேரம் என்ற நிகழ்ச்சிக்காக பெற்றது. இரண்டாம் பரிசினை "உழுதுண்டு வாழ்வோம்" நிகழ்ச்சிக்காக மதுரையின் வயலக வானொலி பெற்றது.

மதுரையை சேர்ந்த ஷாமலவாணி வானொலியின் "வாக்கப்பட்ட பூமி" என்ற நிகழ்ச்சிக்கு கருப்பொருளுக்கான விருது பிரிவில் மூன்றாவது பரிசு வழங்கப்பட்டுள்ளது. இந்த பிரிவில் முதல் பரிசினை ஒடிஸாவை சேர்ந்த வானொலியும், இரண்டாம் பரிசினை கேரளாவை சேர்ந்த வானொலியும் பெற்றுள்ளன.

மிகவும் ஆக்கப்பூர்வமான புதுமையான நிகழ்ச்சி விருது என்ற பிரிவில் ஒரே ஒரு சமூதாய வானொலி மட்டுமே பரிசினை வென்றது. அது கோயம்புத்தூரில் இயங்கி வரும் ரதி வாணி என்ற சமூதாய வானொலிதான். போதுமடா சாமி என்ற நிகழ்ச்சிக்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

உள்ளூர் கலாச்சாரத்தை ஊக்குவித்தல் பிரிவில் முதல் பரிசை உத்தரகாண்ட் மாநிலத்தைச் சேர்ந்த வானொலியும் இரண்டாம் பரிசினை குஜராத்தின் வானொலியும் பெற்றுள்ளன. இந்த நிகழ்ச்சியில் பேசிய மத்திய அமைச்சர் திரு. அருண் ஜெட்லி மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு துறை அமைச்சகத்தின் பல முயற்சிகளால் சமூதாய வானொலி கடந்த சில ஆண்டுகளில் நல்ல வளர்ச்சியை கண்டுள்ளது. இதுவரை நாட்டில் 409 சமூதாய வானொலிகளுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் 179 வானொலி நிலையங்கள் ஒலிபரப்பை துவக்கிவிட்டன.

மேலும், ஏற்கனவே இயங்கிவரும் மற்றும் புதிதாக துவக்கப்படும் சமுதாய வானொலிகளுக்கு நிதி உதவி அளிப்பதற்கான திட்டத்தை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

# இந்தியாவின் முந்தைய மற்றும் தற்போதைய பெட்ரோலிய விலையைப் புரிந்து கொள்ளுதல்

– ஷைனி ஜேக்கப்

சர்வதேச கச்சா எண்ணெய் விலை இந்தியாவில் ஒவ்வொன்றிலும் மற்றும் அனைத்திலும் தனது அடையாளத்தை ஏற்படுத்துகின்றது. நிதிப் பற்றாக்குறையில் இருந்து நுகர்வோர் விலைக் குறியீட்டு எண் வரை அனைத்தும் இதில் அடங்கும்.

நமது நாட்டில் பெட்ரோலியப் பொருட்களின் விலைக்கும் சர்வதேச கச்சா எண்ணெய் விலைக்கும் உள்ள உறவு சாதாரண நபருக்கு குழப்பமான அல்லது புதிராகவே இருக்கும். இந்தியன் பாஸ்கட் கச்சா எண்ணெய், வர்த்தகப் பரிவர்த்தனை சமநிலை விலை அமைப்பு போன்ற கலைச்சொற்கள் மேலும் குழப்பத்தையே ஏற்படுத்தும். சுத்திகரிக்கப்படாத பெட்ரோலியப் பொருட்களின் விலையை நிர்ணயிக்க இந்தியா இந்த முறைகளைத்தான் தற்போது கடைபிடித்து வருகின்றது.

அடிப்படையில் பெட்ரோலியத் துறை இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது:

1. எதிரோட்டம்: கச்சா எண்ணெய், எரிவாயு கண்டுபிடித்தல் மற்றும் உற்பத்தி செய்தல் ஆகியன இதில் அடங்கும்.

2. ஒத்திசைந்த திசை ஓட்டம்: இதில் சுத்திகரித்தல் மற்றும் சந்தைப்படுத்துதல் போன்ற செயல்பாடுகள் அடங்கும்.

கடந்த நிதியாண்டில் நமது நாட்டின் கச்சா எண்ணெய் உற்பத்தி 37.788 மில்லியன் டன் ஆகும். இந்த உற்பத்தியை 2012–13ஆம் ஆண்டின் உற்பத்தியான 37.862 மில்லியன் டன்னோடு ஒப்பிட 0.20 சதவிகிதம் குறைவுதான். இது மிக மிகக் குறைவான வீழ்ச்சி விகிதம்தான். இந்தியாவுக்கு இத்துறை தொடர்பான பிரச்சனைகள் எவையெனில் வயதாகிவிட்ட எண்ணெய்த் துரப்பணங்கள் மற்றும் தொழில்நுட்ப போதாமை ஆகியவையே ஆகும். உற்பத்தியைப் பொறுத்த அளவில் புதிய துரப்பணங்களான ராஜஸ்தான் மற்றும் கேஜி ஆழ்கடல் அடுக்குகள் போன்றவை நம்பிக்கை ஒளியைத் தருகின்றன. அதே சமயம், சுத்திகரிப்பு திறன் கடந்த நிதியாண்டைப் பொறுத்த அளவில் ஆண்டுக்கு 215.06 மில்லியன் டன் (எம்.டி.பி.ஏ) என்று உள்ளது. இது 2017ல் 307 எம்.டி.பி.ஏ ஆக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பெட்ரோலிய விலையை நிர்ணயிக் கக்கூடிய முதன்மைக் காரணிகள் எவையெனில், கச்சா எண்ணெய் விலை, தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையில் உள்ள இடைவெளி, வரிகள் மற்றும் தீர்வைகள், சந்தை நிலைமைகள், உற்பத்தி மற்றும் நுகர்வு, கையிருப்பு, இறக்குமதி, சர்வதேச விலைகள், மானியம் மற்றும் உள்ளூர் தாக்கங்கள் ஆகியவற்றைக் கூறலாம். தற்போதைய விலை அமைப்பின் வேறுபாடுகளைப் புரிந்து கொள்ள, கச்சா எண்ணெயின் இயங்கியல் மற்றும் இந்தியாவில் எரிபொருள் விலையின் வரலாறு ஆகியவற்றைப் பற்றியும் தெரிந்து கொண்டாக வேண்டும்.

### இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய்

(இந்தியாவில் நுகர்வோர்கள் பயன் படுத்தும் கச்சா எண்ணெயின் விலையை நிர்ணயிக்கும் முறை)

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் இருந்த ஜுபிளாங்க்டன் மற்றும் ஆல்கே ஆகிய உயிரினங்களின் மிச்சம் மீதிகள் பல மில்லியன் ஆண்டுகள் கழிந்த பிறகு கச்சா எண்ணெய்யாக மாறுகின்றன. ஆக்சிஜன் குறைவான நிலைமைகளில் இத்தகைய உயிரினங்கள் உருவாகும். உருவாகும் இடத்திற்கு ஏற்ப கச்சா எண்ணெய் வகைப்படுத்தப்படுகின்றது. வெஸ்ட் டெக்சாஸ் இண்ட்டர்மீடியெட், டபிள்யூடி, பிரெண்ட், துபாய் அல்லது மினாஸ் என வகைப்படுத்தப்படுகின்றது. இதற்கு மாறாக, சுத்திகரிப்புகள் இதனை "இனிப்பு" (குறைந்த கந்தகம் இருப்பது) என்றும் "புளிப்பு" (2.5 சதவிகிதத்திற்கும் மேலாக கந்தகம் இருப்பது. ஆகையால் உற்பத்தி பொருளுக்கான நிபந்தனைகளை நிறைவு செய்ய அதிக அளவு சுத்திகரிக்கப்பட வேண்டும்) என்றும் அதனுடைய எடை அல்லது பாகுத்தன்மை அடிப்படையிலும் வகைப்படுத்துகின்றனர்.

நாட்டில் சுத்திகரிக்கப்படும் மொத்த இனிப்பு மற்றும் புளிப்பு கச்சா எண்ணெய் அளவுதான் இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் ஆகும். நடந்து முடிந்த ஆண்டில் சுத்திகரிக்கப்பட்ட உண்மையான இனிப்பு மற்றும் புளிப்பு கச்சா எண்ணெய் அளவோடு ஒப்பிட இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்கள் சுத்திகரித்த கச்சா எண்ணெய் அளவின் விகிதத்தைத்தான் இது குறிக்கிறது. இனிப்பு கச்சா எண்ணெய்க்கு ஒப்பீட்டு அளவாக "பிரெண்ட்" கச்சா எண்ணெய் எடுத்துக் கொள்ளப்படுகின்றது. புளிப்பு கச்சா எண்ணெய்க்கு ஒப்பீட்டு அளவாக "துபாய்" மற்றும் "ஓமன்" எடுத்துக் கொள்ளப்படுகின்றது. கடந்த நிதியாண்டில், இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் பிரெண்ட்டுக்கான தினசரி விலை மதிப்பீட்டிலும் துபாய் மற்றும் ஓமன் தர மதிப்பீட்டிலும் 30.1: 69.9 என்ற விகிதத்தில் இருந்தது.

கடந்த ஆண்டுகளில் இந்திய சுத்திகரிப்பாளர்கள் அதிக அளவு புளிப்பு கச்சா எண்ணெயைப் பயன்படுத்தத் தொடங்கியதில் இருந்து இந்தியன் பாஸ்கெட்டில் ஓமன் மற்றும் துபாய் கச்சா எண்ணெயின் பங்கு அதிகரித்து வருகின்றது. சர்வதேசச் சந்தையில் விலை வீழ்ச்சி ஏற்பட்ட மிக அண்மைக்காலம் வரையில் இந்தியாவில் எண்ணெய் விலை எப்போதும் உயர்ந்து கொண்டேதான் இருந்தது. சராசரி இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் விலைகள் 2003–04ல் ஒரு பேரலுக்கு $27.97 ஆக இருந்தது. இது மூன்று மடங்கு உயர்ந்து 2013–14ல் ஒரு பேரலுக்கு $105.52 என இருந்தது. (அட்டவணை கீழே தரப்பட்டுள்ளது).

இருந்தபோதிலும் இந்திய கச்சா எண்ணெய் பாஸ்கெட்டுக்கும் பெட்ரோலியப் பொருட்களின் விலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. பெட்ரோலியப் பொருட்களின் விலை சர்வதேச சந்தையைப் பொறுத்தது ஆகும். ஒவ்வொரு தனித்தனிப் பொருளுக்கும் உள்ள தேவையும் விநியோகமும் விலையைப் பாதிக்கும். பெட்ரோல் விலை சிங்கப்பூர் பிராந்தியத்தின் விலையைச் சார்ந்து இருக் கிறது. அதேபோல் அரேபியவளைகுடா பிராந் தியத்தின் டீசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலையையும் சார்ந்து இருக்கின்றது.

**அட்டவணை 1**

**இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் விலை ($/ஒரு பேரலுக்கு)**

| ஆண்டு | சராசரி |
|---|---|
| 2003–04 | 27.97 |
| 2004–05 | 39.21 |
| 2005–06 | 55.72 |
| 2006–07 | 62.46 |
| 2007–08 | 79.25 |
| 2008–09 | 83.57 |
| 2009–10 | 69.76 |
| 2010–11 | 85.09 |
| 2011–12 | 111.89 |
| 2012–13 | 107.97 |
| 2013–14 | 105.52 |

### விலை நிர்ணயமும் கடந்த கால வரலாறும்

இந்தியாவில் எண்ணெய் விலைகளின் வரலாற்றைப் பார்க்கும்போது அரசு விலையைக் கட்டுப்படுத்த எடுத்த முதல் முயற்சி 1948ல்தான் நடந்தது என்பது தெளிவாகின்றது. பர்மா ஷெல் ஒப்பந்தம் மதிப்பூட்டப்பட்ட பங்குக் கணக்கு (வி.எஸ்.ஏ) அமைப்பின் மூலம் உருவாக்கப்பட்டு அதன் வழியாக இந்த முயற்சி எடுக்கப்பட்டது. வி.எஸ்.ஏ ஏற்பாடு என்பது ஒரு சூத்திரத்தின் அடிப்படையில் அமைந்தது ஆகும். ஃப்ரீ ஆன் போர்டு (எஃப்.ஓ.பி) விலை, கடல் மூலம் சரக்கு அனுப்பும் கட்டணம், காப்புறுதி, கடலில் ஏற்படும் இழப்பு, இறக்குமதி தீர்வை, வட்டி மற்றும் இதர கட்டணங்கள் ஆகியவற்றின் கூட்டு மொத்தமாக இது இருக்கிறது.

ஒட்டுமொத்த விலை நிர்ணய நடைமுறையை நெறிப்படுத்துவதற்கான பல்வேறு விவாதங்களுக்குப் பிறகு, அரசு 1975ஆம் ஆண்டு ஜுலை மாதம் நிர்வகிக்கப்பட்ட விலை நிர்ணய முறையை (ஏ.பி.எம்) அறிமுகப்படுத்தியது. எனினும் இது ஏப்ரல் 2002ல் கைவிடப்பட்டது. நத்தை வேகத்தில் எண்ணெய் நிறுவனங்களின்

வளர்ச்சிக்குத்தான் இது உதவுகின்றது என்ற விமர்சனமே இதற்குக் காரணமாக அமைந்தது. எரிசக்தி பாதுகாப்புக்குத் தேவையான முதலீடுகளைச் செய்வதற்கான போதிய நிதி ஆதாரங்களைத் திரட்ட முடியாமல் நிறுவனங்கள் தவித்தன.

அதற்குப் பிறகு, ஏப்ரல் 2002 முதல் ஜனவரி 2004 வரை விரிவான கட்டுப்பாடு இல்லாத முறையை நாடு பின்பற்றியது. சந்தைக் காரணிகளுக்கு ஏற்ப எண்ணெய் நிறுவனங்கள் பெட்ரோல், டீசல், வீட்டு சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) ஆகியவற்றின் விலையை நிர்ணயித்தன. மண்ணெண்ணெய் விலையில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. இதற்கிடையில் விலைத்தொகுப்பு முறை ஒன்றும் பரிட்சித்துப் பார்க்கப்பட்டது. சர்வதேச விலை மற்றும் சரக்குக் கட்டணங்களுக்கு ஏற்பட்ட குறிப்பிட்ட விலை பரப்பிற்குள் சில்லறை எண்ணெய் விற்பனை விலையைத் திருத்திக்கொள்ள எண்ணெய் விற்பனை நிறுவனங்களுக்கு அரசு ஓரளவு சுதந்திரத்தை வழங்கியது.

**வர்த்தக பரிவர்த்தனை சமநிலை விலைநிர்ணயம்**

விரிவான விலை நிர்ணய முறையைப் பரிந்துரை செய்வதற்காக மத்திய அரசு அக்டோபர் 2005ல் சி.ரங்கராஜன் தலைமையில் ஒரு குழுவை நியமித்தது. இந்தக் குழு சுத்திகரிப்பு நிலை மற்றும் சில்லறை விற்பனை நிலையில் பெட்ரோலுக்கும் டீசலுக்கும் வர்த்தக பரிவர்த்தனை சமநிலை விலைநிர்ணய (டி.பி.பி) முறையைப் பரிந்துரைத்தது. இதற்கான நிர்ணய சூத்திரம் என்பது இறக்குமதி பரிவர்த்தனை சமநிலை (ஐ.பி.பி) மற்றும் ஏற்றுமதி பரிவர்த்தனை சமநிலை (இ.பி.பி) விலைகளின் சராசரியைக் கொண்டு முறையே 80:20 என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்டது. நாட்டில் ஜூன் 16, 2006 முதல் இந்த வர்த்தக பரிவர்த்தனை சமநிலை விலை நிர்ணய முறை அமல்படுத்தப்பட்டது. இந்த முறையின்படி, சுத்திகரிப்பு வாயில் விலை (ஆர்.ஜி.பி) என்பது சுத்திகரிப்பு நிலையத்தில் இருந்து ஒரு எண்ணெய் விற்பனை நிறுவனத்தின் சந்தைப்படுத்துதல் பிரிவுக்கு ஒரு பெட்ரோலியப் பொருளை விற்கும் விலையாகும். இதுதான் நிர்ணயம் செய்யப்பட்டது.

இறக்குமதி பரிவர்த்தனை சமநிலை விலை மற்றும் ஏற்றுமதி பரிவர்த்தனை சமநிலை விலை என்றால் என்ன? இறக்குமதி பரிவர்த்தனை சமநிலை அமைப்பு என்பது இந்தியத் துறைமுகங்களில் இறக்குமதியாளர்கள் செலுத்தும் விலையைக் குறிக்கிறது. ஆன் போர்டு விலை, கடல் மூலம் சரக்கு அனுப்பும் கட்டணம், காப்புறுதி, கடலில் ஏற்படும் இழப்பு, இறக்குமதி தீர்வை மற்றும் இதரக் கட்டணங்கள் ஆகியவற்றின் கூட்டு மொத்தமாக இது இருக்கிறது. இதற்கு மாறாக ஏற்றுமதி பரிவர்த்தனை சமநிலை அமைப்பு என்பது எண்ணெய் நிறுவனங்கள் தங்களது இறுதி பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்வதில் அடையும் விலை ஆகும். இ.பி.பி.யின் கூறுகளில் எஃப்.ஓ.பி விலையும் உள்ளடங்கும். அதனுடன் முன்கூட்டிய உரிமைப் பலன்களும் இதில் அடங்கும். பெட்ரோலியப் பொருட்கள் ஏற்றுமதியில் நமது நாட்டின் பங்கு அதிகரித்ததால் ஏற்றுமதி பரிவர்த்தனை சமநிலையும் விலை நிர்ணயித்தலில் ஒரு அம்சமாக இணைக்கப்பட்டது. கடந்த நிதியாண்டில் இந்தியா 67.864 மில்லியன் டன் பெட்ரோலியப் பொருட்களை ஏற்றுமதி செய்துள்ளது. இதன் மதிப்பு ரூ. 3,68,279 கோடியாகும்.

இந்த விலை நிர்ணய அமைப்பின்படி இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், ஹிந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் போன்ற பொதுத்துறை எண்ணெய் சந்தைப்படுத்துதல் நிறுவனங்கள் சுத்திகரிப்பாளர்களுக்கு மாதம் இருமுறை தாங்கள் வாங்கும் டீசல், பெட்ரோலுக்கு வர்த்தகப் பரிவர்த்தனை சமநிலை விலையைச் செலுத்தும். இதற்கிடையில் சமையல் எரிவாயு (எல்.பி.ஜி) மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றுக்கான விலை இறக்குமதி பரிவர்த்தனை சமநிலையின் அடிப்படையில் கணக்கிடப்படும். இது ஒவ்வொரு மாதத்தின் முதல் தேதியன்று கணக்கிடப்பட்டு நிர்ணயிக்கப்படும். பிற பெட்ரோலியப் பொருட்களுக்கு காலவரையறையின்றி விருப்பம்போல் விலை நிர்ணயிக்கப்படும்.

**தற்போது நடப்பில் உள்ள போக்குகள்**

பெட்ரோலியப் பொருட்கள் துறையில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதற்காக சர்வதேச விலைகள் மற்றும் அந்நியச் செலாவணிக்கு ஏற்ப பெட்ரோல் விலையை



எண்ணெய் நிறுவனங்களே நிர்ணயித்துக் கொள்ள ஜூன் 2010 முதல் அனுமதி அளிக்கப்பட்டன. ஒவ்வொரு காலகட்டமாக டீசல் விலையின் கட்டுப்பாட்டையும் தளர்த்தும் திட்டத்தின் மூலமாக டீசல் விலையும் ஜனவரி 2013 முதல் மாற்றத்திற்கு உள்ளானது. கருத்தியலான இழப்பு அளவு பெருக்கத்தைக் குறைப்பதற்காக இது அறிமுகப்படுத்தப்பட்டது (வர்த்தக பரிவர்த்தனை சமநிலை / இறக்குமதி பரிவர்த்தனை சமநிலை ஆகியவற்றின் அடிப்படையில் தேவைப்படும் விலைக்கும் உண்மையாக விற்பனையாகும் விலைக்கும் உள்ள வித்தியாசம் ஓ.எம்.சிக்களின் கருத்தியலான இழப்பு குறைவாக உள்ளதைச் சித்தரிக்கின்றது). எனினும் இதற்குப் பிறகு சர்வதேச கச்சா எண்ணெய் விலை மிக வேகமாக உயர்ந்ததால் இத்தகைய முயற்சிகள் பின்னடைவுக்கு உள்ளாயின. கடந்த ஆண்டு விலைகள் குறையத் தொடங்கிய போது, புதிய அரசு அக்டோபர் 2014ல் டீசல் விலையில் முழுமையான கட்டுப்பாட்டுத் தளர்வை அறிமுகப்படுத்தியது.

கட்டுப்பாட்டுத் தளர்வுடன் டீசலுக்கான கருத்தியலான இழப்பு குறித்து கண்டனம் தெரிவித்தல், சாதகமான சர்வதேச விலைகள் மற்றும் இந்திய ரூபாய் மதிப்பைக் கூட்டுதல் ஆகிய அம்சங்கள் சேர்ந்து முக்கியமான பெட்ரோலியப் பொருட்களுக்கான ஒட்டுமொத்த கருத்தியலான இழப்பு என்பது நிதியாண்டின் முதல் ஒன்பது மாதங்களுக்கு அதாவது ஏப்ரல் முதல் டிசம்பர் வரை ரூ.67,091 கோடியாக இருந்தது. மானிய அளவு 2013–14 நிதியாண்டில் ரூ.1,39,869 கோடியாகும். இது 2012–13 நிதியாண்டில் ரூ. 1,61,029 கோடியாகும் (அட்டவணை 2ஐப் பார்க்கவும்).

**அட்டவணை 2**

| ஆண்டு | கருத்தாக்க இழப்பு (ரூபாய் / கோடியில்) |
|---|---|
| 2005–06 | 40000 |
| 2006–07 | 49387 |
| 2007–08 | 77123 |
| 2008–09 | 103292 |
| 2009–10 | 46051 |
| 2010–11 | 78190 |
| 2011–12 | 138541 |
| 2012–13 | 161029 |
| 2013–14 | 139869 |

பெட்ரோலியம் திட்டமிடுதல் மற்றும் பகுப்பாய்வு பிரிவின்படி (பி.பி.ஏ.சி) பிப்ரவரி 27 அன்று இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் விலை ஒரு பேரலுக்கு $59.19 ஆக இருந்தது. ஆறு வருடங்களுக்குப் பிறகு இதற்கு முந்தைய மாதம்தான் (அதாவது ஜனவரி மாதம்) விலை ஒரு பேரலுக்கு $43 ஆக குறைந்து இருந்தது.

மண்ணெண்ணெயைப் பொறுத்த அளவில் பிப்ரவரி மாதம் கருத்தியலான இழப்பு என்பது ஒரு லிட்டருக்கு ரூ. 13.32 ஆக இருந்தது. எப்படி இருந்தாலும் இந்தியாவிற்கு இது ஒரு நிவாரணம்தான். ஜூன் 2014 வரை பிரெண்ட் கச்சா எண்ணெய் ஒரு பேரலுக்கு $115 என்ற விலையில் இருந்ததைக் கருத்தில் கொண்டு பார்க்கும் போது இது இந்தியாவிற்கு சாதகமானதுதான். இந்தியா போன்ற ஒரு நாட்டுக்கு, அதாவது கச்சா எண்ணெய் தேவையில் சுமார் 80 சதவிகிதத்துக்கு இறக்குமதியைச் சார்ந்திருக்கும் நாட்டுக்கு இது மேலும் ஒரு நல்ல செய்திதான்.

2013–14ஆம் ஆண்டில் கச்சா எண்ணெய் இறக்குமதி 189.238 மில்லியன் டன் ஆகும். இதன் மதிப்பு ரூ.8,64,875 கோடி ஆகும். இதுவே 2012–13ஆம் ஆண்டில் இறக்குமதி 184.795 மில்லியன் டன். இதன் மதிப்பு 7,84,652 கோடி ஆகும். அதாவது அளவு ரீதியில் பார்த்தால், 2012–13ஆம் ஆண்டைவிட 2013–14ஆம் ஆண்டில் 2.40 சதவிகிதம் கூடுதலாக கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. மதிப்பு ரீதியில் பார்த்தால் கூடுதலாக 10.22 சதவிகிதம் செலவாகி உள்ளது.

இறக்குமதியாளராக இருப்பதால், எண்ணெய் விலையில் குறைவு என்பது அரசுக்கு மானியச் சுமையைக் குறைக்க உதவியாக உள்ளது. மேலும் நடப்புகால கணக்கு பற்றாக் குறையை அப்படியே பராமரித்துக் கொள்ளவும் உதவுகின்றது. இதன் மூலம் ரூபாய் மதிப்பின் மீதான அழுத்தம் குறையும். சர்வதேச அளவில் விலை குறைவு ஏற்படக் காரணம் அமெரிக்காவிலும் கனடாவிலும் மரபார்ந்த முறையைத் தாண்டி ஷாலே எண்ணெய் உற்பத்தி அதிகமாக இருப்பதுவே ஆகும்.

விலைகள் குறையும் போது, உலகின் மிகப்பெரிய எண்ணெய் விற்பனைக் கூட்டமைப்பின் ஓ.பி.இ.சி ஆனது உற்பத்தியைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. அப்படிச்

| அட்டவணை 3 | |
|---|---|
| இந்தியன் பாஸ்கெட் | கச்சா எண்ணெய் 2014–15 |
| மாதம் | கச்சா எண்ணெயின் சராசரி விலை ($/ஒரு பேரல்) |
| ஏப்ரல் | 105.56 |
| மே | 106.85 |
| ஜூன் | 109.05 |
| ஜூலை | 106.30 |
| ஆகஸ்ட் | 101.89 |
| செப்டம்பர் | 96.96 |
| அக்டோபர் | 86.83 |
| நவம்பர் | 77.58 |
| டிசம்பர் | 61.21 |
| ஜனவரி | 46.59 |

(ஆதாரம்: எண்ணெய் அமைச்சகம் மற்றும் பி.பி.ஏ.சி)

செய்தால் விலை உயரும் எனக் கருதப்பட்டது. இருந்தாலும், மிகப்பெரிய உற்பத்தியாளரான சவுதி அரேபியா உலகச் சந்தையில் உள்ள தனது பங்கை விட்டுத்தர தயங்கியது. ஏனெனில் விலை குறைவு என்பது அமெரிக்காவின் ஷாலே அதிகரிப்புக்கு தடை ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்புதான். இதன் காரணமாக ஆறு ஆண்டுகள் இல்லாத அளவிற்கு விலை வீழ்ச்சி ஏற்பட்டது.

ரஷ்யா, சவுதி அரேபியா, வெனிசூலா போன்ற முதன்மை எண்ணெய் உற்பத்தியாளர்கள் மற்றும் இந்தியா, ஜப்பான் போன்ற நுகர்வோர்களுக்கும் இது சிரமமான காலகட்டமாக இருந்தது. இந்தச் சமயத்தில் விலை வீழ்ச்சி என்பது ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. இதன் விளைவாக இந்தியன் பாஸ்கெட் கச்சா எண்ணெய் விலையில் 56 சதவிகித வீழ்ச்சி ஏற்பட்டது. அதாவது ஏப்ரல் 2014ல் ஒரு பேரல் $105.56ஆக இருந்த விலை ஜனவரி 2015ல் ஒரு பேரல் $46.59ஆகக் குறைந்தது. (அட்டவணை 3ஐப் பார்க்கவும்). எனினும் டீசல் மற்றும் பெட்ரோல் விலை கட்டுப்பாட்டுத் தளர்வுக்கு ஆட்படுத்தியதும் சர்வதேச விலை உயர்வும் இந்தியாவில் பெட்ரோலிய பொருட்கள் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று நிபுணர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர். அவர்களின் அச்சத்தை உறுதிப்படுத்தும் வகையில் நிதியமைச்சர் தனது முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்த சில மணி நேரங்களிலேயே பெட்ரோல் மற்றும் டீசல் விலைகள் முறையே லிட்டருக்கு ரூ.3.18 என்றும் ரூ.3.09 என்றும் அதிகரித்துள்ளன. எப்படி இருந்தாலும், இந்திய பொருளாதாரமும் எண்ணெய் நிறுவனங்களும் சர்வதேச விலைச் சரிவில் இருந்து அதிகபட்ச லாபத்தை அறுவடை செய்து கொள்ளும் காலகட்டம் இது என்றால் மிகையில்லை. ●

## பார்வையாளர்கள் நடைமேடை சீட்டு; ஏப்ரல் முதல் அமலுக்கு வரும்

திருத்தப்பட்ட பார்வையாளர்கள் நடைமேடை சீட்டு விலை ஏப்ரல் 1, 2015 முதல் அமலுக்கு வரும் என்று மத்திய ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது. ரூ 5 ஆக இருந்த நடைமேடை சீட்டு ரூ 10 ஆக உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அனைத்து ரயில்வே மண்டலங்களுக்கும் திருத்தப்பட்ட சீட்டை உடனடியாக அச்சிட்டு, அனைத்து ரயில்வே நிலயங்களுக்கும் சரியான நேரத்தில் சென்றடைவதை உறுதி செய்யக்கோரி அறிக்கைகள் அனுப்பட்டுள்ளன. புதிய சீட்டுகள் அச்சிடப்படும் வரை ஏற்கனவே திருத்தப்பட்ட முத்திரையுடன் உள்ள சீட்டுகளை பயன்படுத்தலாம். தானியங்கி சீட்டு இயந்திரங்கள் அல்லது முன்பதிவு செய்யப்படாத சீட்டுகள் முறை அல்லது வேறு இயந்திரங்களைப் பயன்படுத்தி நடைமேடை சீட்டுகள் வழங்கப்படும் இடங்களில் திருத்தப்பட்ட விலைக்கு ஏற்றவாறு மென்பொருளை மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், மத்திய ரயில்வே அமைச்சகம் பேரணி மேளா, போன்ற குறிப்பிட்ட அவசியமான நேரங்களில் கூட்டத்தை கட்டுப்படுத்தும் வகையில் நடைமேடை சீட்டின் விலையை ரூ.10க்கு மேல் உயர்த்த ரயில்வே கோட்டம் மேலாளருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.



# இந்தியாவில் உயர் தொழில்நுட்ப உற்பத்தி : வெளிப்படாத திறமை

– ஆனந்த் ஷர்மா, வீர்பால் கௌர்


அறிமுகம் : கடந்த மே 2014 முதல் புதிய மத்திய அரசு "இந்தியாவில் உற்பத்தி செய்வோம்" என்ற முயற்சியை மேற்கொண்டுள்ளது. இதன் முக்கிய நோக்கம் இந்திய பொருளாதாரத்தில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தி, இந்தியாவை ஒரு பெரிய தொழிற்கூடமாக உருவாக்கி, உற்பத்தியை பெருக்கி, வேலை வாய்ப்பை அதிகப்படுத்துவதுதான். கடந்த இருபது ஆண்டுகளாக இந்தியாவின் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் பொருள் உற்பத்தியின் பங்கு 15–16 சதவிகிதம் இருந்ததை 2025க்குள் 25 சதவிகிதமாக உயர்த்துவதுதான் இந்த "இந்தியாவில் உற்பத்தி செய்வோம்" என்பது அரசின் நோக்கமாகும். இந்தியாவில் பொருளாதார சீர்திருத்தம் ஏற்பட்டதற்கு பின்பு சேவைத்துறை உற்பத்தி 57 சதவிகிதம் எட்டி தொழிற்துறையை (24.8 சதவிகிதம்) மிஞ்சி விட்டது. இந்தியாவின் தொழிற்துறையில் ஏற்பட்டுள்ள குறைந்த அளவு வளர்ச்சிக்கு உற்பத்தித் துறையில் ஏற்பட்டுள்ள குறைந்த வளர்ச்சியே காரணமாகும். 2014 –15க்கான பொருளாதார அறிக்கையின்படி பொருள் உற்பத்தித்துறை மந்தமாகவே உள்ளது: டிசம்பர் 2014–15 டிசம்பர் மாதங்களில் 1.2 சதவிகித வளர்ச்சியை கண்டுள்ளது. பொருள் உற்பத்தித்துறையில் மிகக்குறைந்த வளர்ச்சிக்கு காரணம் மிக அதிக அளவிலான வட்டி விகிதம், உள் கட்டமைப்பு பற்றாக்குறைகள் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு பொருட் தேவைகள் குறைவாக காணப்பட்டதேயாகும். பொருள் உற்பத்தித் துறையின் மிகக் குறைந்த வளர்ச்சி ஒட்டு மொத்த பொருளாதாரத்திற்கும் ஒரு அதிருப்தியான காரணமாகும். உலக அளவிலான மொத்த பொருள் உற்பத்தியில் சீனாவின் பங்கு 14 சதவிகிதம் இருக்கும்போது இந்தியாவின் பங்கு வெறும் 1.5 சதவிகிதம்தான். இதற்கு ஒரு முக்கிய காரணம் இந்திய பொருள் உற்பத்தித் துறையில் உயர் தொழில்நுட்ப உற்பத்திக்கு அளிக்கப்பட்டிருக்கும் குறைந்த முக்கியத்துவம்தான்.

புதிய அரசு பொறுப்பேற்ற உடன் பொருள் உற்பத்தித் துறையில் ஒரு புத்துணர்ச்சியையூட்ட முயன்று வருகிறது. ஏனெனில் இதனால், வளர்ச்சி விகிதம் முனைப்படைந்து இந்தியப் பொருளாதாரத்தின் குறைந்த வருவாய் என்ற நிலைமை மாறி உயர்ந்த வருவாய் அளவிற்கு உயரும் என்ற எதிர்பார்ப்புதான். இங்கிலாந்தில் தொழிற்புரட்சி ஏற்பட்ட காலத்தில் தனி நபர் வருமானமும் வாழ்க்கைத்தரமும் உயர்ந்ததை நாம் பார்த்திருக்கிறோம். நவீன பொருளாதார வளர்ச்சியில் பெரிய மாற்றங்கள் ஏற்படும்போது, நாட்டின் பொருளாதாரம் அடிப்படை நிலைமையிலிருந்து மாறி இரண்டாவது கட்டத்திற்கும், மேல்நிலை கட்டத்திற்கும் செல்லும் என்று குஸ்நெட்ஸ் விளக்கியுள்ளார். பொருளாதாரத்தில் அடிப்படை மாற்றங்கள் ஏற்படும் போது அதன் ஒரு பங்கான வர்த்தகமும் பெரும் மாறுதல்கள் அடைகிறது. இந்த அனுபவத்தை தென்கொரியா, சிங்கப்பூர் மற்றும் சமீபத்தில் சீனாவில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திலிருந்து புரிந்து கொள்ளலாம். பொருள் உற்பத்தித் துறையின் திறமையும், மொத்த வளர்ச்சியும் உயர்வதற்கு ஏற்றுமதியை சார்ந்த பொருள் உற்பத்தித் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்த ஏற்றுமதி சார்ந்த தொழில் உற்பத்தியால் அந்நிய செலாவணி வருமானமும், தொழில்நுட்ப திறமைகளும், அதிகமான பொருட்களை உற்பத்தி செய்வதால் ஏற்படும் லாபமும், அதிக அந்நிய நேரடி முதலீடும் கிடைக்கின்றன (லால் 2000). ஆகவே, "இந்தியாவில் உற்பத்தி செய்வோம் என்ற திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த அரசு உண்மையாக நினைத்தால், நாம் மிகுந்த திறமை தேவைப்படும் பொருள் உற்பத்தியை

**ஆனந்த் ஷர்மா** அகமதாபாத்தின் இண்டியன் இன்ஸ்டியூட் ஆஃப் மேனேஜ்மெண்டின் பொருளாதாரத் துறையின் *முனைவர் பட்ட மாணவர்*. மாநகரமாகும் பொருளாதாரம், வட்டார வளர்ச்சி மற்றும் தொழிற் துறை அமைப்பு போன்றவை இவரின் ஆய்வு விருப்பங்களாகும். இங்கு சேர்வதற்கு முன் அவர் புது டெல்லியின் ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் ஆய்வு மாணவராக இருந்தார்.

**வீர்பால் கௌர்** ஜவஹர்லால் நேரு பல்கலைக்கழகம், சென்டர் பார் ஸ்டடி ஆப் ரிஜினல் டெவலப்மெண்ட்டின் முனைவர் பட்ட மாணவர். உலக வர்த்தகம், வட்டார வளர்ச்சி மற்றும் தொழிற்துறைசார் பொருளாதாரம் ஆகியவை அவரின் ஆய்வு விருப்பங்கள். அவரின் கட்டுரையான "உலகமயமாக்கலும், இந்திய தொழிலாளர் சந்தை மீது அதன் தாக்கமும் : பொருள் உற்பத்தி துறையிலிருந்து ஆதாரங்கள்". இது இண்டியன் ஜர்னல் ஆப் லேபர் எக்னாமிக்ஸ் என்ற புகழ்பெற்ற பத்திரிக்கையில் வெளியிடப்பட்டுள்ளது.

படம் 1 : உலக மொத்த பொருள் உற்பத்திசார் ஏற்றுமதியில் ஏற்றுமதிசார் தொழில் உற்பத்தியின் பங்கு




ஆதாரம் : ஐக்கிய நாடுகள் – காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

மேற்கொள்ள வேண்டும். அதன்மூலம்தான் வேகமான பொருளாதார வளர்ச்சி ஏற்பட்டு, ஏற்றுமதிக்கான அமைப்புகள் மேம்பட்டு, உலக வர்த்தகத்தில் நம்மால் சிறந்து போட்டியிட முடியும்.

ஏற்றுமதி தொழில் உற்பத்தியில் பலவகையான தொழில் நுட்பங்களை ஈடுபடுத்த முடியும், அதாவது குறைந்த, மத்திய மற்றும் உயர் தொழில்நுட்பம் ஆகியவைகளாகும். பொருள் உற்பத்தியில் பெரிய நாடுகளான சீனா, ஜெர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் தங்களுடைய ஏற்றுமதிக்கான பொருள் உற்பத்தியில் குறைந்த தொழில்நுட்பத்திலிருந்து மாறி மத்திய மற்றும் பிறகு உயர் தொழில்நுட்பங்களை பயன்படுத்தின. உயர் தொழில்நுட்ப பொருள் உற்பத்தியில்தான் அதிக அந்நிய செலாவணி வருமானமும் (அகர்வால், குப்தா மற்றும் காந்தி 2004), திறம் மிகு வேலை வாய்ப்பும் (ஏற்றுமதி, இறக்குமதி வங்கி, 2014) ஏற்படுகிறது என்று அறியப்பட்டுள்ளது. நடைமுறை அனுபவத்திலும், உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிசார் பொருள் உற்பத்தியால் மொத்த, பொருள் உற்பத்திசார்ந்த ஏற்றுமதி மிக வேகமாக வளர்கிறது என்று தெரிகிறது (க்ருக்மேன் 1995 மற்றும் லால் 1999). இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு விஸ்தரிக்கப்பட்ட ஏற்றுமதி அமைப்பு மிகவும் அவசியமாகும். இந்தியாவில் பல தரப்பட்ட

**அட்டவணை 1 : பொருள் உற்பத்தி மதிப்பு கூட்டலில் மிகப்பெரிய நாடுகள்**

| தரவரிசை | உலக பொருள் உற்பத்தி சதவிகிதத்தில் 2012 | 2012 | 2002 | 1992 |
|---|---|---|---|---|
| 1 | 22.4 | சீனா | அமெரிக்கா | அமெரிக்கா |
| 2 | 17.4 | அமெரிக்கா | ஜப்பான் | ஜப்பான் |
| 3 | 9.7 | ஜப்பான் | சீனா | ஜெர்மனி |
| 4 | 6 | ஜெர்மனி | ஜெர்மனி | இத்தாலி |
| 5 | 2.8 | கொரியா | இத்தாலி | பிரான்சு |
| 6 | 2.4 | இத்தாலி | பிரிட்டன் | பிரிட்டன் |
| 7 | 2.3 | ரஷ்யா | பிரான்சு | சீனா |
| 8 | 2.2 | பிரேசில் | கொரியா | ரஷ்யா |
| 9 | 2.1 | இந்தியா | மெக்சிகோ | ஸ்பெயின் |
| 10 | 2 | பிரான்சு | கனடா | கனடா |

ஆதாரம் : MAPI



**அட்டவணை 2 :**

**உலக மொத்த உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியில் உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதியின் பல நாடுகளின் பங்கு**

| நாடுகள் | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 | 2013 | 2013ல் தரவரிசை |
|---|---|---|---|---|---|---|---|
| சீனா | | 2.27 | 4.32 | 14.55 | 23.55 | 27.56 | 1 |
| ஜெர்மனி | 11.77 | 8.78 | 7.30 | 9.18 | 8.59 | 8.48 | 2 |
| அமெரிக்கா | 21.88 | 16.67 | 16.79 | 11.16 | 6.96 | 6.27 | 3 |
| கொரியா | 3.03 | 4.55 | 4.79 | 5.76 | 6.25 | 5.91 | 4 |
| சிங்கப்பூர் | 4.27 | 7.45 | 6.28 | 6.48 | 6.34 | 5.75 | 5 |
| ஜப்பான் | 17.38 | 16.30 | 11.51 | 8.02 | 6.41 | 4.90 | 6 |
| பிரான்சு | 6.21 | 5.53 | 4.73 | 4.08 | 4.16 | 4.15 | 7 |
| மலேசியா | 1.72 | 3.58 | 4.01 | 3.55 | 3.13 | 2.66 | 8 |
| பிரிட்டன் | 7.44 | 6.60 | 5.38 | 4.14 | 2.12 | 1.97 | 9 |
| ஸ்விட்சர்லாந்து | 1.76 | 1.37 | 0.91 | 1.20 | 1.55 | 1.72 | 10 |
| ஹங்கேரி | | 0.27 | 0.90 | 1.41 | 1.70 | 1.02 | 11 |
| பிலிப்பைன்ஸ் | | 0.62 | 3.02 | 2.10 | 1.03 | 1.01 | 12 |
| இந்தியா | 0.09 | 0.10 | 0.10 | 0.18 | 0.44 | 0.62 | 13 |
| இஸ்ரேல் | 0.42 | 0.40 | 0.53 | 0.34 | 0.53 | 0.54 | 14 |
| ரஷ்ய கூட்டாட்சி | | | 0.20 | 0.23 | 0.24 | 0.38 | 15 |
| இந்தோனேஷியா | 0.05 | 0.21 | 0.57 | 0.41 | 0.38 | 0.33 | 16 |
| தென் ஆப்ரிக்கா | 0.13 | 0.13 | 0.15 | 0.15 | 0.12 | 0.12 | 17 |
| காஸ்டா ரிக்கா | | 0.00 | 0.15 | 0.10 | 0.08 | 0.11 | 18 |
| மால்டா | 0.11 | 0.13 | 0.12 | 0.07 | 0.05 | 0.04 | 19 |
| கென்யா | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.01 | 0.00 | 20 |
| சைப்ரஸ் | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 21 |

ஆதாரம் : ஐக்கிய நாடுகள் – காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

பொருட்கள் குறைந்த தொழில்நுட்பம், அதிக திறமையில்லாத பணியாளர்களைக் கொண்ட, அதிக தொழிலாளர்களை கொண்ட தொழில்கள் முதல் உயர் தொழில்நுட்பமும், அதிக முதலீடு தேவைப்படும் தொழில்கள் வரை இருந்தும் உலகச்சந்தையில் இந்தியாவின் பங்கு கிட்டத்தட்ட இல்லாதது போலவே உள்ளது ; நமது அண்டை நாடான சீனா மற்றும் ஆசிய பொருளாதாரங்களை ஒப்பிடும் போது மிகவும் பின் தங்கி உள்ளோம். உலகச்சந்தையில் இந்திய ஏற்றுமதி குறைவாக உள்ளதற்கு ஒரு முக்கிய காரணம் உயர் தொழில்நுட்பம் சாலீந்த ஏற்றுமதியில் நாம் அக்கறை காட்டாததுதான். மற்ற ஏற்றுமதிகளைக் காட்டிலும் உயர் தொழில்நுட்ப பொருள்கள் ஏற்றுமதியால், உலகத்தரத்திற்கு நம்மால் போட்டியிட்டு, உலகத்தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு செயல்பட்டு அதிக வருமானம் பெறமுடியும்.

### உலகப்பொருள் உற்பத்தியில் இந்தியாவின் பங்கு

முதல் அட்டவணையில் உலகப் பொருள் உற்பத்தியில், 2012ல் இந்தியாவின் பங்கு 2.1 சதவிகிதமாக இருந்ததை காணலாம். அதே ஆண்டில் சீனா, வளர்ந்த நாடுகளான அமெரிக்கா, ஜப்பான் மற்றும் ஜெர்மனியை பின் தள்ளி உலக மொத்த பொருள் உற்பத்தியில் 22.4 சதவிகிதத்தை அடைந்துள்ளது. 2012 பட்டியலில் பிரேசில், ரஷ்யா, இந்தியா, சீனா உள்ளிட்ட பிரிக்ஸின் நான்கு நாடுகளும் இடம் பெறுகின்றன. அடுத்து இந்தியா, சீனா மற்றும்

சில வளாந்த நாடுகளின் மொத்த பொருள் உற்பத்தி ஏற்றுமதியில், பொருள் ஏற்றுமதியின் பங்கை காணலாம்.


இந்தியாவின் செயல்பாட்டை மற்ற உலக நாடுகளோடு ஒப்பிட்டு கணிக்க 21 பெரிய ஏற்றுமதி நாடுகளின் தகவல்களை மூன்று தர வளர்ச்சியான வளர்ச்சி குறைந்த, வளர்ந்து வரும் மற்றும் வளர்ந்த நாடுகளை ஒப்பிட்டுச் செய்யப்பட்டுள்ளது. படம் 1ல் உலக அளவில் முக்கிய நாடுகளில் மொத்த பொருள் உற்பத்தி ஏற்றுமதியில் அவர்களின் பொருள் உற்பத்தி ஏற்றுமதியின் பங்கு காட்டப்பட்டுள்ளது. இதில் இந்தியாவின் பங்கு மிகக் குறைந்த அளவாக 1991ல் 0.57 சதவிகிதமாகவும் 2013ல் 1.81 சதவிகிதமாகவும் உயர்ந்துள்ளது. இதனை ஒப்பிடுகையில் சீனாவின் பங்கு 2013ல் 18.6 சதவிகிதமாக இருந்தது. இது தொழில் உற்பத்திசார் ஏற்றுமதியில் சீனாவின் வளரும் வலிமையை காட்டுகிறது. 1991–2013க்கிடையே சீனா மற்றும் இந்தியா பொருள் உற்பத்திசார் ஏற்றுமதியில் உயர்வு கண்டன. மற்றவர்களின் பங்கு குறைந்தது. இதே காலகட்டத்தில் சீனாவின் உயர்வு மிக அதிகமாகவும், இந்தியாவின் உயர்வு மிகக் குறைந்த அளவே காணப்பட்டது. ஆகவே, சீனா 2013ல் மொத்த உலக பொருள் உற்பத்தி ஏற்றுமதியில் முதல் இடத்தில் உள்ளது ; இந்தியா 9வது இடத்தில் உள்ளது.

இரண்டாவது அட்டவணையில் உலக மொத்த உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதியில் 21 நாடுகளுடைய உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதியின் பங்கு காட்டப்பட்டுள்ளது. இதில் சீனாவின் ஏற்றுமதி பங்கு மிகவும் உயர்ந்த அளவில் இருப்பதைக் காணலாம். 2013ல் அது உலக மொத்த உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியில் 27.56 சதவிகிதமாக இருந்தது. 2002லிருந்து 2013 வரையிலான கால கட்டத்தில் இது மிக விரைவாக உயர்ந்தது. 1995ல் வளர்ந்த நாடுகளான ஜெர்மனி, அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் சீனாவைவிட அதிக அளவில் இருந்தன. ஆனால், சமீப காலத்தில் அவைகளின் பங்கு மிகவும் குறைவாக உள்ளது. தர வரிசையில் இந்தியா 13வது இடத்தில் 0.62 சதவிகிதமாக இருந்தது. இது 1990ல் 0.09 சதவிகிதமாக இருந்தது. இந்தியாவின் பங்கு மிகவும் சிறிய அளவில் இருப்பதாக இதிலிருந்து புரிகிறது. இதை இந்திய கொள்கை வகுப்பவர்கள் தீவிரமாக எடுத்துக்கொண்டு இந்தியாவின் பங்கை கணிசமாக உயர்த்த கொள்கைகளை வகுக்க வேண்டும்.

**பல நாடுகளின் வரிசை பட்டியலை இணைப்பு அட்டவணை Aயில் காண்க**

1990–2013ஆம் ஆண்டுகளில் இந்தியா மற்றும் பிற நாடுகளின் மொத்த ஏற்றுமதியில்

படம் 2 : மொத்த பொருள் உற்பத்திசார் ஏற்றுமதியில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியின் பங்கு




ஆதாரம் : ஐக்கிய நாடுகள் – காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

### அட்டவணை 3:
### இந்தியா மற்றும் சீனாவில் உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதிகளின் அமைப்பு 1995–2013

| | | சீனா | | | இந்தியா | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உயர் தொழிற்நுட்ப பொருட்கள்1 | 1995 | 2002 | 2013 | 1995 | 2002 | 2013 |
| 716 | சுழலும் மின் உற்பத்தி இயந்திரம் | 6.7 | 3.2 | 2.7 | 5.2 | 9.6 | 1.7 |
| 718 | மற்ற மின் உற்பத்தி இயந்திரங்கள் | 0.2 | 0.1 | 0.3 | 0.5 | 1.4 | 10.8 |
| 751 | அலுவலக இயந்திரங்கள் | 5.3 | 2.7 | 2.9 | 1.1 | 0.9 | 0.6 |
| 752 | தானியங்கி தகவல் அலசும் இயந்திரங்கள் | 14.3 | 24.9 | 24.8 | 14.1 | 11.3 | 3.2 |
| 759 | அலுவலக இயந்திர பாகங்கள் | 10.3 | 17.2 | 5.6 | 18.5 | 10.6 | 3.3 |
| 761 | தொலைக்காட்சி பெட்டிகள் ஆகியன | 5.0 | 3.0 | 3.2 | 5.7 | 3.2 | 3.2 |
| 764 | தொலை தொடர்பு இயந்திரங்கள், பாகங்கள் | 25.2 | 24.8 | 30.5 | 14.1 | 8.7 | 42.1 |
| 771 | மின் உற்பத்தி இயந்திரங்கள் பாகங்கள் | 9.6 | 5.2 | 4.2 | 7.0 | 9.1 | 11.1 |
| 774 | மின்மருத்துவ எக்ஸ்ரே இயந்திரங்கள் | 0.3 | 0.3 | 0.4 | 2.4 | 13.4 | 3.9 |
| 776 | டிரான்சிஸ்டர்கள், வால்வுகள் | 8.1 | 9.0 | 17.4 | 15.4 | 12.2 | 5.2 |
| 778 | மின் சாதன இயந்திரங்கள் | 14.9 | 9.7 | 7.8 | 16.0 | 19.6 | 15.0 |
| | | சீனா | | | இந்தியா | | |
| | உயர் தொழிற்நுட்ப பொருட்கள்2 | 1995 | 2002 | 2013 | 1995 | 2002 | 2013 |
| 525 | கதிரியக்க கருவிகள் | 7.3 | 3.9 | 1.0 | 0.1 | 0.1 | 0.1 |
| 541 | மருந்துகள் பிற GRP542 | 38.1 | 31.1 | 13.5 | 18.4 | 24.7 | 12.7 |
| 542 | குணமளிக்கும் மருந்துகள் | 9.7 | 4.7 | 4.3 | 76.0 | 63.3 | 59.1 |
| 712 | நீராவி டர்பைன்கள் | 0.2 | 0.6 | 2.0 | 0.6 | 1.6 | 0.5 |
| 792 | விமானம் அதனை சார்ந்த இயந்திரங்கள் | 4.3 | 6.7 | 2.8 | 1.0 | 5.1 | 22.6 |
| 871 | கண் பரிசோதனை கருவிகள் | 8.4 | 18.2 | 56.7 | 0.2 | 0.2 | 0.1 |
| 874 | அளவிடும் கருவிகள் | 11.8 | 18.5 | 18.2 | 3.6 | 4.5 | 4.6 |
| 881 | படப்பிடிப்புசார் கருவிகள் | 20.3 | 16.3 | 1.4 | 0.2 | 0.5 | 0.2 |

ஆதாரம் : ஐக்கிய நாடுகள் – காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

உயர் தொழில் நுட்ப ஏற்றுமதியின் பங்கு படம் 2ல் காட்டப்பட்டுள்ளது. 1991ல் மொத்த உற்பத்தி பொருட்களின் ஏற்றுமதியில் இந்தியாவின் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியின் பங்கு 3.3 சதவிகிதம் மட்டும் இருந்தது. இது உயர்ந்தாலும் அது மிகுந்த குறைந்த அளவே உள்ளது. இந்தியாவின் பங்கு 2013ல் 8.2 சதவிகிதமாக இருந்தது. படத்தில் காட்டப்பட்டுள்ள 5 நாடுகளில் சீனாவின் பங்கு 2013ல் மிக உயர்ந்த 35.5 சதவிகிதத்தை எட்டியது. கடந்த 10 ஆண்டுகளில் அமெரிக்கா மற்றும் ஜப்பானின் பங்கு குறைந்து காணப்பட்டது. ஜெர்மனியின் பங்கு மிக குறைந்து காணப்பட்டது. இந்த பின்னணியில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியில் சீனாவின் பங்கு 1995லிருந்து 2000வது ஆண்டுவரை கணிசமாக உயர்ந்து பிறகு சிறிதளவு உயர்ந்தது.

உயர் தொழில்நுட்ப ஏற்றுமதியில் அமெரிக்கா மற்றும் ஜப்பானின் பங்கை சீனா அபகரித்து கொண்டுள்ளதாக தெரிகிறது. சமீப காலத்தில் உலகத்தின் மிகப்பெரிய நாடுகளை மிஞ்சி சீனா ஒரு பெரிய பொருள் உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளது. சீனாவின் இந்த வெற்றிக்கு உயர் தொழில் நுட்ப பொருட்களின் ஏற்றுமதி உயர்வும் ஒரு முக்கிய காரணமாகும். ஆகவே, இந்தியாவின் மொத்த ஏற்றுமதி அதிகரிக்கவும், உயர் தொழில்நுட்ப ஏற்றுமதி பொருட்கள் உயரவும் இந்திய ஆட்சியாளர்கள் தகுந்த கொள்கை திட்டங்களை வகுக்க வேண்டும்.

**உயர் தொழில் நுட்ப பொருள் உற்பத்தியில் இந்தியா சீனாவின் ஒப்பீடு :**

மேற்கண்டது போல உலகச்சந்தையில் இந்தியா முன்னோடியாக உள்ளது.

## அட்டவணை 4:

## உயர் தொழிற் நுட்பத்தில் இந்தியசீனாவின் பரஸ்பர நன்மைகள் 2013

### உயர் தொழிற்நுட்ப பொருட்கள்–1

| | | சீனா | இந்தியா |
|---|---|---|---|
| 716 | சுழலும் மின் உற்பத்தி இயந்திரம் | 1.1 | 0.6 |
| 718 | மற்ற மின் உற்பத்தி இயந்திரங்கள் | 0.5 | 0.4 |
| 751 | அலுவலக இயந்திரங்கள் | 2.3 | 0.1 |
| 752 | தானியங்கி தகவல் அலசும் இயந்திரங்கள் | 2.8 | 0.1 |
| 759 | அலுவலக இயந்திர பாகங்கள் | 1.5 | 0.1 |
| 761 | தொலைக்காட்சி பெட்டிகள் ஆகியன | 1.5 | 0.2 |
| 764 | தொலை தொடர்பு இயந்திரங்கள், பாகங்கள் | 2.4 | 0.5 |
| 771 | மின் உற்பத்தி இயந்திரங்கள் பாகங்கள் | 1.8 | 0.7 |
| 774 | மின்மருத்துவ எக்ஸ்ரே இயந்திரங்கள் | 0.4 | 0.5 |
| 776 | டிரான்சிஸ்டர்கள், வால்வுகள் | 1.2 | 0.1 |
| 778 | மின் சாதன இயந்திரங்கள் | 1.3 | 0.3 |
| | **உயர் தொழிற்நுட்ப பொருட்கள்–2** | | |
| 525 | கதிரியக்க கருவிகள் | 0.3 | 0.1 |
| 541 | மருந்துகள் பிற GRP542 | 0.3 | 0.8 |
| 542 | குணமளிக்கும் மருந்துகள் | 0.1 | 1.9 |
| 712 | நீராவி டர்பைன்கள் | 1.0 | 0.7 |
| 792 | விமானம் அதனை சார்ந்த இயந்திரங்கள் | 0.1 | 1.3 |
| 871 | கண் பரிசோதனை கருவிகள் | 2.1 | 0.0 |
| 874 | அளவிடும் கருவிகள் | 0.4 | 0.3 |
| 881 | படப்பிடிப்புசார் கருவிகள் | 0.8 | 0.3 |

ஆதாரம் : ஐக்கிய நாடுகள் – காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

இந்தியாவுக்கும், சீனாவுக்கும் பல ஒற்றுமைகள் உள்ளன இரண்டிற்கும் மிகப்பெரிய உள் நாட்டுச் சந்தை உள்ளது, 1980ல் இரு நாடுகளின் பொருளாதார வளர்ச்சியும் ஒரே அளவில் இருந்தது, இரு நாடுகளும் குறைந்த வளர்ச்சிக்குப்பின் தாராளமயமாக்க கொள்கைகளை மேற்கொண்டன.

**2013ல் உயர் தொழில்நுட்பம்சார் பொருள் உற்பத்தி ஏற்றுமதியில் பிலிப்பைன்சின் பங்கு மிக உயர்ந்த அளவில் இருந்தது. மற்ற நாடுகளின் பங்கு விவரமாக இணைப்பு அட்டவணை 2ல் காணலாம்.**

மூன்றாவது அட்டவணையில் 1995 2013ஆம் ஆண்டுகளில் இந்தியா மற்றும் சீனாவில் இருந்த உயர் தொழில் நுட்ப ஏற்றுமதிகள் பற்றி விளக்கப்பட்டுள்ளன. உயர் தொழில் நுட்ப ஏற்றுமதிகள் இரண்டு வகையாக பிரிக்கப்பட்டுள்ளன : உயர் தொழில்நுட்பம் 1 மற்றும் உயர் தொழில்நுட்பம் 2, லால் (2000) உயர் தொழில்நுட்பம் 1 பொருட்கள் மின்னணு மற்றும் மின் பொருள் சாதனங்கள் உள்ளிட்டவை. உயர் தொழில் நுட்பம் 2ல் மற்ற உயர் தொழில்நுட்ப பொருட்கள் அடங்கும். சீனாவில் உயர் தொழில்நுட்பம்1 பொருட்களில் சுழலும் மின் உற்பத்தி இயந்திரங்கள் (716) அலுவலக இயந்திரங்கள் (751), அலுவலக இயந்திரங்கள் உதிரி பாகங்கள் (759) தொலைக்காட்சி பெட்டி (761) ஆகியன, மின் உற்பத்தி இயந்திர பாகங்கள் (771) மற்றும் மின் உற்பத்தி இயந்திரங்கள் (778) ஆகியவை 19952013ஆம் ஆண்டுகளில் குறைந்து காணப்பட்டன. ஆனால், தானியங்கி தகவல் அலசும் இயந்திரங்கள் (752), தொலை தொடர்பு இயந்திரங்கள் (764), டிரான்சிஸ்டர் வால்வுகள் (776) ஆகியவை இதே காலகட்டத்தில் உயர்ந்து காணப்பட்டன. அது போலவே, இந்தியாவில்





### A: 1 உலகப்பொருள் உற்பத்தி ஏற்றுமதிகளில் பொருள் உற்பத்தி ஏற்றுமதியின் பங்கு

| நாடுகள் | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 | 2013 | தரவரிசை 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| சீனா | | 3.53 | 4.92 | 10.04 | 15.69 | 18.60 | 1 |
| ஜெர்மனி | 16.14 | 12.47 | 10.29 | 12.05 | 11.05 | 10.76 | 2 |
| அமெரிக்கா | 12.63 | 11.89 | 13.14 | 9.19 | 7.79 | 7.50 | 3 |
| ஜப்பான் | 12.54 | 11.89 | 10.08 | 7.84 | 7.23 | 5.61 | 4 |
| கொரியா | 2.76 | 3.23 | 3.47 | 3.70 | 4.38 | 4.31 | 5 |
| பிரான்சு | 7.35 | 6.33 | 5.36 | 4.99 | 4.25 | 3.91 | 6 |
| பிரிட்டன் | 6.74 | 5.41 | 4.97 | 4.24 | 3.04 | 2.84 | 7 |
| சிங்கப்பூர் | 1.71 | 2.79 | 2.64 | 2.66 | 2.70 | 2.58 | 8 |
| இந்தியா | 0.57 | 0.65 | 0.74 | 1.02 | 1.47 | 1.81 | 9 |
| ஸ்விட்சர்லாந்து | 2.72 | 2.15 | 1.57 | 1.68 | 1.80 | 1.80 | 10 |
| மலேசியா | 0.72 | 1.55 | 1.77 | 1.51 | 1.42 | 1.24 | 11 |
| ஹங்கேரி | | 0.24 | 0.54 | 0.76 | 0.83 | 0.79 | 12 |
| ரஷ்யா | | | 0.56 | 0.65 | 0.60 | 0.78 | 13 |
| இந்தோனேஷியா | 0.41 | 0.65 | 0.79 | 0.58 | 0.62 | 0.61 | 14 |
| இஸ்ரேல் | 0.48 | 0.48 | 0.58 | 0.51 | 0.58 | 0.55 | 15 |
| பிலிப்பைன்ஸ் | | 0.32 | 0.98 | 0.82 | 0.42 | 0.44 | 16 |
| தென் ஆப்ரிக்கா | 0.55 | 0.39 | 0.58 | 0.58 | 0.43 | 0.38 | 17 |
| காஸ்டா ரிக்கா | | 0.02 | 0.08 | 0.07 | 0.06 | 0.06 | 18 |
| மால்டா | 0.05 | 0.05 | 0.05 | 0.03 | 0.03 | 0.02 | 19 |
| கென்யா | 0.01 | 0.01 | 0.01 | 0.02 | 0.02 | 0.02 | 20 |
| சைப்ரஸ் | 0.01 | 0.01 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 21 |

ஆதாரம் : ஐக்கிய நாடுகள் காம் டிரேடிலிருந்து தயாரிக்கப்பட்டது

சுழலும் மின் உற்பத்தி இயந்திரங்கள் (776) அலுவலக இயந்திரங்கள் (751) தானியங்கி தகவல் அலசும் இயந்திரங்கள் (752) அலுவலக இயந்திரங்களின் உதிரி பாகங்கள் (759) தொலைக்காட்சி பெட்டிகள் (761), டிரான்சிஸ்டர் வால்வுகள் (776), மின் சாதன இயந்திரங்கள் (778) ஆகியனவற்றில் வளர்ச்சி குறைந்து காணப்பட்டது. இந்தியாவில் உயர் தொழில்நுட்ப பொருட்களில் மிகுந்த பகுதியாக மருத்துவம் சார்ந்த கருவிகள் (51.1%) விமானம் சார்ந்த உதிரி பாகங்கள் (22.7%) காணப்பட்டன. மருத்துவம்சார் கருவிகள் முதலீடு மிகுந்த தொகையாக எடுத்துக்கொள்ளலாம். விமானம் மற்றும் அதைச்சார்ந்த இயந்திரங்களை, திறன் மிகுந்த தொழிலாளர் அதிகம் தேவைப்படும்படியான துறைகளாக எடுத்துக் கொள்ளலாம்.

நான்காம் அட்டவணையில் 2013ஆம் ஆண்டிற்கான இந்தியா மற்றும் சீனாவின் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளின் ஒப்பீடு காட்டப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரையில் நாங்கள் பிளாஸாவின் (1965) ஒரு நாட்டின் ஏற்றுமதி செயல்பாட்டின் மதிப்பீட்டை மேற்கொண்டுள்ளோம். அதன்படி அந்த நாட்டின் உலக மொத்த ஏற்றுமதியின் பங்கில் அந்நாட்டின் ஒரு பொருளின் ஏற்றுமதியின் பங்கின் விகிதம் கணக்கிடப்பட்டுள்ளது. உயர் தொழில்நுட்ப பொருட்கள் ஏற்றுமதி பங்கின் 1ல் இந்த விகிதத்தில் சீனா இந்தியாவைவிட எல்லாப் பொருட்களிலும் உயர்வாக உள்ளது. ஆனால், உயர் தொழில் நுட்ப இரண்டாவது மாதிரி பொருட்களில் இந்த விகிதம் சீனாவைவிட இந்தியாவிற்கு அதிகமாக உள்ளது. இதில், மருத்துவப் பொருட்கள் (542) மற்றும்

A2: மொத்த பொருள் உற்பத்தி ஏற்றுமதிகளில் நாடுகளின் உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதியின் பங்கு

| நாடுகள் | 1990 | 1995 | 2000 | 2005 | 2010 | 2013 | தரவரிசை 2013 |
|---|---|---|---|---|---|---|---|
| பிலிப்பைன்ஸ் | | 39.3 | 73.4 | 73.5 | 61.8 | 56.4 | 1 |
| சிங்கப்பூர் | 50.7 | 63.5 | 68.7 | 61.1 | 58.2 | 53.4 | 2 |
| மலேசியா | 48.3 | 54.8 | 65.4 | 58.7 | 54.8 | 51.5 | 3 |
| மால்டா | 47.9 | 61.6 | 71.9 | 52.3 | 49.0 | 42.5 | 4 |
| காஸ்டா ரிக்கா | | 3.7 | 51.9 | 38.8 | 35.6 | 39.8 | 5 |
| சீனா | | 15.3 | 25.3 | 36.2 | 37.2 | 35.5 | 6 |
| கொரியா | 22.2 | 33.5 | 39.8 | 38.9 | 35.4 | 32.9 | 7 |
| ஹங்கேரி | | 13.9 | 31.5 | 34.3 | 38.0 | 27.0 | 8 |
| பிரான்சு | 17.1 | 20.8 | 25.4 | 20.4 | 24.2 | 25.4 | 9 |
| இஸ்ரேல் | 18.0 | 20.1 | 26.7 | 16.7 | 22.8 | 23.6 | 10 |
| ஸ்விட்சர்லாந்து | 13.1 | 15.2 | 16.7 | 17.8 | 21.4 | 22.9 | 11 |
| ஜப்பான் | 28.1 | 32.6 | 32.9 | 25.6 | 22.0 | 20.9 | 12 |
| அமெரிக்கா | 35.1 | 33.4 | 36.8 | 30.4 | 22.1 | 20.0 | 13 |
| ஜெர்மனி | 14.8 | 16.8 | 20.4 | 19.1 | 19.3 | 18.9 | 14 |
| பிரிட்டன் | 22.4 | 29.0 | 31.2 | 24.4 | 17.2 | 16.6 | 15 |
| இந்தோனேஷியா | 2.5 | 7.7 | 20.8 | 17.8 | 15.3 | 13.1 | 16 |
| ரஷ்யா | | | 10.1 | 8.6 | 10.1 | 11.6 | 17 |
| இந்தியா | 3.3 | 3.7 | 4.0 | 4.3 | 7.5 | 8.2 | 18 |
| தென் ஆப்ரிக்கா | 4.8 | 7.6 | 7.5 | 6.4 | 7.0 | 7.7 | 19 |
| சைப்ரஸ் | 0.5 | 0.8 | 1.4 | 6.5 | 30.4 | 6.0 | 20 |
| கென்யா | 4.8 | 2.5 | 1.2 | 2.3 | 6.7 | 4.9 | 21 |
| உலகம் | 20.3 | 23.8 | 28.8 | 25.0 | 24.8 | 24.0 | |

விமானப் பொருட்கள் (792) ஏற்றுமதிகளில் மட்டும் இந்தியாவின் இந்த ஒப்பீட்டு விகிதம் அதிகமாக உள்ளது.

**முடிவுரை மற்றும் கொள்கைகள் உணர்த்துவது :**

இந்தக் கட்டுரையில் பொருள் உற்பத்தி ஏற்றுமதி பற்றிய பல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன, அதில் உயர் தொழில்நுட்ப ஏற்றுமதிகளுக்கு அதிக அழுத்தம் தரப்பட்டுள்ளது. தொலை தொடர்பு சாதனங்கள் மின் உற்பத்தி இயந்திரங்கள், மின் இயந்திரங்கள், மருந்துகள் மற்றும் விமான உதிரி பாகங்கள் ஆகிய உயர் தொழில் நுட்ப பொருட்கள் இந்தத் துறையின் இந்தியாவின் ஏற்றுமதியின் முக்கிய அம்சமாக கருதப்படுகிறது. இந்தத் துறைகளில் மருந்துகள் தயாரிப்பு துறை தவிர மற்ற எல்லா துறைகளிலும் அதிக திறன்மிகு தொழிலாளர் மிகுந்த துறைகளாக உள்ளதால் இந்தியாவின் உயர்ந்து வரும் இளைஞர்களின் எண்ணிக்கைக்கு சாதகமாக உள்ளது. இந்தியாவைக் காட்டிலும் சீனாவின் உயர் தொழிற்நுட்ப ஏற்றுமதிகளில் பலதரப்பட்ட பொருள்கள் இருப்பது காணப்படுகிறது. அதைப் போலவே இந்தியாவும் மாறுவதற்கு திறன்மிகு பொருள் உற்பத்தி முறைகளை மேற்கொள்ள வேண்டும். தற்போது இந்தியாவில் ஆய்வு மற்றும் வடிவமைப்பிற்கு மிகக் குறைந்த அளவே செலவு செய்யப்படுகிறது. 2012ல் நாட்டின் மொத்த உற்பத்தியில் அது 0.7 சதவிகிதமாக இருந்தது. மருந்துகள் தயாரிக்கும் துறையை மேம்படுத்துவதற்கு ஆய்வு மற்றும் வடிவமைப்பு கூடங்களை அதிகமாக திறக்க வேண்டும். தொலை தொடர்பு துறையில் தொழில் நுட்பத்தை மேம்படுத்துவதற்காக அதிக ஊக்கங்கள் அளிக்கப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட துறைகளுக்கு நிதி உதவியும், சாதகமான வரிச் சலுகைகளும் அளிக்கப்பட வேண்டும். நேரடி அந்நிய முதலீடு அதிகமாக்கப்பட்டு தொழில்நுட்பம் மிகுந்த நிறுவனங்கள் இந்தியச் சந்தையில் முதலீடு செய்ய வழிவகை செய்ய வேண்டும். ●



# ‘இந்தியாவில் தயாரிப்போம்’ திட்டத்தின் தேவை

– கஸ்தூரி சக்கரவர்த்தி

உலக அளவில் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள கடன் சுமை மற்றும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களில் இருந்து மீண்டு வர முடியாமல் உலகின் வளர்ந்த நாடுகளில் பெரும்பாலானவை தடுமாறிக்கொண்டிருக்கும் நிலையில், உலகில் வேகமாக வளர்ச்சியடையும் நாடுகளில் ஒன்றாக இந்தியா உருவெடுத்துள்ளது. புதிய முறையில் கணக்கிடப்பட்ட நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு குறித்த விவரங்களை மத்திய புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத் துறை அமைச்சகம் அண்மையில் வெளியிட்டது. அதன்படி, உலகில் மிகவேகமாக வளர்ச்சியடையும் நாடு இந்தியா தான் என்று நம்பப்படுகிறது. எனினும் இந்த சாதனை போதுமானது என்று திருப்தியடைந்து விடலாமா? கூடாது..... ஏனெனில், பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் சமூகத்தின் அனைத்துப் பிரிவினருக்கும் சமமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும். இந்த விஷயத்தில் நாம் மிகவும் பின்தங்கியிருக்கிறோம். ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இதுபோன்ற புள்ளி விவரங்களை மட்டுமே சார்ந்ததல்ல. இத்தகைய வளர்ச்சி விகிதங்கள் சமுதாயத்தின் அடித்தட்டு மக்களை எந்த அளவுக்கு சென்றடைந்து, அவர்களுக்கு பொருளாதார மேம்பாட்டை ஏற்படுத்தித் தருகின்றன என்பது தான் பொருளாதார வளர்ச்சியின் உண்மையான பொருள் ஆகும்.


இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பு, கடந்த சில பத்தாண்டுகளாகவே சேவைத்துறை வளர்ச்சியின் காரணமாகதான் வளர்ச்சியடைந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. சேவைத்துறை சார்ந்த வளர்ச்சி என்பது, வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சியாகும். இதனால், இந்திய மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் வேலையில்லாதவர்களாக உள்ளனர். இந்திய மக்கள் தொகையில் பெரும்பான்மையினர் பணி செய்யத் தகுதியுடைய வயதுப்பிரிவைச் சார்ந்தவர்கள் என்பதால், இவர்கள் இந்தியாவின் மக்கள் தொகையின் லாபப் பங்கு என்று குறிப்பிடப்படுகிறார்கள். இது ஒருவகையில், சாதகமான அம்சம் என்றபோதிலும், சேவைத்துறை வளர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு பொருளாதார வளர்ச்சி எட்டப்படுவதால், அதிக எண்ணிக்கையில் இளைஞர்களை கொண்டிருப்பதே சாகதமான அம்சமாகவும், பாதகமான அம்சமாகவும் மாறியிருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு, இந்தியாவின் வளர்ச்சி முறையை திருத்தியமைக்கவும், அதில் உள்ள குறைகளை களையவும், இந்திய அரசு மற்றும் கொள்கை வகுப்பாளர்கள் முயற்சி செய்து வருகின்றனர். இதற்காக தற்சார்பு பொருளாதாரத்தை உருவாக்குவதும், வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நடைமுறையை ஏற்படுத்துவதும் அவசியமாகிறது. இந்த இரு அம்சங்களையும் ஏற்படுத்துவதற்கு உற்பத்தித் துறையின் பங்களிப்பு மிகவும் முக்கியமாகும்.

**கோட்பாடு சார்ந்த பார்வை:**

முன்னேற்றத்தை நோக்கிய பாதையில் ஒருநாட்டின் பொருளாதாரம் அடையும் வளர்ச்சியை 3 பிரிவுகளாக பிரிக்கும் வழக்கம் காலம் காலமாக இருந்து வருகிறது. இவற்றில் முதல் பிரிவு, பாரம்பரிய சமுதாயமாகும். இச்சமுதாயத்தைச் சேர்ந்தவர்களில் பெரும்பான்மையான தொழிலாளர்கள் வேளாண்மை சார்ந்த தொழிலில் ஈடுபட்டிருப்பார்கள். இரண்டாவது பிரிவு முன்னணி தொழில் நிறுவனங்களால் தொழில்மயமாக்கப்பட்ட சமுதாயமாகும். மூன்றாவது பிரிவு, வளர்ச்சியடைந்த நாடுகளாகும். இந்த நாடுகளின் வளர்ச்சி, பெரும்பாலும் சேவை துறையை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. உலக அளவில் வளர்ச்சியடைந்த நாடுகள் அனைத்திலும்

**வரைபடம் – 1**

**இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு துறை சார்ந்த பங்களிப்புகள் (2004–2005 ஆம் ஆண்டு விலைகள் அடிப்படையில் (சதவீதகக் கணக்கில்)**




ஆதாரம்: இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் பொருளாதார ஆய்வறிக்கை

குறிப்பாக அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி உள்ளிட்ட நாடுகளில் இத்தகைய வளர்ச்சி அணுகுமுறைதான் காணப்படுகிறது. வேகமாக வளர்ச்சியடைந்து வரும் தென்கொரியா, சீனா, தைவான், வியட்நாம் போன்ற ஆசிய மற்றும் தென்கிழக்கு ஆசிய சந்தைப் பொருளாதார நாடுகளும் கிட்டத்தட்ட இத்தகைய வளர்ச்சி முறையைத்தான் கடைபிடித்து வருகின்றனர்.

**இந்தியாவிலும் உற்பத்திக்கான தேவை இருப்பது ஏன்?**

**இந்தியாவின் துறை சார்ந்த வளர்ச்சி முறை:**

இந்தியா பாரம்பரியமான வளர்ச்சிக் கோட்பாடுகளில் இருந்து விலகி, வித்தியாசமான வளர்ச்சிப் பாதையை தேர்ந்தெடுத்திருக்கிறது. இந்தியாவின் ஐந்தாண்டு திட்டக்காலங்களில் இந்தியாவின் வளர்ச்சி விகிதம் சிறிய அளவிலேயே மேம்பட்டு இருக்கிறது. இந்தியா விடுதலையடைந்ததற்கு பிறகு வந்த சில ஆண்டுகளில், இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில், 50விழுக்காட்டிற்கும் அதிகமான பங்களிப்பை வேளாண்துறைதான் செய்திருக்கிறது. சேவைத் துறையின் பங்களிப்பு சுமார் 30 விழுக்காடாகவும், தொழில்துறையின் பங்களிப்பு 20 விழுக்காட்டிற்கும் குறைவாகவும் இருந்திருக்கிறது. 1990 ஆம் ஆண்டுகளுக்குப் பிறகுதான் இந்தியாவின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பிற்கு, ஒவ்வொரு துறையும் பங்களிப்பு விகிதம் படிப்படியாக மாறத் தொடங்கியது. 1990–க்குப் பிறகு, இந்தியப் பொருளாதாரம் சேவைத் துறையைச் சார்ந்து வளர்ச்சியடையும் ஒன்றாக மாறிவிட்டது.

கடந்த சில பத்தாண்டுகளாகவே வேளாண் துறையின் பங்களிப்பு தொடர்ந்து குறைந்து வருகிறது. அதே நேரத்தில் சேவைத் துறையின் பங்களிப்பு தொடர்ந்து அதிகரித்து வருகிறது. அண்மைக்காலங்களில் இந்தியாவில் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் சேவைத் துறையின் பங்களிப்பு சுமார் 60 விழுக்காடு என்ற அளவை எட்டியிருக்கிறது. வளர்ச்சியடைந்த நாடுகளைப் போல அல்லாமல், இந்தியாவின் வளர்ச்சிப் பாதை வேளாண்துறை சார்ந்த நிலையில் இருந்து நேரடியாக சேவைத்துறை சார்ந்ததாக மாறியிருக்கிறது. 1951 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டுவரையிலான



காலத்தில், நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில், தொழில்துறையின் பங்களிப்பை சிறிய அளவிலான மாற்றங்களையே சந்தித்திருக்கிறது. இத்துறையின் பங்களிப்பு குறைந்த பட்சம் 16 முதல் அதிகபட்சம் 24 விழுக்காடு என்ற அளவிலேயே இருந்து வந்திருக்கிறது. பொருட்கள் உற்பத்தி என்ற அடிப்படையில் பார்த்தாலும், வேலைவாய்ப்பை வழங்குவது என்ற அடிப்படையில் பார்த்தாலும், உண்மையான பொருளாதார வளர்ச்சியின் அடிப்படையாக திகழ்வது உற்பத்தித்துறைதான். இத்தகைய சிறப்பு கொண்ட உற்பத்தித் துறையின் வளர்ச்சி, மிகக் குறைந்த அளவிலேயே இருப்பது கவலையளிக்கும் விஷயமாகும். நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு பல்வேறு துறைகளின் பங்களிப்பில் ஏற்பட்டுள்ள மாற்றம் மற்றும் வளர்ச்சியின் தாக்கம் குறித்து அறிந்துகொள்ள வேண்டுமானால், வேலைவாய்ப்பு மற்றும் வேலைவாய்ப்பின்மை விகிதத்தை நான் ஆராய வேண்டும். பொருளாதார வளர்ச்சியின் பயன்கள், சமுதாயத்தின் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைந்துள்ளனவா என்பதை சரிபார்க்க இதுதான் சரியான அளவீடாகும்.

**வேலைவாய்ப்பின்மை சூழல்**

**அட்டவணை 1 –**

**இந்தியாவின் வேலைவாய்ப்பின்மை சூழல்**

| **ஆண்டு** | **தற்போதைய தினசரி நிலைமை வேலைவாய்ப்பின்மை விகிதம்** சதவீதத்தில் |
|---|---|
| 1999–00 | 7.3 |
| 2004–05 | 8.2 |
| 2009–10 | 6.6 |
| 2011–12 | 5.6 |

ஆதாரம் : பொருளாதார ஆய்வறிக்கை 2014–15

இந்தியாவில் வேலைவாய்ப்பின்மை சூழல் தொடர்ந்து கவலையளிக்கும் வகையிலேயே உள்ளது. நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு வெறும் 14 விழுக்காடு மட்டுமே பங்களிக்கும். வேளாண்துறைதான் 50 விழுக்காட்டிற்கும் அதிகமான தொழிலாளர்களுக்கு வேலைவழங்கும் துறையாக உள்ளது. அதே நேரத்தில், நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு சுமார் 60 விழுக்காடு பங்களிப்பு வழங்கும் சேவைத்துறை, 25 விழுக்காடு தொழிலாளர்களுக்கு மட்டுமே வேலைவழங்குகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

**சேவைத் துறை சார்ந்த வளர்ச்சி**

இந்தியாவில் இயற்கையாகவே சேவைத்துறை வளர்ச்சிக்கு சாதகமான சூழல் நிலவுகிறது. இதைத்தான் பிளவுத்தாக்கம் என்ற பெயரில் பொருளாதார வல்லுநர் பகவதி விளக்கியிருந்தார். முதிர்ச்சியடைந்த பொருளாதாரங்களில் தொழில்துறை அதிக வளர்ச்சியை எதிர்கொள்ளும்போது, அதன் துணைத் தேவைகளான சட்டசேவை, பாதுகாப்பு சேவை, ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு சேவை ஆகியவற்றை தொழில் நிறுவனங்கள் அயல் பணி முறையில் பெறும். இந்த சேவைகளை வழங்குவதால், சேவைத்துறை அதிக வளர்ச்சியடைந்து நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பிற்கு அதிக அளவில் பங்களிப்பு செய்யும். இதுதான் பொருளாதார வல்லுநர் பகவதி முன்வைக்கும் பிளவுத்தாக்கம் கொள்கையாகும். இந்தியாவில் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த சேவைகளை வழங்குவதற்கு குறைந்த ஊதியத்தில் பணிபுரியும் பணியாளர்கள் அதிக எண்ணிக்கையில் இருப்பதால், சேவைத்துறை வளர்ச்சிக்கு சாதகமான சூழல் நிலவுகிறது. உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் இந்தியாவில் கிடைக்கும் குறைந்த ஊதியத்திலான மனித வளத்தைப் பயன்படுத்திக்கொள்ளும் நோக்குடன், தங்களின் அலுவலகங்களை இங்கு அமைக்கின்றனர். வேறு சில நிறுவனங்கள் தங்களுக்குத் தேவையான சேவைகளை இந்திய நிறுவங்களிடம் இருந்து அயல் பணி முறையில் பெற்றுக் கொள்கின்றன. அதுமட்டுமின்றி, இந்தியாவில் தனிநபர் வருமானம் அதிகரித்து வருவதால், கல்வி, சுகாதாரம், மருத்துவம், தொலைத்தொடர்பு போன்ற சேவைத் துறை செலவுகள் அதிகரித்து வருவதும், சேவைத் துறை வளர்ச்சிக்கு வழிவகுக்கிறது.

இரண்டாவது அட்டவணையில் உள்ள தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பார்க்கும்போது, நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி

**அட்டவணை –2**

துறை சார்ந்த வேலைவாய்ப்பு விகிதத்தில் ஏற்பட்ட மாற்றம்

| ஆண்டு | வேலை மற்றும் அதைச் சார்ந்த தொழில் | தொழில்துறை | சேவைத்துறை |
|---|---|---|---|
| 1951 | 72.1 | 10.6 | 17.3 |
| 1991 | 66.9 | 12.7 | 20.4 |
| 200910 | 53.2 | 21.5 | 25.3 |

மதிப்பிற்கு ஒவ்வொரு துறையும் அளிக்கும் பங்களிப்பு, எந்த அளவுக்கு அதிகரித்திருக்கிறதோ, அதற்கு இணையாக அத்துறையின் வேலைவாய்ப்புகள் அதிகரிக்கவில்லை என்பதை அறிந்துகொள்ள முடியும். அட்டவணையில் உள்ளவாறு நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்புக்கு, ஒவ்வொரு துறையும் அளித்த பங்களிப்பையும், அதே காலகட்டத்தில் அத்துறைகளில் ஏற்பட்ட வேலைவாய்ப்பையும் ஆய்வு செய்து பார்க்கும்போது, சேவைத்துறை இந்தியாவில் வளர்ச்சிப் பாதையில் அழைத்துச் செல்கிறது என்பதையும், அதே நேரத்தில் இந்த வளர்ச்சி என்பது வேலைவாய்ப்பை உருவாக்காத வளர்ச்சிதான் என்பதையும் நமக்கு உணர்த்துகிறது. வேலைவாய்ப்பில்லாத வளர்ச்சி என்பது, அனைவருக்கும் பயனளிக்கக்கூடிய முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான நோக்கங்களை திருப்தி செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வேலைவாய்ப்பைப் பெருக்காத, சந்தையால் தீர்மானிக்கப்படும் சேவை துறை சார்ந்த வளர்ச்சியில் இருந்து, இதுவரை எட்டப்பட்ட ஒருசார்பு பயன்தரும் பொருளாதார வளர்ச்சியால் ஏற்பட்ட ஏற்றத் தாழ்வுகளை போக்கும் நோக்குடன், உற்பத்தித் துறை வளர்ச்சியை பெருக்குவதற்காக அரசு நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை இது உணர்த்துகிறது.

### உற்பத்தித் துறையில் கவனம் செலுத்துவதற்கான தேவை

மக்கள்தொகை மற்றும் தேவையில் இந்தியா தனித்துவம் பெற்ற நாடாக விளங்குகிறது. அதனால்தான், அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய இந்தியப் பிரதமர், ஜனநாயகம் (Democracy), தேவை (Demand), மக்கள்தொகை (Demography) ஆகிய 3 'D'களிலும் சிறந்து விளங்கும் தனித்துவமான நாடாக இந்தியா திகழ்கிறது என்று கூறியிருந்தார். இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான உள்நாட்டு நுகர்வோர் உள்ளனர். இந்தியர்களின் தனிநபர் வருமானம் அதிகரித்து வருவதால், உள்நாட்டின் தேவைகளும் அதிகரித்து வருகின்றன. விநியோக தரப்பைப் பொறுத்தவரை, பொருளாதார ரீதியாக தீவிரமாக செயல்படும் மக்களின் அளவு, 1991 ஆம் ஆண்டின் அளவான 57.7%–லிருந்து, 2013 ஆம் ஆண்டில் 63.3%–ஆக அதிகரித்திருக்கிறது. (ஆதாரம்: பொருளாதார ஆய்வறிக்கை 2014–2015). இதன் மூலம் தேவையும் விநியோகமும் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதால், உலகின் தலைசிறந்த உற்பத்தி மையங்களில ஒன்றாக இந்தியா உருவெடுப்பதற்கான வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தியாவின் உற்பத்தி நடவடிக்கைகளின் ஒருபிரிவு, ஏற்றுமதி துறைக்கு மாறினால், இந்தியாவுக்குக் கிடைக்கும் பயன்கள் பல மடங்கு அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

### இந்திய உற்பத்தித் துறையின் தற்போதைய நிலைமை

இந்திய விடுதலைக்குப் பிறகு, 1990 ஆம் ஆண்டு முதல் தாராளமயமாக்கல் கொள்கை கடைபிடிக்கப்படுவதற்கு முன்புவரை இந்தியாவின் தொழில்துறை உற்பத்தியை, தொழில்துறை செயல்பாடுகளின் அடிப்படையில் 3 கட்டங்களாகப் பிரிக்கலாம். 1951 – 65 ஆண்டுகாலத்தில் தொழில்துறை உற்பத்தி அதிவேக வளர்ச்சியை எட்டியது. 1965–80 காலத்தில், தொழில்துறை பெரும் பின்னடைவை எதிர்கொண்டது. 1981–91 காலத்தில் தொழில்துறை பின்னடைவு நிலையில் இருந்து ஓரளவு மீண்டது. அதற்குப் பிறகு 11–வது ஐந்தாண்டுத் திட்டக் காலம் வரையிலான காலக்கட்டத்தில், தொழில்துறையைப் பொறுத்தவரை குறிப்பாக, உற்பத்தித் துறையைப் பொறுத்தவரை ஆண்டு வளர்ச்சிவிகிதம் சராசரியாக 5 முதல் 7 விழுக்காடு என்ற அளவிலேயே இருந்து வருகிறது. இது அதிவேக வளர்ச்சியை அல்லாமல், மிக மோசமான சரிவும் அல்லாத சராசரியான முன்னேற்றமாகும். எனினும், 12–வது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் உற்பத்தித் துறை கிட்டத்தட்ட முடங்கிக்கிடக்கிறது.



2012–13–ல், 2013–14 ஆம் ஆண்டில் உற்பத்தித் துறை சராசரியாக, 0.2% வளர்ச்சியை மட்டுமே எட்டியிருப்பதாகவும், இது மிகவும் ஏமாற்றம் அளிக்கக்கூடிய வளர்ச்சி என்றும், 2013–14 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

எனினும், கடந்த 2 ஆண்டுகளில் உற்பத்தித்துறை எட்டிய வளர்ச்சி தொடர்பான புள்ளி விவரங்களை மிகவும் கவனமாக பார்க்க வேண்டும் என்றும், இதை மத்திய புள்ளியியல் அமைப்பு திருத்தியமைப்பதற்கான வாய்ப்புகள் உள்ளது என்றும் பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த முதல்கட்ட உற்பத்தித்துறை வளர்ச்சி என்பது, தொழில்துறை உற்பத்தி விகிதத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதாகும். 2 மற்றும் 3 ஆம் கட்ட கணக்கீடுகள் ஆண்டு தொழில்துறை கணக்கெடுப்பின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் என்பதால், இந்த அளவு அதிகரிப்பதற்கு வாய்ப்புகள் உள்ளன. அதுமட்டுமின்றி, உற்பத்தித் துறையின் வளர்ச்சி, புதிய வரிசை தகவல்களைக் கொண்டு மதிப்பிடப்பட்டது என்பதால், அதன் துல்லியத் தன்மையை உறுதி செய்வது மிகவும் சிக்கலானதாகும்.

அட்டவணை – 3:

தொழில்துறை வளர்ச்சியில் ஏற்பட்ட மாற்றம் (நிலையான விலைப்புள்ளி அடிப்படையில் / சதவீத கணக்கில்)

| | 2012-13 | | 2013-14 | | 2014-15 (AE) | |
|---|---|---|---|---|---|---|
| | 2004-05 | 2011-12 | 2004-05 | 2011-12 | 2004-05 | 2011-12 |
| | வரிசை | வரிசை | வரிசை | வரிசை | வரிசை | வரிசை |
| உற்பத்தித்துறை | 1.1 | 6.2 | 0.7 | 5.3 | NA | 6.8 |
| தொழில்துறை | 1.0 | 2.4 | 0.4 | 4.5 | NA | 5.9 |

ஆதாரம்: பொருளாதார ஆய்வறிக்கை 2014–15

### புதிய அடிப்படையில் உற்பத்தித் துறை வளர்ச்சியை மதிப்பிடுதல்

உற்பத்தித் துறை வளர்ச்சியை பழைய முறையில் மதிப்பிடுவதிலும் புதிய முறையில் மதிப்பிடுவதிலும் கிடைக்கும் விவரங்கள் பெருமளவில் முரண்பாடுகளைக் கொண்டவைகளாக உள்ளன. 2012–13–ல் மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளின் உற்பத்தித் துறை வளர்ச்சியை பழைய முறையிலும், புதிய முறையிலும் மதிப்பிட்டபோது, இரண்டுக்கும் இடையே குறைந்தது 5 வேறுபாடு இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த வேறுபாடுகள் என்று கூறுவதைவிட புள்ளி விவரங்களின் அடிப்படையிலானவை என்பது குறிப்பிடத்தக்கதாகும். மத்திய கம்பெனிகள் விவகாரத்துறை அமைச்சகம் எம்.சி.ஏ.21 பிரிவின்கீழ் மேற்கொள்ளப்பட்ட மின்நிர்வாக திட்டத்தின் அடிப்படையில் உற்பத்தித் துறை வளர்ச்சி குறித்த புள்ளி விவரங்கள் விரிவாகவும், விளக்கமாகவும் ஆய்வு செய்யப்பட்டதால், இந்த வேறுபாடு ஏற்பட்டிருக்கலாம். புதிய முறையில் உற்பத்தித் துறையில் உள்ள உற்பத்தி நிறுவனங்கள் மேற்கொண்ட வணிகமும் சேர்க்கப்படுகின்றது. பழைய முறையில் உற்பத்தி நிறுவனங்கள் மேற்கொண்ட வணிகம் சேவை கணக்கில் சேர்க்கப்பட்டு வந்தது. உற்பத்தித் துறையின் உண்மையான வளர்ச்சி ஜவுளித்துறை, ஆயத்த ஆடைத்துறை, தோல் பொருட்கள் துறை ஆகியவற்றில் பார்க்க முடிகிறது. இத்துறைகள் 2012–13 மற்றும் 2013–14 ஆம் ஆண்டுகளில் சராசரியாக 17.7% வளர்ச்சியை எட்டின என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் அதிக உற்பத்தித் திறன் கொண்ட பதிவு செய்யப்பட்ட உற்பத்தி நிறுவனங்கள் இத்துறையை அதிக வளர்ச்சியை எட்டும் துறையாக மாற்றும் திறன்கொண்டவை என்பது குறிப்பிடத்தக்கது. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்களின் உற்பத்தித் திறன் மதிப்பு, பதிவு செய்யப்படாத நிறுவனங்களின் உற்பத்தித் திறனைவிட, 7.2 மடங்கு அதிகம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஆதாரம் : பொருளாதார ஆய்வறிக்கை 2014–15)

### உற்பத்தித் துறையில் காணப்படும் முட்டுக்கட்டைகள்

இந்தியாவின் உற்பத்தித் துறை நிலம் கையகப்படுத்துதல், மறுவாழ்வு, பல்வேறு வகையான சட்டங்கள் மற்றும் விதிகளைப் பின்பற்றவேண்டிய கட்டாயம் தொழில் முனைவோர்களுக்கு வழிகாட்டுவது, தெளிவான சூழல் இல்லாமை, தொழிற்சாலைகளை அமைப்பதற்கு ஒப்புதல் பெறுவதற்காக மிகவும் சிக்கலான பல்வேறு கட்ட நடைமுறைகளை

எதிர்கொள்ளவேண்டியிருப்பது சந்தை யுத்திகள் மற்றும் ஏற்றுமதி ஒருங்கிணைப்புகள் இல்லாமல் இருப்பது, கட்டமைப்பு வசதிகள், மின்சாரம் மற்றும் குடிநீர் விநியோகம் போதிய அளவு இல்லாமல் இருப்பது என ஏராளமான பிரச்னைகளை இன்னும் எதிர்கொண்டு வருகிறது. கடந்த சில காலாண்டுகளில் அதிக எண்ணிக்கையில் கிடப்பில் போடப்பட்ட திட்டங்கள் அதிக எண்ணிக்கையில் உள்ள துறைகளில் இதுவும் ஒன்று என்று 2014–15 ஆம் ஆண்டிற்கான பொருளாதார ஆய்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. உற்பத்தித் துறையில் கிடப்பில் போடப்பட்டத் திட்டங்களில் பெரும்பாலானவை இரும்பு, சிமெண்ட், ஆயத்த ஆடைகள் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஆலைகள் தொடர்பானவையாகும். சுமார் 212 உற்பத்தித் துறைதிட்டங்கள் போதிய நிதி இல்லாமை, போதிய தேவையில்லாமை, சாதகமான சந்தை சூழல் இல்லாமை ஆகிய காரணங்களால் கைவிடப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

**உற்பத்தித் துறை வளர்ச்சிக்கான கொள்கைகள்**

இந்தியாவின் உற்பத்தித் துறை என்பது தொழிலாளர்கள், தொழில்முனைவோர் என்ற இரண்டு முக்கிய பங்கேற்பாளர்களை அடிப்படையாகக் கொண்டதாகும். இந்த இரு தரப்பினருக்கும் இடையே சமநிலையை ஏற்படுத்தி, ஒருங்கிணைப்பை உருவாக்குவதற்கான அமைப்பாக மத்திய அரசு செயல்பட்டு வருகிறது. உற்பத்தித் துறையில் தொழிலாளர்கள் மற்றும் தொழில் முனைவோருக்கு இடையே மத்தியஸ்தராக செயல்படும் அரசு, இருதரப்பினரின் நலனைக் கருத்தில்கொண்டு அறிவிக்கும் கொள்கைகளும் செயல்படுத்தும் திட்டங்களும் ஒட்டுமொத்த உற்பத்தித் துறைக்கும் ஊக்க சக்தியாகத் திகழ்கின்றன.

**இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் ஏன் தேவை?**

இந்தியாவில் தயாரிப்போம் திட்டம் இந்தியாவை உலக உற்பத்தி மையமாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சரியான நேரத்தில் அறிவிக்கப்பட்ட கொள்கை முயற்சியாகும். புதிய முதலீடுகளை ஈர்பதற்காகவும், உற்பத்தியைப் பெருக்குவதற்காகவும் அறிவிக்கப்பட்டுள்ள இந்தத்திட்டம், உற்பத்தித் துறை எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களை வெவ்வேறு வகையான குறுக்கீடுகள் மூலம் தீர்த்து வைக்கின்றன.

**நடைமுறை தாமதத்தை குறைப்பதற்கான நடவடிக்கைகள்:**

நடைமுறை தாமதத்தைக் குறைப்பதற்காக பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமானது தொழில்துறை உரிமங்களைப் பெறுவதற்காக 24 மணிநேரமும் விண்ணப்பிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ள மின்னணு வணிக (E-Biz) இணையதளம் ஆகும். சுற்றுச் சூழல் அனுமதியையும், ஆன்–லைன் முறையில் பெறுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இவைதவிர, தேசிய முதலீட்டு மற்றும் உற்பத்தி மண்டலங்களை உருவாக்குவதற்கும் இந்தக் கொள்கை ஒப்புதல் அளித்திருக்கிறது. இந்த மண்டலங்களில் உற்பத்தி நிறுவனங்களை தொடங்குவதற்கு ஒற்றைச் சாளர முறையில் உரிமம் வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**புதிய சந்தைகளையும், பயிற்சிபெற்ற தொழிலாளர்களையும் உருவாக்குதல்**

புதிய ஸ்மார்ட் நகரங்கள், தொழில்தாழ்வாரங்கள், தொழில்தொகுப்புகள் ஆகியவற்றை உருவாக்க மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது. இதன் மூலம், பல்வேறு நிலைகளில் உற்பத்தி தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதும் உற்பத்தி மற்றும் விற்பனைக்கு இடையே பிணைப்பை உண்டாக்குவதும் சாத்தியமாகும். சி.எம்.எல்.வி. நாடுகள் என்றழைக்கப்படும் கம்போடியா, மியான்மர், லாவோஸ், வியாட்நாம் ஆகிய நாடுகளில் உற்பத்தி மையங்களை அமைப்பதற்கு உதவும் வகையில், திட்ட மேம்பாட்டு நிறுவனங்கள் மூலம் இந்திய உற்பத்தியாளர்களுக்கு உலகம் முழுவதும் சந்தைத் தளத்தை ஏற்படுத்துவது சிறப்பான திட்டமாகும். அதுமட்டுமின்றி, திறன் மேம்பாட்டுக்கான நிறுவனங்கள் மற்றும் இளைஞர் நலன் சார்ந்த திட்டங்களும் இந்தியாவில் தயாரிப்போம் கொள்கையில் இடம்பெற்றுள்ளன. திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனையும் திறனுக்கான தனி





அமைச்சகம் உருவாக்கப்படும் என்பது சாதகமான மாற்றமாகும். இந்திய இளைஞர்களுக்கு புதிய திறன்மேம்பாட்டு தொழில்நுட்பங்களை வழங்குவதற்காக தேசிய திறன் மேம்பாட்டுக் கழகம், தேசிய திறன்மேம்பாட்டு முகமை ஆகியவற்றின் மூலம் இந்த அமைச்சகம் நடவடிக்கை எடுக்கும். மத்திய அரசால் உருவாக்கப்பட்ட திறன் இந்தியா முயற்சி, அதிக அளவில் பணியாளர்கள் தேவைப்படும் தோல்பொருள் தொழில்கள், ஜவுளித் தொழில், உணவுப் பதன தொழில், சணல், பட்டுப்புழு வளர்ப்பு, கைவினைப் பொருட்கள் ஆகிய துறைகளில் பணியாற்றுவதற்கான பயிற்சியை இந்திய இளைஞர்களுக்கு வழங்குவதில் கவனம் செலுத்தும். ஆண்டுதோறும் 1,44,000 இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் வகையில், இந்திய தோல்பொருள் தொழில் மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது இந்தியாவின் திறன்மேம்பாட்டு முயற்சிக்கு பெரிய அளவில் உத்வேகம் அளிக்கும். 2026 ஆம் ஆண்டிற்குள் உற்பத்தித் துறையில் 10 கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்க வேண்டும், உற்பத்தித் துறையை வளர்ச்சியடையச் செய்ய வேண்டும் என்ற நோக்குடன், கடந்த 2011 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்ட தேசிய உற்பத்திக் கொள்கை, உலக அளவில் போட்டியிடும் உற்பத்தித் துறை, இந்தியாவில் உருவாவதை உறுதி செய்யும்.

**அதிக மதிப்பு கொண்ட தொழில்துறைகளுக்கு ஊக்கமளித்தல்**

இந்தியாவின் தொழில்துறையில் உலகின் பங்கேற்பை ஊக்குவிக்கும் வகையில், அதிக மதிப்பு கொண்ட தொழில்துறையில் முதலீடு செய்வதற்கான உச்சவரம்பும், கட்டுப்பாடுகளும் தளர்த்தப்பட்டிருக்கின்றன. உதாரணமாக, பாதுகாப்புத் துறையில் நேரடி அந்நிய முதலீட்டு உச்சவரம்பு 26%–லிருந்து, 49%–ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதே துறையின் ஃபோர்ட்போலியோ முதலீட்டிற்கான உச்சவரம்பு, 24%–ஆக அதிகரிக்கப்பட்டிருக்கிறது. இந்த முதலீட்டை தானியங்கி முறையில் செய்யமுடியும். பாதுகாப்புத் துறையில் அதிநவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தும் விஷயத்தில் 100 விழுக்காடு நேரடி அந்நிய முதலீடு அனுமதிக்கப்படும். இந்த வகை முதலீடு ஒவ்வொரு திட்டத்தையும் ஆய்வு செய்து அதன் அடிப்படையில் அனுமதிக்கப்படும். தொடர் வண்டித்துறையில் சில குறிப்பிட்ட தொடர் வண்டி கட்டமைப்புத் திட்டங்களில் கட்டுமானம், இயக்கம், பராமரிப்பு ஆகிய திட்டங்களில் 100% நேரடி அந்நிய முதலீடு, தானியங்கி முறையில் அனுமதிக்கப்படும். இந்தியா அதிக மதிப்பு கொண்ட உற்பத்தித் துறையில் தனி கவனம் செலுத்துவதற்கு இந்த துறைகள் உதவி செய்யும்.

**தொழிலாளர்கள் / பணியாளர்கள் துறை சார்ந்த சீர்திருத்தங்கள்**

அதிக ஆபத்து இல்லாத மற்றும் அதிக தீமைகளை ஏற்படுத்தாத அனைத்து வணிகங்களிலும் சுயசான்றிதழ் அளிக்கும் முறை அறிமுகம் செய்யப்பட்டிருப்பது, சிறு தொழில் முனைவோர் தங்களுக்கான வணிகத்தைத் தொடங்க ஊக்குவிக்கும். இந்தியாவில் 5%–க்கும் குறைவான தொழிலாளர்கள்தான் முறையான தொழில் பயிற்சி பெற்றுள்ளனர். இத்தகைய சூழலில், கிராமப்புற இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி அளிப்பதற்காக தீனதயாள் உபாத்யாயா கிராமப்புற தொழில்முனைவோர் திட்டம் ஒரு மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும். அதுமட்டுமின்றி, நாடாளுமன்றத்தில் நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்து பேசிய நிதியமைச்சர் சுட்டிக்காட்டியவாறு, பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் திறன்மேம்பாட்டுத் திட்டங்களை ஒருங்கிணைத்து, தேசிய திறன் மேம்பாட்டு இயக்கம் என்ற ஒரே குடையின்கீழ் கொண்டுவரவேண்டியதும் அவசியமாகும்.

இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தில் சிறு–குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு

வேலைவாய்ப்புப் பெருக்கம், நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் உற்பத்தித் துறையின் பங்களிப்பை அதிகரித்தல், ஏற்றுமதியை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம், இந்தியாவில் தயாரிப்போம் திட்டத்தை வலுப்படுத்துவதற்கு சிறு–குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களால் முக்கியப்பங்காற்ற முடியும். நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தியில் இந்த நிறுவனங்கள் ஏற்கெனவே 45 விழுக்காட்டை பங்களிக்கின்றன என்பதை,

நாட்டின் ஒட்டுமொத்த ஏற்றுமதியில் இந்த நிறுவனங்களின் பங்கை சுமார் 40% என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்த இந்திய பொருளாதாரமும், குறிப்பாக உற்பத்தித்துறை கடுமையான பின்னடைவை சந்தித்து வரும் போதிலும், உற்பத்தி, வேலைவாய்ப்பு ஆகிய இரண்டுக்கும் சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில்துறை தொடர்ந்து சிறப்பான பங்களிப்பை செய்து வருகிறது. எனினும் அத்துறை எதிர்கொண்டு வரும் பெரிய சிக்கல்களால், குறிப்பாக முதலீடு மற்றும் கடன் வசதிகள் போதிய அளவில் கிடைக்காமை, தொழில்நுட்ப அறிவு இல்லாமை, உலக சந்தையை அணுகுவதற்கு போதிய வாய்ப்புகளும், அதுகுறித்த விழிப்புணர்வு மற்றும் தொடர்பும் இல்லாமை, சாலைகள், மின்சாரம் மற்றும் குடிநீர் வசதி உள்ளிட்ட கட்டமைப்பு வசதிகள் போதிய அளவில் இல்லாமை, பலவிதமான தொழிலாளர் சட்டங்கள், பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், சந்தைப்படுத்துவதற்கும் போதிய அளவில் பயிற்சி பெற்ற மனித வளம் இல்லாமை போன்றவற்றால் சிறு, குறு, நடுத்தர தொழில்துறையின் நிலைமை மிகவும் கவலையளிப்பதாக உள்ளது.

தேசிய உற்பத்தி போட்டித்தன்மை திட்டம், கடன் உத்தரவாதத் திட்டம், தொகுப்பு மேம்பாட்டுத்திட்டம் உள்ளிட்ட திட்டங்களின் மூலமாக மத்திய அரசு செய்யும் உதவிகள், ரூ.20,000 கோடி மூலதன நிதியுடன் மத்திய அரசு அறிவித்துள்ள முத்ரா வங்கித் திட்டம் ஆகியவை 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்திற்கான சிறு, குறு, நடுத்தர தொழில்துறையின் பங்களிப்பை வலுப்படுத்துவதற்கான வரவேற்கத்தக்க நடவடிக்கை ஆகும். சிறு, குறு, நடுத்தர தொழில்துறையினரால் தயாரிக்கப்படும் குறைந்த விலையிலான, அதிகத் தரம் கொண்ட பொருட்களை www.msmeshopping.com என்ற இணையதளம் வழியாக ஆன்லைன் முறையில் வினியோகிக்கும் புதுமையான திட்டத்தை தேசிய சிறுதொழில் கழகம் தொடங்கியுள்ளது.

எளிதாக வணிகம் செய்ய 'இந்தியாவில் தயாரிப்போம்' திட்டத்தில் நடவடிக்கை: உலக வங்கி தயாரித்து வெளியிட்டுள்ள எளிதாக வணிகம் செய்வதற்கு ஏற்ற நாடுகளின் குறியீடு –2015 பட்டியலில், மொத்தமுள்ள 189 நாடுகளில் இந்தியா 142 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. எளிதாக வணிகம் செய்யும் விஷயத்தில் இந்தியா உலக அளவில் மிகவும் பின்தங்கியிருப்பது கவலையளிக்கும் ஒன்றாகும். இத்தகைய சூழலில் வணிகத்திற்கான வாய்ப்புகளை உருவாக்கித் தருவதில் ' இந்தியாவில் தயாரிப்போம்' திட்டம் அதிக கவனம் செலுத்துகிறது. முதல் முறையாக முதலீடு செய்வதற்கும், வழிகாட்டுவதற்கும் தனித்தனி குழுக்கள் அமைக்கப்பட்டிருப்பது,

அட்டவணை – 4

**சிறு–குறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி**

| ஆண்டு | மொத்த உற்பத்தியில் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு (%) | சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களில் வேலைவாய்ப்பு (லட்சத்தில்) | நாட்டின் ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பில் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு (%) |
|---|---|---|---|
| 2006–07 | 42.02 | 805.23 | 7.73 |
| 2007–08 | 41.98 | 842.00 | 7.81 |
| 2008–09 | 40.79 | 880.84 | 7.52 |
| 2009–10 | 39.63 | 921.79 | 7.49 |
| 2010–11 | 38.48 | 965.15 | 7.42 |
| 2011–12 | 37.52 | 1011.80 | 7.28 |

ஆதாரம்: சிறு, குறு, நடுத்தர தொழில்துறையின் ஆண்டறிக்கை 2013–14, சிறு, குறு, நடுத்தர தொழில் அமைச்சகம்



ஒற்றைச்சாளர முறையில் அனுமதி பெறுவதற்கான வசதிகள் செய்யப்பட்டிருப்பது ஆகியவை உற்பத்தித்துறையில் முதலீட்டை அதிகரிக்கும். இதற்கெல்லாம் மேலாக எளிமையான, உறுதியான, யாருக்கும் பாதிப்பை ஏற்படுத்தாத வரி முறையையும் இந்த திட்டம் உருவாக்கியுள்ளது. பொருட்கள் மற்றும் சரக்கு வரி விரைவாக அறிமுகம் செய்யப்பட்டால், அது இந்தியாவில் வணிகம் செய்யப்படும் முறையில் மிகப்பெரிய சாதகமான மாற்றத்தை ஏற்படுத்தும்.

**உற்பத்தித்துறை செல்லவிருக்கும் பாதை:**

உலகம் முழுவதும் பசுமைக்குச் செல்வோம் (Go-green) என்ற புதிய கொள்கை கடைபிடிக்கப்பட்டு வருகிறது. உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு தனித்துவமான துணி வகைகள், சணல் பொருட்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்வதற்கும், காற்றாலை மின்சாரம் மற்றும் சூரிய ஒளி மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கான கருவிகளை தயாரிப்பதற்கும் இந்தக் கொள்கை பயன்படுத்தப்படுகிறது. இந்தக் கொள்கையை இந்திய உற்பத்தியாளர்கள் கடைபிடிப்பதற்கான காலம் வந்துவிட்டது.

இந்தியாவுக்கு உள்ளேயும், வெளியேயும் போக்குவரத்து இணைப்பு வசதிகளை வலுப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகும். சாலை, தொடர்வண்டி, மற்றும் நீர்வழிப் போக்குவரத்தை விரிவுபடுத்துவது, இந்தியாவில் நீண்ட தொலைவுக்கு பரந்து விரிந்து கிடக்கும் கடற்கரைப் பரப்பை கப்பல் மற்றும் படகுப் போக்குவரத்துக்காக பயன்படுத்திக் கொள்வது ஆகியவை இந்தியாவில் உற்பத்தித் துறையின் வளர்ச்சிக்கு வலிமையான அடித்தளத்தை அமைக்கும். சரக்குப் போக்குவரத்துக்காக தனிப் பாதை அமைப்பது, தொழில் தாழ்வாரங்களை அமைப்பது ஆகியவை உற்பத்தித் துறையின் தேவை மற்றும் உற்பத்தியை ஊக்குவிக்கும் என்பதால் அவற்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் விரைவு படுத்தப்பட வேண்டும். இவற்றை செய்வதன் மூலம் உற்பத்தித்துறைக்கு தற்சார்பு தன்மை கொண்ட தேவையை உருவாக்க முடியும்.

வேலைவாய்ப்பு மற்றும் உற்பத்தியைப் பெருக்குவதற்கு உள்ளூர் கலாச்சாரமும், பாரம்பரியமும் பெருமளவில் உதவும். பல்வேறு கலைகள் மற்றும் கைவினைத் தொழில் குறித்த அறிவை பாதுகாத்தல், ஊக்குவித்தல், மேம்படுத்துதல் ஆகிய நடவடிக்கைகளை சரியான நேரத்தில் மேற்கொள்ளுதல், உள்ளூர் நுகர்வோரை சென்றடைவது மற்றும் உலக அளவில் போட்டியிடுவதற்கான சிறந்த சந்தை உத்திகள் ஆகியவற்றை உருவாக்க வேண்டியது அவசியம் ஆகும். காஷ்மீர் கம்பளி பொருட்கள், பஞ்சாப் புல்காரி எம்ப்ராய்டரி வேலைப்பாடு, ராஜஸ்தான் பந்தேஜ் புடவைகள், ஆந்திர மாநிலம் போச்சம்பள்ளி புடவைகள், வங்க மாநிலத்தின் ஜம்தானி மற்றும் டான்ட் , உத்தரபிரதேசத்தின் பனாரஸ் பட்டுப்புடவைகள் ஆகியவை இந்தியாவில் தயாரிக்கப்படும் சில புகழ்பெற்ற உள்ளூர் துணித் தயாரிப்புகள் ஆகும். உலக அளவில் அடிக்கடி கண்காட்சிகள், பொருட்காட்சிகள், கலைக்காட்சிகள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம் இவற்றின் விற்பனைக்கான தளங்களை ஏற்படுத்தி இவற்றை வெளிநாடுகளில் பிரபலப்படுத்த முடியும். அதுமட்டுமின்றி, இக்காலத் தலைமுறையினர் ஆன்லைன் முறையில் பொருட்களை வாங்குவதில் அதிக ஆர்வம் கொண்டுள்ளனர். எனவே, இதைப் பயன்படுத்திக் கொண்டு ஆன்லைன் சந்தை நிறுவனங்களுடன் கூட்டாண்மையை ஏற்படுத்திக் கொண்டு இவை அனைத்தையும் சந்தைப்படுத்த வேண்டும். இளைஞர்கள் தங்களுக்கான வேலைவாய்ப்பை தாங்களே ஏற்படுத்திக்கொள்ள இது உதவும். இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் பொருட்களின் தரத்தை தொடர்ந்து கண்காணித்தல், இப்பொருட்களை விற்பனை செய்ய உதவுதல் ஆகிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்வதன் மூலம் ஊரகப்பகுதிகளில் வாழும் மக்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்கு இந்த நடவடிக்கைகள் உதவும். மக்கள் தொகையில் இளைஞர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதன் பயன்கள் சிறப்பான முறையில் அறுவடை செய்யப்படுவதை இவை உறுதி செய்யும். ●

# ஆஸ்துமா அலர்ஜி

– டாக்டர் ஜி. கமல்

**ஆஸ்துமா என்றால் என்ன?**

நீண்ட காலம் ஒவ்வாமை ஆளுகையினால், நுரையீரல் மற்றும் சுவாசக் குழாய்களில் ஏற்படும் மாற்றங்களின் விளைவாக இளைப்பு நோயே ஆஸ்துமா ஆகும்.

***1. ஆஸ்துமா அறிகுறிகள் என்ன?***

அதிகப்படியான மூச்சுத் திணறல் / இளைப்பு.

அதிகப்படியான இருமலால் ஏற்படும் தூக்கமின்மை.'

நெஞ்சில் ஏற்படும் வலி/இறுக்கம்

நுரையீரல் செயல்திறன் ஆய்வு முடிவுகளில் (பீக் ஃப்புளோ மீட்டர், ஸ்பைரோமீட்டர்) காணப்படும் வேறுபாடுகள்.

***2. ஆஸ்துமாவிற்கான காரணங்கள் என்ன?***

பரம்பரையும் ஒரு காரணமாகிறது அதாவது பெற்றோரோ அல்லது மூதாரையரோ அல்லது குடும்பத்தில் இரத்த சம்பந்தப்பட்ட உறவுகளில் யாருக்கேனும் இந்நோய் தாக்கியிருந்தால் அது மற்றவர்களுக்கும் ஏற்பட அதிக வாய்ப்புள்ளது.

ஒவ்வாமை அடுத்த காரணமாகிறது. அதாவது சுற்றுச்சூழலில் ஏற்படும் மாசுக்கள், தொழிற்சாலை கழிவுகள், நுரையீரல் மற்றும் சுவாச குழாய்களில் அதிக பாதிப்பை ஏற்படுத்துகிறது.

சார்ந்திருக்கும் வேலை மற்றும் அதன் சூழல், அதாவத குறிப்பிட்ட ஒரு சூழலில் (ஒவ்வாமை காரணிகள் உள்ளடங்கிய) நீண்ட நாட்கள் வேலையில் நீடித்திருப்பது உதாரணமாக பஞ்சாலை, அதிகப் புகை வெளியேறும் தொழிற்சாலைகள், சிமெண்ட் மற்றும் கல் உடைக்கும் ஆலைகள்.

***3. இந் நோய் தாக்குதலுக்கு குறிப்பிட்ட வயது வரம்பு ஏதேனும் உண்டா?***

ஆஸ்துமாவை குணப்படுத்த முடியுமா?

முறையான மருத்துவ சிகிச்சைகள் மூலம் இந் நோய்க் காண அறிகுறிகளையும், வீரியத்தையும் கட்டுப்படுத்தலாம். நோயின் தன்மையை பொறுத்து, சிகிச்சை மூலம் நோயாளிகள் இயல்பான வாழ்க்கையை பெறலாம். மேலும் சிகிச்சையை எடுத்துக் கொள்ளாததோ மற்றும் தொடராததோ இந் நோயின் வீரியத்தையும், விளைவுகளையும் அதிகப்படுத்தும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

மேலும் எனது மருத்துவ மையத்தில் இம்யுனோ தெரபி எனும் நவீன சிகிச்சை மூலம் அலர்ஜிகளை கண்டறிந்து அதற்கான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

***5. இந் நோய்க்கு ஆளானவர்கள் செய்ய வேண்டியவை.***

- தூசியடைந்த சூழலை கட்டாயம் தவிர்க்கவும்.
- படுக்கை மற்றும் தலையணை உறைகளை பயன்படுத்தவும். அடிக்கடி அவைகளை சுத்தம் செய்யவும்.
- செல்லப் பிராணிகளை வாரமொரு முறை குளிப்பாட்டவும்.
- ஆஸ்துமா குழந்தைகளை அந்தந்த வயதிற்கு ஏற்ற இயல்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள அனுமதிக்கவும்.
- ஆஸ்துமா பற்றி சுயவிழிப்புணர்வு மற்றும் குழந்தைகளுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் அவ்விழிப்புணர்வை புகட்டுதலும் அவசியம்.

குழந்தைகளின் விளையாட்டு பொருட்கள், படுக்கை விரிப்புகள் தரமான ஒவ்வாமை நீக்கும் சோப்புகள் மற்றும் பவுடர்க் கொண்டு சுத்தம் செய்யவும்.

தரை விரிப்புகளை சுத்தம் செய்யவும்.

ஒவ்வாமை பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நோய்க்கான ஒவ்வாமை காரணிகளை பகுத்தறிந்து கண்டு அறியலாம்.

சரியான இடைவெளியில் இந்நோயக்கான சிறப்பு மருத்துவரை அணுகவும்.

**டாக்டர் ஜி. கமல்,** தமிழ்நாடு ஆஸ்துமா அலர்ஜி ஆராய்ச்சி மையம், கரூர்



பாதிக்கப்பட்டவர்களை நம்மில் ஒருவராக நடத்தவும்.

உங்கள் வீட்டு செல்லப் பிராணிகளை படுக்கையிலோ, படுக்கையறையிலோ அனுமதிக்கக் கூடாது. பஞ்சு தலையணைகளை தவிர்க்கவும்.

ஆஸ்துமா பாதிக்கப்பட்டவர்கள் அருகிலும், வீட்டிலும் புகைபிடிப்பதை தவிர்க்கவும்.

மகரந்தம் பாசிகள், பூஞ்சைகள் இருக்கும் இடத்தில் வேலை பார்ப்பதையோ, விளையாடுவதையோ தவிர்க்கவும். (தோட்டங்கள், பூங்காக்கள்)

இந் நோய் தாக்கியவர்களை, குறிப்பாக குழந்தைகளை பயமுறுத்தலை தவிர்க்கவும்.

***6. ஆஸ்துமாவிற்கான தூண்டுதல்களை களைவது எப்படி?***

***மரம் மற்றும் களை மகரந்தம் :*** மிகச் சூடான வறட்சியான காற்று அதிகமான நாட்களில் மகரத் காற்றுடன் பயணம் செய்வதால் ஆஸ்துமா தூண்டுதல்களை தவிர்க்க வீட்டிற்குள்ளேயே இருப்பது நல்லது. மகரந்த அளவு குறைவாக இருக்கும் மாலை நேரங்களில் வெளியே செல்வது நல்லது. மகரந்தம் அதிகமாக உள்ள நாட்களில் சலவை துணிகளை வெளியே காய வைப்பதை தவிர்க்கவும்.

***சிதில் விதைகள், பாசிகள் மற்றும் பூஞ்சைகள் :*** இவைகளை கட்டுப்படுத்த சமையலறை மற்றும் கழிவறைகளை முடிந்தவரை சுத்தமாகவும், உலர்வாகவும் வைத்துக் கொள்ள வேண்டும். கீழே விழுந்த இலைகளின் மீது நடப்பது விளையாடுவது அல்லது தோட்ட வேலைகள் செய்வதை தவிர்க்க வேண்டும்.

***தூசிகள், தூசிப் பூச்சிகள் :*** உஷ்ண இடமான படுக்கை, குஷன் உள்ள பர்னிச்சர்கள், கார்பெட் மற்றும் பஞ்சடைந்த பொம்மைகள் முதலியவற்றில் தூசிகள், தூசிப் பூச்சிகள் அதிகம் காணப்படும். தலையணை மற்றும் படுக்கைகளுக்கு ஜிப் போட்ட பிளாஸ்டிக்கனால் ஆன தூசி எதிர்ப்பு உறைகளை பயன்படுத்துவதன் மூலமும் படுக்கை விரிப்புகளை வாரா வாரம் வெந்நீரில் துவைப்பதன் மூலமும், தூசி தங்காமல் பார்த்துக் கொள்ளலாம்.

***அதிகப்படியான புகை :*** அதிகப் புகை உண்டாகும் சமையலறை மற்றும் வேலை பார்க்கும் இடங்களில் எக்ஸாஸ்ட் ஃபேன் உள்ளவாறு அமைத்துக் கொள்வதன் மூலம் புகையற்ற சூழலை பெறலாம். தவிர்க்க முடியாத நேரங்களில் துணிகளையோ, மாஸ்க் கொண்டே மூக்கை மூடிக் கொள்ளலாம்.

***செல்லப்பிராணிகள் உரோமம் :*** அதிக உரோமம் உள்ள செல்லப் பிராணிகளை படுக்கைறையிலோ, வீட்டிற்குள்ளே, அனுமதிக்கக் கூடாது. ஆட்கள் புழங்கும் இடத்திற்கு வெளியில் இருக்கச் செய்யவும். வாரமொரு தடவை அதனை குளிப்பாட்டவும்.

***அதிகப்படியான பளு தூக்குதல், உடற்பயிற்சி மற்றும் ஏற்றங்கள் :*** மேற்கண்ட யாவும் நுரையீரல்களுக்குகான ஆக்ஸிஜன் தேவையை அதிகப்படுத்தும். எனவே இளைப்பு அதிகமாக வாய்ப்புள்ளதால் மேற்கண்டவற்றை தவிர்க்கவும்.

***மாறும் பருவகாலம் :*** குளிர்காலங்களில் பனியின் தாக்கமும், கோடை காலங்களில் மகரந்தத்தின் தாக்குதலும் அதிகமாக இருப்பதால் வெளியில் அதிக நேரம் இருப்பதை தவிர்க்கவும்.

***வாசை திரவியங்கள் :*** வாசை திரவியங்களின் நறுமணம் ஒவ்வாமையை உருவாக்க கூடியதால் அதனை பயன்படுத்துவதை தவிர்த்துக் கொள்ளவும்.

***சளி, மூக்கடைப்பு :*** சுகாதாரமான குடிநீர் மற்றும் சூழல் மூலம் இந்நோய்கள் தாக்காமல் தற்காத்துக் கொள்ள வேண்டும்.

***குளிர்ந்த நீர், காற்று மற்றும் பானங்கள்:*** மேற்கண்டவற்றை அறவே தவிர்த்தல் நல்லது. சளி, இருமல் போன்றவற்றிற்கு இவைகளும் ஒருவகை காரணங்களே.

***அதிகப்படியான மருந்துகளை உட் கொள்ளுதல் :*** இதயநோய் மருந்துகள் மற்றும் வலிநிவாரணிகள் பக்க விளைவுகள் உடையது என்பதால் இம்மாதிரியான சூழலில் சிறப்பு மருத்துவரை கட்டாயம் அணுகவும்.

***ரசாயன ஊக்கிகள் :*** சல்ஃபைட்ஸ் எனப்படும் ரசாயன ஊக்கி பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருளில் சேர்க்கப்படு ஒவ்வாமை என்பதால் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை தவிர்ப்பது நல்லது. ●

# செசல்ஸ் நாட்டின் பயணத்தின்போது ஊடகங்களுக்கு பிரதமர் அளித்த அறிக்கை

உங்களது கனிவான வார்த்தைகளுக்கு நன்றி அதிபர் மைக்கேல்.

உங்களது இந்த அருமையான விருந்தோம்பலும் அரவணைப்பும் என் மனதில் ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனது இந்த பயணம் மிக குறுகிய காலம் என்பதில் நான் மிகவும் வருந்துகிறேன். எனக்கு இங்கு நீண்ட நாட்கள் தங்க ஆசையாக உள்ளது. இந்த அழகான நாட்டிற்கு வருகை தரும் அனைவருக்குமே இந்த நாட்டைவிட்டு வெளியே செல்வது மிகவும் கடினமானது.

இது குறுகிய கால பயணமாக இருப்பினும் மிகுந்த நன்மை அளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

இந்திய பெருங்கடல் பகுதியில் உள்ள நாடுகளில் நான் பயணம் மேற்கொள்ளும் முதல் நாடு செசல்ஸ் என்பதில் எந்த ஆச்சரியமும் இல்லை.

நாங்கள் எங்கள் இந்தியப் பெருங்கடல் அருகில் உள்ள நட்பு நாடுகளில் ஒரு முக்கிய நாடாக செசல்ஸ் நாட்டை கருதுகிறோம்.

நமது உறவு தனித்தன்மை உடையது, மிகவும் சிறப்பானது. இருநாடுகளுக்கும் இடையே உள்ள நம்பிக்கையை அடிப்படையாக கொண்டு உருவாகியது நமது உறவு. மரியாதை சமத்துவத்தை அளிக்கக்கூடியது.

அது ஜனநாயகம் மற்றும் அனைவரையும் உள்ளடக்குதல் போன்ற நமது முறைகள் வலிமை சேர்க்கிறது. மேலும் இந்த உறவு, நம் மக்களின் முன்னேற்றம் மற்றும் இந்திய பெருங்கடல் பகுதியில் அமைதி மற்றும் வளமை ஆகிய பொதுவான நோக்கம் மூலம் பராமரிக்கப்படுகிறது.

செசல்ஸ் நாடு பெரிய அளவில் முன்னேற்றத்தை கண்டுள்ளது. அது சாதனைகள் புரிவதற்கு நாட்டின் அளவு ஒரு தடை இல்லை என்று உலகுக்கு எடுத்துரைத்துள்ளது.

எனது இந்த வருகையும் அதிபர் மைக்கேல் உடனான உரையாடலும் நமது உறவு மேலும் பலப்படவேண்டும் என்பதை வலியுறித்தியுள்ளது.

பாதுகாப்பு அளவிலான நமது கூட்டமைப்பு மிகவும் பலமாக இருக்கிறது. இது இந்திய பெருங்கடல் பகுதியில் கரையோரப் பாதுகாப்பை பலபடுத்த வேண்டும் என்ற நமது பொறுப்பை நிறைவேற்ற உதவியது.

பாதுகாப்புத் துறையை மேம்படுத்துவதற்காக செசல்ஸ் நாட்டுடன் கூட்டுறவு வைத்துக்கொள்வது எங்களுக்கு பெருமை அளிக்கிறது.

இன்று, நாங்கள் செசல்ஸ்க்கு இன்னும் ஒரு டோர்னியர் விமானத்தை கொடுக்கப் போகிறோம் என்று அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பின்னர், இன்று நான் கரையோர கண்காணிப்பு ராடார் திட்டத்தை தொடங்கிவைப்பதில் பெருமை அடைகிறேன். இது நமது கூட்டுறவிற்கான மற்றொரு சின்னமாக உள்ளது.

இந்த வழிமுறைகளை இதுபோன்ற அழகான தீவுகளையும் அதைச் சுற்றியுள்ள நீர்நிலைகளையும் பாதுகாக்க உதவும். மேலும், இந்தியப் பெருங்கடல் பகுதியின் பாதுகாப்பிற்கு செஷல்ஸ் தனது மகத்தான பங்களிப்பை தொடர்ந்து அளிக்கும்.

நீர்ப்பரப்பு ஆய்வில் இன்று நாம் செய்துள்ள ஒப்பந்தம் கடற்பகுதியில் உள்ள நமது ஒத்துழைப்பிற்கு ஒரு புதிய பரிமாணத்தை சேர்த்துள்ளது.

இந்தியா, மலைத்தீவு மற்றும் இலங்கை இடையேயான கடல் பாதுகாப்பு ஒத்துழைப்பில் செசல்ஸூம் விரைவில் ஒரு முழு பங்குதாரராக இருக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்.

இந்திய பெருங்கடல் பகுதியில் விரிவான



ஒத்துழைப்பின் முக்கியத்துவத்தை அதிபர் மைக்கேலும் நானும் வலியுறுத்தியுள்ளோம். இந்தியப் பெருங்கடல் ரிம் கூட்டமைப்பிலான நமது ஒத்துழைப்பு மேலும் வலுவடையவேண்டும் என்று நாங்கள் உறுதி ஏற்றுள்ளோம்.

நம் இருதரப்பு உறவிற்கு நமது வளர்ச்சிக்கான ஒத்துழைப்பும் முக்கிய தூணாக உள்ளது.

இந்த தீவின் உள்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக நாம் இன்று செய்துள்ள ஒப்பந்தம் நமது கூட்டுறவிற்கு ஒரு வலுவான ஊக்கத்தை அளிக்கிறது.

செசல்ஸ் நாட்டின் மனித வள மேம்பாடு மற்றும் திறன் வளர்ச்சியில் பங்கு அளிப்பது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கிறது. உண்மையில், இந்த துறையில் இந்தியாவின் உதவியை பெற்ற நாடுகளில் செசல்ஸ் மிக முக்கியமானது. எதிர்காலத்தில் இதனை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம்.

கடல் வள பொருளாதாரத்தில் செசல்ஸ் முதன்மை வகிக்கிறது. வரும் காலத்தில் எதிர்கொள்ள வேண்டிய சாவல்களை சமாளிக்க கடல் பொருளாதாரம் மிகவும் முக்கியம் என்பதை நாமும் நம்புகிறோம்.

கடல் வள பொருளாதாரத்தில் நமது ஒத்துழைப்பை விரிவு படுத்த கூட்டு செயல்பாட்டுக் குழு ஒன்றை அமைக்க இன்று அதிபர் மைக்கேலும் நானும் ஒப்புக்கொண்டுள்ளோம்.

இந்த ஒத்துழைப்பு கடல் சுற்றுச்சூழல் மற்றும் வளங்கள் பற்றிய நமது புரிதலை அதிகரிக்கும். கடல் வளங்களை நிலையான மற்றும் சீரான முறையில் பயன்படுத்த புதிய சாத்தியங்களையும் திறமைகளையும் நம்மால் மேம்படுத்த முடியும்.

அறிவியல் மற்றும் பொருளாதார துறையில் உள்ள நமது ஒத்துழைப்பை மேம்படுத்த இது முக்கியமாகும்.

வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளை விரிவாக்க வலியுறுத்தியுள்ளோம். இதை எளிதில் அடைய முடியும் என்று நம்பிக்கை இருக்கிறது. செசல்ஸ் நாடு குறிப்பாக தகவல் தொழில்நுட்பம், சேவைகள் துறையில் முக்கிய பங்கு வகிக்கிறது.

மானியமாகக் கொடுக்கப்பட்டுள்ள *75* மில்லியன் டாலர்களை செசல்ஸ் விரைவில் பயன்படுத்தும் என்று நான் நம்பிக்கை தெரிவித்துள்ளேன்.

நம் மக்கள் இடையே உள்ள நெருக்கமான மற்றும் ஆழமான உறவுகளை நாங்கள் மதிக்கிறோம். கடந்த டிசம்பர் மாதம் செசல்ஸ் இந்தியாவிற்கு நேரடி விமான சேவை துவக்கியுள்ளதை நான் வரவேற்றேன்.

செசல்ஸ் குடிமக்களுக்கு மூன்று மாத இலவச விசா வழங்க நாங்கள் முடிவெடுத்துள்ளோம். மேலும் செசல்ஸ் மக்கள் வருகையின்போது விசா அளிக்கும் வசதியை நாங்கள் வழங்க உள்ளோம்.

சர்வதேச அமைப்புகளில் செசல்ஸ் நாடு இந்தியாவுக்கு அளித்து வரும் ஆதரவிற்காக நான் அதிபர் மைக்கேலுக்கு நன்றி தெரிவித்தேன். ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையில் இந்தியா நிரந்தர உறுப்பினராவதற்கு ஒப்புதல் அளித்துள்ளதும் இதில் அடங்கும்.

பருவநிலை மாற்றம் குறித்த கருத்துக்களில் நமக்கு ஒருமித்த எண்ணங்கள் பிரதிபலித்துவருகிறது. அதன் தாக்கத்தால் பாதிக்கப்படும் இரு நாடுகள் நாம். மேலும், நாம் இதை எதிர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம்.

தேசிய அளவில் வலுவான நடவடிக்கையை நாம் எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். நாங்கள் பருவநிலை மாற்றத்தை எதிர்த்து ஒரு வலுவான முயற்சியை உலகம் குறிப்பாக வளர்ந்த நாடுகள் எடுக்க அழைப்பு விடுத்துள்ளோம்.

நமது உறவு நட்பு மற்றும் கூட்டமைப்புக்கு ஒரு நல்ல உதாரணம் ஆகும். இந்தியா இந்த உறவை வெகுவாக மதிக்கும்.

அதிபர் மைக்கேல் இந்தியாவிற்கு விரைவில் வருகை தருவார் என்று காத்திருக்கிறோம்.

அடுத்த இதழில்...

**சுற்றுலாத் துறை பற்றிய சிறப்பு கட்டுரைகள் இடம்பெறும்**

# இந்திரதனுஷ் இயக்கத்தின் ஊடக கருத்தரங்கு அமைச்சர் ஜே. பி. நட்டா துவக்கி வைத்தார்

இந்திரதனுஷ் இயக்கத்திற்கான பன்முக ஊடக கருத்தரங்கை மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் திரு. ஜே.பி. நட்டா இன்று புதுதில்லியில் துவக்கி வைத்தார். தொண்டை அழற்சி, இளம்பிள்ளை வாதம், காசநோய், கக்குவான் இருமல், தசை இறுக்குநோய், மஞ்சள் காமாலை, தட்டம்மை ஆகிய நோய்களுக்குத் தடுப்பூசி போட்டுக் கொள்வதை இடையில் நிறுத்திய அல்லது தடுப்பூசியே போடாத குழந்தைகளுக்கு 2020க்குள் தடுப்பூசி மருந்து அளிப்பதே வானவில்லின் ஏழு வண்ணங்களைக் குறிக்கும் இந்த இயக்கத்தின் நோக்கமாகும்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் தெரிவித்ததாவது:

அரசு சாரா அமைப்புகள், வளர்ச்சியில் பங்குதாரர்கள், மாநிலங்கள், அரசியல் தலைவர்கள், ஊடகங்கள் ஆகியோர் உட்பட பல்வேறு பங்குதாரர்கள் தடுக்கக்கூடிய நோய்களுக்கு எதிராக ஒவ்வொரு குழந்தைக்கும் தடுப்பூசி போடுவது குறித்த விழிப்புணர்வை உருவாக்குவது அவசியமாகும்.

அனைத்து குழந்தைகளுக்கும் நோய் தடுப்பின் முக்கியத்துவம் குறித்து பேசிய அமைச்சர் நாட்டின் முக்கிய சொத்தாகக் கருதப்படும் குழந்தைகள் ஆரோக்கியமாக இல்லை என்றால் அந்த தேசமும் ஆரோக்கியமாக இருக்காது. மருந்துகளால் தடுக்கக்கூடிய அனைத்து நோய்களுக்கும் எதிராக அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி அளித்தால் நாம் இதனை எளிதில் அடையலாம். இதனை இலக்காக கொண்டுள்ள இந்திரதனுஷ் இயக்கம் குறித்து பேசிய அமைச்சர் 20092013 வரை நோய் தடுப்பு மருந்து பயன்பாடு 61 சதவீதத்தில் இருந்து 65 சதவீதமாக உயர்ந்துள்ளது. 2020க்குள் இந்த இயக்கம் அனைத்து குழந்தைகளுக்கும் பயன்படும் வகையில் முழு இலக்கை அடைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக 201 மாவட்டங்கள் இத்திட்டத்தை அமலாக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இந்த இயக்கத்தை வெற்றிகரமாகச் செய்ய போலியோ ஒழிப்பு முறைகளில் இருந்து கற்றுக்கொள்ளலாம். தகவல், கல்வி தொடர்பு கருத்தரங்கின் முக்கியத்துவத்தையும் இலக்கையும் குறித்து பேசிய அமைச்சர் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் குழந்தைகளுக்கு தொடர்ச்சியாக தடுப்பூசி போடுவதை நிறுத்துவது அறியாமையால் அல்லது தடுப்பூசி குறித்த அச்சத்தினால் என்று ஆய்வு அறிக்கை தெரிவிக்கிறது. இவை இரண்டுமே கருத்தரங்குகள் மூலம் சரிசெய்யப்படும். அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி அளிக்கப்படும் வகையில் பெற்றோர்களும் பாதுகாலவர்களும் இந்த இயக்கத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

ஊடகம் ஒரு சக்தி வாய்ந்த கருவி. இந்த இயக்கத்தை வெற்றிகரமாக பல்வேறு கட்டங்களில் அமலாக்குவதில் ஊடகங்கள் அமைச்சகத்திற்கு வழிகாட்டியாக இருக்கும். இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சி குறித்து பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்ததாவது:

“தடுப்பூசியால் எளிதில் தடுக்கக்கூடிய ஏழு உயிர் கொல்லி நோய்களிடம் இருந்து குழந்தைகளைப் பாதுகாக்க மத்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் தேசிய அளவில் இந்திரதனுஷ் இயக்கத்தை துவக்கி உள்ளது எனக்கு மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்த இயக்கத்திற்காக அமைச்சகத்தை பாராட்டுகிறேன். இது வெற்றியடைய எனது நல் வாழ்த்துகள். அனைத்து குழந்தைகளும் முழுமையாக தேவையான அனைத்து தடுப்பூசிகளை போட்டுக் கொண்டுள்ளனர் என்பதை பெற்றோர்களும் பாதுகாவலர்களும் உறுதி செய்ய வேண்டும்.

இந்தியாவின் யுனிசெப் பிரதிநிதி திரு. லூயி ஜார்ஜ் அர்சினா, உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி டாக்டர். நட்டா மேனாப்தே, ரோட்டரி இந்தியா தேசிய போலியோ பிளஸ் குழுவின் தலைவர் திரு. தீபக் கப்பூர், இந்தியாவின் பொது சுகாதார அமைப்பு நோய் தடுப்பிற்கான தொழில்நுட்ப உதவி பிரிவு முனைவர் லட்சுமி நாராயணன், சுகாதார சேவைகள் தலைமை இயக்குனர் முனைவர் ஜகதீஷ் பிரசாத், சுகாதார அமைச்சகத்தின் உயர் அதிகாரிகள் பல்வேறு மாநிலங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.